
# சமாதான நோக்கு

மார்ச்-யூன் 2002 (இரு இதழ் ஒன்றாக)
குரல் 2, நோக்கு 2, 3



சமாதானத்துக்கான பிரார்த்தனை

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA)



*முற்றத்து மணல்களில்..........*

.....

....

அகதிமுகாம்களில் முடங்கிக்கிடந்த நாம் எமது முற்றங்களில் ஒன்றுசேர்ந்து விளையாடுவோம். இவை பற்றிய மேற்கூறிய கவிதை வரிகளைப் பூரணப்படுத்துங்கள். முதலாம் பரிசு ரூ 500.00 மற்றும் புத்தகங்களும், ஐந்தாமிடம் வரை புத்தகப் பொதிகளும் வழங்கப்படும். சிறந்த படைப்பு அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

(சென்ற இதழில் இப்பகுதிக்காக வந்தடைந்த கவிதைகள் உள்ளே.....)

"சமாதான நோக்கு" மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் முரண்பாடு மற்றும் சமாதான ஆய்வுப் பிரிவின் வெளியீடு. மா.கொ.நி பொதுமக்கள் கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பும், அதனை பலப்படுத்தலும் அவசியமென கருதுகின்றது. முரண்பாடு மற்றும் சமாதான ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மா.கொ. நி ஆட்சிமுறை மற்றும் மோதல் தவிர்ப்புக் குறித்தான பிரச்சினைகளில் அவதானம் செலுத்துகிறது. "சமாதான நோக்கு" வெளியீடு இன நெருக்கடியைத் தீர்க்க பங்களிப்புச் செய்யும் பிரச்சினைகள் குறித்தும், பொது மக்கள் மத்தியில் ஒரு கூட்டான செயற்பாட்டை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டும் செயற்படுகின்றது.

மேலதிக விபரங்களுக்கு...

ஒருங்கிணைப்பாளர்,
முரண்பாடு மற்றும் சமாதான ஆய்வுப் பிரிவு,
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்,
32/3, பிளவர் வீதி, கொழும்பு- 07
தொ.பே:- 94-1-565304/06, பக்ஸ் :- 94-74-714460,
ஈ-மெயில :- cpa@sri.lanka.net

**முகப்பு படம் : சிறியந்த வல்பொல**

குரல் ௨, நோக்கு ௨,3

# சமாதான நோக்கு

மார்ச் - யூன் ௨00௨

32/3, பிளவர் வீதி, கொழும்பு- 07.
தொ.பே : 94-1-565304/6, பக்ஸ் : 94-74-714460, ஈ-மெயில் : cpa@sri.lanka.net

## நம்பிக்கையின்மையை அகற்ற வேண்டும் !

சமாதானச் செயல்முறை வலுவிழந்து வருகின்றதென்ற அபிப்பிராயம் அதிகரித்துவருகின்றது. இரு இனங்களையும் சேர்ந்த சிவிலியன்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்தின்மூலம் பிரத்தியட்சமான அனுகூலங்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்பதை மறுக்க முடியாது. அத்துடன் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் கணிசமான அளவினர் திரும்பி வந்துள்ளனர். இரு தரப்பிலும் போக்குவரத்துகள் முன்பு எப்பொழுதையும் விட அதிகமாக இடம்பெற்றுவருகின்றன ஆயினும் போர் காரணமான உண்மைநிலை மற்றும் உளவியல் மன அதிர்ச்சி வடுக்கள் ஆறிவருகின்றபோதிலும் சமாதான செயல்முறை வலுவிழந்து வருகின்றதென்ற கவலை உருவாகியிருப்பது உண்மையாகும். சமாதானச் செயல்முறையின் மீது நிச்சயமின்மையென்றும் கருமேகம் கவிழ்ந்துள்ளதென்பதை மறுக்க முடியாது.

இதற்கான காரணம் பெரிதும் இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் தற்போதைய போர் நிறுத்த ஒப்பந்தத்தை உரைசெய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் போன்றவை சம்பந்தமாகக் கொண்டுள்ள கருத்துணர்வுகளில் சில வேறுபாடுகள் இருப்பதேயாகும். பிரத்தியேகமாக, போர் நிறுத்த உடன்படிக்கை குறித்த பிரச்சினைகள் பொதுக்கட்டிடங்கள், பாடசாலைகள் மற்றும் வணக்கஸ்தலங்களிலிருந்து பாதுகாப்புப்படையினர் கட்டாயமாக வெளியேறுவது குறித்தும், எல்ரீரீஈ அமைப்பு சிறுவர்களைப் பலவந்தமாக ஆட்சேர்ப்புச் செய்வது, ஆட்கடத்தல் மற்றும் கப்பம் பெறுதல் இருதரப்பினரும் கருத்துவேறுபாடுகளக்குப் பதிலளிக்கும் விதத்தில் பயமுறுத்தல்களில் ஈடுபடுவது மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை மீறுவது போன்றவையாகும்.

மேலும், சமாதானச் செயல்முறைக்கு இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்துக்கும், எல்ரீரீஈ அமைப்புக்குமிடையில் இடம்பெறவேண்டிய நேரடிப் பேச்சுவார்த்தைகள் மற்றும் இனப்பிரச்சினைக்கு ஒரு நீதியான, ஒப்புரவான அரசியல் தீர்வைக் காண்பதற்கான பேச்சவார்த்தைகள் என்பவை ஆரம்பமாக வேண்டியதேவையும் உள்ளது. தாய்லாந்தில் இடம்பெறவுள்ள உத்தேச பேச்சுவார்த்தைகள் குறித்த பிரச்சினைகளுள் எல்ரீரீஈ மீதான தடையை நீக்கும் காலம், நேரடிப்பேச்சுவார்த்தைகளுக்கான திகதி நிர்ணயம், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான நிகழ்ச்சி நிரல், நோர்வேயின் குறித்துரைப்பான பாத்திரம், உத்தேச எல்ரீரீஈ தலைமையிலான வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகசபையின் தன்மையும், தத்துவங்களும், மற்றும் இனப்பிரச்சினைக்குள் அனைத்துமடங்கும், நிரந்திர அரசியல் தீர்வு சம்பந்தமான பொருளார்ந்த பிரச்சினைகள் என்பவை உள்ளடங்கும்.

இருதரப்பினரும் சமாதானத்தைப் பற்றிப்பேசும் அதேவேளையில் யுத்தத்துக்கே தயார் செய்துவருகின்றனரென்ற

## மாற்றுக் கண்ணோட்டம்

அதிகரித்த பயமும் சிங்கள, தமிழ் மக்கள் பிரிவகளிடையே நிலவிருகின்றது. கடந்தகாலத்தில் போர்நிறுத்தங்களும், சமாதானப் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றபோதெல்லாம் இத்தகைய பீதிகளும் நிலவியபோதிலும் அரசாங்கம் இந்த வேளையில் வாஷிங்டன், புதுடில்லி மற்றும் பீஜிங்குடன் இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் உறவுகள் குறித்து தமிழ் மக்களிடையே சந்தேகங்கள் எழுந்துள்ளன. இதுபோலவே, எல்ரீரீஈ அளணியினரின் அதிகரித்த ஆட்சேர்ப்பு, பயிற்சி, இயக்கம் மற்றும் வடக்கு-கிழக்கில் எல்ரீரீஈ தமிழ் மக்களைப் பெருமளவில் திரட்டிவருவது போன்ற விடயங்கள் சிங்கள மக்கள் பிரிவினரிடையே எல்ரீரீஈ இயக்கமும் யுத்தத்துக்குத் தயாராகியும், ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வருகின்றதென்ற பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சூழ்நிலையின் மூலகாரணங்கள் அகற்றப்படுதல் வேண்டும். இதை விரைவாக செயல்படுத்த போர்நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துதல், சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை மதித்துச் செயற்படுதல் மற்றும் எல்ரீரீஈ அமைப்புக்கும் அரசாங்கத்துக்குமிடையில் இடைக்கால ஏற்பாடுகள் மற்றும் அடிப்படை அரசியல் முக்கிய பிரச்சினைகள் குறித்த பேச்சுவார்த்தைகளை விரைவாக ஆரம்பித்தல் என்பவற்றின் மூலமாக மாத்திரமே செய்யமுடியும். நாம் மென்மேலும் தாமதிக்கையில் வளரும் பீதிகளும், பயங்களும் உண்மையாகும் சாத்தியமும் அதிகரிக்கும்.

இந்த நிகழ்வுத்தொடர்பில், எல்ரீரீஈ அமைப்புடன் நேரடிப் பேச்சுவார்த்தைகள் மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கும் முயற்சியாக சமாதானச் செயலகத்தின் அங்கத்தவர்கள் கிளிநொச்சிக்குச் சமீபத்தில் விஜயம் மேற்கொண்டது காலத்துக்கேற்றதும் வரவேற்கத்தக்கதுமாகும். தாய்லாந்தில் விதிமுறையான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க முன்னர் இலங்கை அரசாங்கத்துக்கும், எல்ரீரீஈ அமைப்புக்குமிடையில் அடிக்கடி நேரடித்தொடர்புகள் இடம்பெற வேண்டுமென்று நாம் வலியுறுத்துகிறோம். சமாதானச் செயல்முறையைத் தடம்புரளாமல் பார்த்துக்கொள்ளும் முயற்சியில் நோர்வே அரசாங்கமும், பிரதி வெளிநாட்டமைச்சர் ஹெல்கெசன் தலைமையிலான அதன் குழுவும் தொடர்முயற்சிகளில் ஈடுபட்டு வருவதையும் நாம் வரவேற்கிறோம்.

மெதுவாக விரைய வேண்டிய தேவையை நாம் அங்கீகரிக்கையில், சமாதானச் செயல்முறையில் தேக்கம் ஏற்படுவதை எவ்வகையிலும் தடுத்தாகவேண்டும். மற்றவர்களுக்கு மிரட்சி ஏற்படுத்துவது எமது நோக்கமல்ல. மாறாக அது சமாதானச் செயல்முறை சீர்குலைந்து, விடாதிருப்பதை உறுதி செய்யும் வகையில் நேரகாலத்தோடு எச்சரிக்கை செய்வதன் மூலம் பரிகார நடவடிக்கைகளை எடுக்க வைப்பதாகும்.

ஆசிரியர் : பாக்கியநாதன் விஜயசாந்தன்

ஆசிரியர் குழு : கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து
கேதீஸ்வரன் லோகநாதன்
சுனந்த தேசப்பிரிய
ரோஹான் எதிரிசிங்க

(இதிலுள்ள கருத்துக்கள் மா.கொ.நி நிலையத்தினையோ, அதன் பணிப்பாளர் சபையினையோ பிரதிபலிக்கும் கருத்தாகாது.



"துன்பகரமான சம்பவத்தின் பின்னரும்கூட சமாதானம் வரவேண்டும் என்ற எண்ணத்துடனும், பிரார்த்தனையுடனும்தான் வட மாகாண முஸ்லீம்கள் வாழந்துகொண்டிருக்கிறார்கள்." 03

மௌலவி சுப்யான்

08 "சமாதானச் செயல்முறையை வலுப்படுத்தலும் : வாய்ப்புகளும், சவால்களும்"

யாழ்ப்பாணத்துக் கல்விமான்களுடன் மா.கொ.நி உரையாடல்





"திம்புக்கோட்பாடுகளில் காணப்படும் தமிழ்தேசியம் மற்றும் சுயநிர்ணய உரிமையென்பது தமிழ் அரசியல் சமூகமும், மக்கள் சமூகமும் தமது மனக்குறைகளைத் தீர்க்கவும், தமது அபிலாசைகளை ஈட்டிக்கொள்ளவும் உபயோகிக்கும் வாதமாகும்." 11

கேதீஸ்வரன் லோகநாதன்

14 "சமாதானத்துக்கான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அரசும், புலிகளும், நடுநிலையானதான நோர்வேயும் மட்டுமன்றி இவ்விவகாரத்தில் செல்வாக்கு செலுத்தக் கூடிய அனைத்துலக தரப்பினாரும் மலையக மக்களின் கோரிக்கையின்பால் ஈர்க்கப்படல் வேண்டும்."

பி.பொன்னுசாமி

"யுத்தம் முடிவுற்று சமாதானம் ஏற்படும் காலகட்டங்களில் பெண்கள் எதிர்நோக்கும் மெய்யுறுதிப்பாடு, பொறுப்பேற்றல், சமரசம் என்பவையின் மீளாய்வு இடம்பெற்றது...." 17

பவானி லோகநாதன்

20 "இது அரசுக்கும், புலிகளுக்குமிடையில் உள்ள பிரச்சினை பற்றிய பேச்சல்ல. இலங்கையின் தமிழ் மக்களுக்கு அரசியல் சட்டத்தில் என்ன இடம் அளிக்கவேண்டுமென்பது பற்றி பேச்சாகும்."

பேராசிரியர் கா.சிவத்தம்பி



"பிள்ளைகளை, இளைஞர்களை, ஆண்களை, உறவினர்களை, நண்பர்களை இழந்தும்... வீடுகள், சொத்துக்கள் அழிவதை கண்டும், இடம்பெயர்வுகளால் பிரிந்து வாழ்ந்து வந்த சொந்த இடங்களை காண முடியாமலும் மனப்பாதிப்படைந்திருக்கின்ற நம் மக்களுக்கு......" 22

மனோ வைத்திய நிபுணர் டாக்டர் தயா சோமசுந்திரம்

23 "மறுப்பின் மறுப்பை நேரடியாக முன்வைக்க முடியாத ஒரு சூழல் அல்லது ஒரு போக்கு நம்மிடையே உருவாக்கப்பட்டிருக்கிறது."

முருகேசு - வல்லிபுரம்



'பயங்கரவாதம் குறித்த வரைவிலக்கணத்தை நோக்கி...." 29

சஞ்சன ஹெத்தொட்டுவ


35 "அபிப்பிராய வாக்கெடுப்பு நிறுவனங்களையெல்லாம் ஏமாற்றுமளவிற்கு அமைந்த தீவிர வலதுசாரிக்கட்சியான தேசிய முன்னணி யின் வெற்றி பிரான்ஸின் அரசியலில் பேரதிர்வையும், பல வருடங்களாக கண்டிராத அளவிலான மக்கள் எழுச்சி ஆர்ப்பாட்டங்களையும் உருவாக்கியிருந்தது."

வாசுதேவன்



"வாழ்க்கையில் நம்பிக்கை, அடையாளம் எப்போதுமே தன்னை ஒன்றுக்கொன்று முந்திக் கொள்வதாக அறிவிக்கிறது. நாம் அதற்குள் இயங்காமல் வேறென்ன செய்ய முடியும்?" 39

எச்.பீர்முஹம்மது



"துன்பகரமான சம்பவத்தின் பின்னரும் கூட சமாதானம் வரவேண்டும் என்ற எண்ணத்துடனும், பிரார்த்தனையுடனும்தான் வட மாகாண முஸ்லீம்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்"



மௌலவி சுப்யான்

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டிருக்கும் முஸ்லீம்களின் மனப்பாங்கு யுத்தத்திற்கு எதிரானதே!

வடக்கு முஸ்லீம்களின் உரிமைகளுக்கான அமைப்பின் செயலாளர்

# மௌலவி சுப்யானுடன்

ஒரு நேர்காணல்....

- *இன்னுமொரு சமாதான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இச்சூழ்நிலையில் வடக்கு முஸ்லீம்களின் நிலைப்பாடு என்ன?*

இனமுரண்பாடுகள் உருவாகி, அது ஆயுதப்போராட்டமாக மாறி யுத்தத்தை தோற்றுவித்த காலகட்டங்கள் வரை முஸ்லீம்களைப் பொறுத்தவரையில் இந்நாட்டில் சகல இன மக்களும் உரிமையோடு, ஐக்கியமாக, பரஸ்பர புரிந்துணர்வோடு வாழவேண்டும் என்ற மனப்பாங்குடன்தான் இருக்கிறார்கள். ஏனெனில் சாந்தி, சமாதானத்தை வலியுறுத்தும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டிருக்கும் முஸ்லீம்களின் மனப்பாங்கு யுத்தத்துக்கு எதிரானதாகத்தான் இருக்க முடியும். அதேபோன்றுதான் 90ல் வட மாகாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதென்ற அந்த துன்பகரமான சம்பவத்தின் பின்னரும் கூட சமாதானம் வரவேண்டும் என்ற எண்ணத்துடனும், பிரார்த்தனையுடனும்தான் வட மாகாண முஸ்லீம்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

- *வடக்கு முஸ்லீம்களுக்கும், கிழக்கு முஸ்லீம்களுக்கும் இடையிலான அரசியல் வேறுபாடுகள் சமாதானச் செயற்பாடுகளில் என்னவிதமான முரண்பாடுகளைத் தோற்றுவிக்குமென நினைக்கிறீர்கள்?*

பொதுவாக, முஸ்லீம்களுடைய பிரச்சினைகளை வடகிழக்கு பிரச்சினைகளாக நோக்கப்பட்டாலும் கூட வட மாகாணத்தில் முஸ்லீம்களின் சனத்தொகை பரம்பல் 5 வீதமாகவும், கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம்களின் சனத்தொகை பரம்பல் கிட்டத்தட்ட 37 வீதமானதாகவும் இருவேறு பரம்பல் அலகுகளாக காணப்படுகிறது. சனத்தொகை பரம்பல் அடிப்படையிலும், பிரதேச அடிப்படையிலுமாக அரசியல் அபிலாசைகள் வித்தியாசப்படுகின்றது. வட மாகாண முஸ்லீம்கள் தங்களுடைய உரிமைகளை தமிழ்மக்களுடன் இணைந்து செல்லக்கூடிய போக்கிலேயே பெற விரும்புகின்றனர். அதாவது, முரண்பாடுகளைத் தவிர்த்து இணக்கப்பாட்டோடு, தன்மானத்தோடு, தங்களின் சமய சமூக கலாசார தனித்துவத்தோடு வாழவேண்டும் என்றே விரும்புகின்றார்கள். கிழக்கு மாகாண முஸ்லீம்களைப் பொறுத்தவரையிலே கிழக்கில் தாங்கள் 37 வீதமாக இருப்பதன் காரணத்தினால் தங்களின் அரசியல் தனித்துவத்தோடு வாழவே விரும்புகின்றார்கள். இந்த எண்ணப்போக்கிலேயே வட மாகாண முஸ்லீம்கள், கிழக்கு மாகாண முஸ்லீம்கள் என்று வித்தியாசங்கள் இருக்கின்றன.

ஒட்டுமொத்தமாக வடக்குகிழக்கு முஸ்லீம்களின் பிரச்சினையென்று பார்க்கும்பொழுதோ, அல்லது வடக்கு-கிழக்கு இணைப்பு சந்தர்ப்பத்தின் பொழுதோ கிழக்கு மாகாண முஸ்லீம்களுக்குள் வட மாகாண முஸ்லீம்கள் அமுக்கப்பட்டு பலவீனமானவர்களாகிவிடுவோம் என்ற அச்சம் வட மாகாண முஸ்லீம்களுக்கு இருக்கிறது. கிழக்கு முஸ்லீம்களைப் பொறுத்தவரையில் கிழக்கு மாகாணத்தில் 37 வீதமாக இருக்கும் சனத்தொகை பரம்பல் வடக்கு-கிழக்கு இணையும் சந்தர்ப்பத்தில் 18 வீதமாக குறைந்து பலவீனப்பட்டு, சகல பக்கங்களிலும் பாதிக்கப்பட்டு விடுவோம் என்ற அச்சம் அவர்களுக்கும் இருக்கிறது. இங்கே பிரச்சினைகளை இருவேறு தனித்துவமாக முறையிலேயே நோக்க வேண்டிய தேவையிருக்கிறது. வட மாகாண முஸ்லீம்களைப் பொறுத்தவரையில் தங்களுடைய அபிலாசைகள் ஒரு தனித்துவமான கண்ணோட்டத்தோடு நோக்கப்பட்டு தீர்க்கப்படவேண்டும் என்றும், தங்களுடைய அரசியல் அபிலாசைகளை வடக்கிலே பெரும்பான்மையாக இருக்கும் தமிழ்மக்கள் நிறைவேற்றவேண்டும், அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கையுடன்தான் வட மாகாண முஸ்லீம்கள் இருக்கிறார்கள். ஏனெனில் கடந்த வரலாற்று காலங்களிலும் அப்படித்தான் இருந்தது. அதாவது எந்தவொரு பிரச்சினையையும் தமிழ் தரப்பிலேயே இருக்கக்கூடிய அரசியல் தலைமைத்துவங்களோடு பேசி, சில இடங்களில் சலுகை அடிப்படையில் அதனைப்பெற்று வாழக்கூடிய சூழ்நிலைகள் இருந்ததினால் எதிர்காலத்திலும் அது சாத்தியமாகும் என்ற நம்பிக்கை வட மாகாண முஸ்லீம்களுக்கு இருக்கிறது.

- *தமிழ்த்தேசியவாதம் உச்ச கட்டத்தை அடைந்து வடக்கில் இருந்து முஸ்லீம்கள் விரட்டப்பட்ட சூழ்நிலைகளுக்குப் பின்னாலும் முஸ்லீம்களுக்கு இடையில் இருவேறு பகுதிகளான அரசியல் அபிலாசைகள் தென்படுவதால் இந்த மூன்று பக்கங்களிலான கோரிக்கைகளின் எதிர்கால இணக்கப்பாடுகள் பற்றி?*

காணப்பட்டிருக்க வேண்டிய இணக்கப்பாடுகள் காலம் கடந்தவையாகிவிட்டது. வடக்கு முஸ்லீம்கள், கிழக்கு முஸ்லீம்கள் என முஸ்லீம்களுக்கு இடையில் பலவிதமான வேறுபாடுகளின் தோற்றங்கள் இன்று காணக்கூடியதாக இருக்கிறது. தந்தை செல்வநாயகம் அவர்களின் தமிழ்த்தேசிய போராட்ட காலத்தில் இணைந்திருந்த முஸ்லீம்கள், பின்னர் தமிழ்த்தலைமைகளின் நற்றற்ற போக்குக்காரணமாக தமிழ் - முஸ்லீம் மக்களுக்கிடையில் பிளவுகள் ஏற்படத்தொடங்கியது. தற்போது தமிழ்த்தேசியவாதம் தமிழர் தேசியவாதமாக உருவாகி, அது சுயநிர்ண உரிமை, பாரம்பரிய பூமி, தமிழ்த்தேசியமென உருவெடுத்து தனித் தமிழர் என்ற தனிக்கோட்பாட்டுக்குள் உள்ளடக்கப்பட்டு போராட்டமாக உருவாகியிருக்கிறது. மொழி, பாரம்பரிய பூமி என்பவற்றால் வடக்குக்கிழக்கு தமிழர்களோடு ஒன்றுபட்ட முஸ்லீம்கள் தமிழ்த்தேசிய போராட்டத்தோடு இணைக்கப்பட்டிருந்தால் குறுகிய காலத்தில் வெற்றிவாய்ப்பை பெறுவதற்கான வாய்ப்பிருந்திருக்கும், தற்போதைய முரண்பாடுகளைத் தவிர்க்கவும் வாய்ப்பிருந்திருக்கும். இந்த தனித் தமிழ்த்தேசிய சூழ்நிலைகளின் அச்சந்தான் எதிர்காலத்தில் முஸ்லீம்களை பல்வேறுபட்ட விதத்தில் சிந்திக்க தூண்டலாம், தூண்டுகிறது.

- *இவ்வாறான சந்தர்ப்பங்களில் முஸ்லீம் தலைமைத்துவங்கள், பிரதிநிதித்துவங்கள் எவ்வாறு செயற்பட்டன? எவ்வாறு செயற்பட்டிருக்க வேண்டும் என கருதுகிறீர்கள்?*

தமிழ் - முஸ்லீம் மக்களின் முறிவுகளின் மறுபக்க எழுச்சிகள்தான் முஸ்லீம் தனித்துவ போக்குக்கு காரணமாக அமைந்திருக்கிறது. தமிழர்களின் முஸ்லீம் விரோத போக்கே முஸ்லீம்களின் அரசியல் எழுச்சிக்கும், முஸ்லீம் தனித்துப் போக்குக்கும் மூலகாரணமாக அமைந்தது. இதை முஸ்லீம் தலைமைத்துவங்கள் ஆரம்பத்தில் நன்றாக பயன்படுத்தினார்கள். பின்னர் தங்கள் தலைமைத்துவங்களை பாதுகாப்பதற்காக விட்டுக்கொடுத்து செயற்படாமல் தனிப்போக்குகளை வளர்க்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகியுள்ளார்கள். இது எதிர்காலத்தில் தமிழ் - முஸ்லீம் மக்களுக்கிடையில் ஒற்றுமையை வளர்க்கும் ஆரோக்கியமான ஒன்றாக அமைய வாய்ப்பிருப்பதாக தெரியவில்லை.

- *வட மாகாண முஸ்லீம்கள் தொடர்பாக, தற்போதைய முஸ்லீம் தலைமைத்துவத்தின் போக்குகள் எவ்வாறாக அமைந்துள்ளது?*

ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸைப் பொறுத்தவரையில் அஷ்ரப் அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைள் வட மாகாண முஸ்லீம்கள் தொடர்பாக கவனத்தை ஈர்த்ததாக தெரியவில்லை. தற்போதைய தலைமைத்துவத்தைப் பொறுத்தவரையில் வட மாகாண முஸ்லீம்களின் பிரச்சினையை ஓரளவுக்கேனும் விளங்கிக்கொண்டு செயற்படுவதாக தென்படுகிறது. அதாவது அவர்கள் வட மாகாண முஸ்லீம்களை பிரதிநிதித்துவப் படுத்துபவர்களோடு உறவுகளைப் பேணிக்கொண்டு அம்மக்கள் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்கின்றனர். தற்போதைய தலைமையின் போக்கு வட மாகாண முஸ்லீம்களின் பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து சரியான முறையில் ஒரு தீர்வைப்பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையில் அம்மக்கள் இருக்கின்றார்கள்.

- *பிரபா-ஹக்கீம் ஒப்பந்தம், கூட்டறிக்கை என்பனவற்றில் வட மாகாண முஸ்லீம்கள் தொடர்பான நிலைப்பாடு உங்களுக்கு திருப்தியைத் தருகின்றதா?*

இரு தலைவர்களும் செய்துகொண்ட ஒப்பந்தத்தை நாங்கள் வரவேற்கின்றோம். ஏனெனில் இது தமிழ்-

முஸ்லீம் மக்கள் புரிந்துணர்வுடன் ஐக்கியத்துடன் வாழக்கூடிய அடிப்படை ஆவணமாக அமையவேண்டுமென கருதுகிறோம். ஆனால் வட மாகாண முஸ்லீம்களின் மீள் குடியேற்ற அழைப்பானது கூட்டறிக்கையினூடாகவே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதாவது "யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லீம் மக்கள் அவர்களின் சொந்த இடத்தில் மீளக் குடியமருமாறு இத்தால் தலைவர் பிரபாகரன் அழைப்பு விடுக்கின்றார்." வட மாகாணத்தில் இருந்து முஸ்லீம்கள் இடம்பெயர்ந்து இங்கு வந்தவர்கள் அல்ல. யுத்தம் நடக்கும் நேரத்தில் கூட அவர்கள் தங்களின் சொந்த இடத்தில் தான் இருந்தார்கள். திட்டமிடப்பட்டு, சுற்றிவளைக்கப்பட்டு அவர்கள் உழைத்த சொத்துக்கள் அனைத்தும் தமிழீழத்துக்குரியதென கூறி பறித்தெடுக்கப்பட்டு பலவந்தமாக வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள். இங்கேதான் பிரச்சினை இருக்கிறது அதாவது, இடம்பெயர்ந்தவர்கள் என்பதற்கும், வெளியேற்றப்பட்டவர்கள் என்பதற்கும் இடையிலேயே பாரிய வரைவிலக்கண வித்தியாசங்கள் இருக்கிறது. இதுவொரு வரலாற்று துன்பகரமான சம்பவமென புலிகள் கூறியிருந்தார்கள். ஆனால் இது எமது வரலாற்றிலே மறுக்க முடியாத, மறக்க முடியாத ஒரு விடயம். எனவே இதை மறைத்து இலகுவாக இடம்பெயர்ந்த முஸ்லீம்கள் என உச்சரிக்கப்பட்டிருப்பதானது வட மாகாண முஸ்லீம்கள் மத்தியில் அதிருப்தியை உண்டுபண்ணியுள்ளது.

வெளியேற்றப்படும் போது அம்பாறைக்கு அஷ்ரப்பிடம் செல்லுங்கள் என்றுதான் விடுதலைப் புலிகள் சொன்னார்கள். முன்னர் கிழக்கிலே தமிழ்-முஸ்லீம் மக்களுக்கிடையில் நடைபெற்ற அனர்த்தங்கள் அதற்கான பிரதிபலிப்பாக இருக்கலாம். ஆனால் வட மாகாண முஸ்லீம்கள் என்ன குற்றம் செய்தோம் என்று புரியாமலே இருக்கிறார்கள். முஸ்லீம்கள் வெளியேற்றப்படுவதற்கு யார் காரணமாக அமைந்தது என்று புலிகள் கருதினார்களோ அத்தகைய கட்சியினுடன் இணைந்து செய்யப்பட்ட கூட்டறிக்கையினூடாகவே எங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. வெளியேற்றப்பட்ட முஸ்லீம்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. மாறாக வட மாகாண முஸ்லீம்கள் தென்பகுதியில் இந்தப் பிரச்சினைக்கு சமாதானமான முறையில் தீர்வு காணப்பட வேண்டும் என்று அரசாங்கத்துக்கு அழுத்தத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக பல போராட்டங்களையும், பேரணிகளையும் நடாத்தினார்கள்.

தலைவரின் பகிரங்கமான அழைப்பு கிடைக்கும் என்ற ஆர்வத்துடனேயே இன்னும் இருக்கிறார்கள்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தளவில் முஸ்லீம்கள் சரிசமமான பலத்துடன் இருக்கிறார்கள். எனவே அவர்கள் வென்றெடுக்க வேண்டிய கோரிக்கைகள் நியாயமானதாக இருக்கின்றது. தற்போது ஸ்ரீ.மு.கா ற்கும் எல்ரீரீஈ யிற்கும் ஒரு இணக்கப்பாடு இருந்தாலும் அது தொடரவேண்டும், நிலைக்க வேண்டும் என்பது இன்று எங்கள் எல்லோருடைய பிரார்த்தனையாக இருந்தாலும் கூட அச்சம் ஒன்று இல்லாமல் இல்லை. அதாவது கிழக்கு முஸ்லீம்கள் தொடர்பான நியாயமான கோரிக்கைகள் ஸ்ரீ.மு.கா யிடம் இருக்கின்றது. அந்தக் கோரிக்கைகள் தொடர்பாக எல்ரீரீஈயோடு பேசக்கூடிய சந்தர்ப்பங்களில் முரண்பாடுகள் தோன்றினால், இந்த கூட்டறிக்கையினூடாக விடுக்கப்பட்ட அழைப்பின் நிலையென்ன என்பது பெரும் கேள்வியாகவே இருக்கிறது.

விடுதலைப் புலிகள் ஸ்ரீ.மு.கா உடன் செய்துகொண்ட உடன்பாடு ஸ்ரீ.மு.கா ற்கு முதன்மையானதாக இருக்கலாம். ஆனால் விடுதலைப் புலிகள் இதற்கு முன்னால் 1988ல் ஒரு உடன்பாட்டில் கைச்சாத்திட்டார்கள். கலாநிதி மத்தியுதீன் முகமட் அவர்களின் தலைமையில் சென்ற குழுவுடன் எல்ரீரீஈயின் முக்கிய தலைவர்களில் ஒருவரான கிருஷ்ணகுமார் கிட்டுவின் தலைமையிலான குழு மூன்று நாட்கள் நடைபெற்ற கலந்துரையாடலின் பின் 18 அம்ச கோரிக்கைகள் அடங்கிய ஒரு ஆவணத்திலே இரு சாராரும் கைச்சாத்திட்டனர். அதில் முதலாவது அம்சமாக "வடக்குக் கிழக்கு முஸ்லீம்களின் தாயகமும் கூட" என குறிப்பிடுகின்றது. அதற்குப் பிறகுதான் 90ல் தாயகம் மறுக்கப்பட்ட வடமாகாண முஸ்லீம்கள் விரட்டப்பட்டனர். எனவே இந்த கூட்டு அறிக்கையின் ஊடாக விடுக்கப்பட்ட அழைப்பைப் பொறுத்தவரையில் எங்களுக்கு அச்சம் இல்லாமல் இல்லை.

ஆனால், தலைவர் பிரபாகரன் நேரடியாக அழைப்பை விட்டால் வட மாகாண முஸ்லீம்கள் நம்புவதற்கு தயாராக இருக்கிறார்கள். ஏனெனில் அவர் சொன்னதைச் செய்வார், செய்யாததைச் சொல்ல மாட்டார் என்ற நம்பிக்கை தமிழ் மக்கள் மத்தியில் எவ்வளவு வேரூன்றிப் போயிருக்கின்றதோ அதேயளவு தமிழர்களோடு ஒன்றாக வாழ்ந்த முஸ்லீம் மக்களுக்கும் இருக்கின்றது.



*"தங்களுடைய அரசியல் அபிலாசைகளை வடக்கிலே பெரும்பான்மையாக இருக்கும் தமிழ்மக்கள் நிறைவேற்றவேண்டும், அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கையுடன்தான் வட மாகாண முஸ்லீம்கள் இருக்கிறார்கள்"*

**"முஸ்லீம்களின் கௌரவத்தையும், தனித்துவத்தையும், அவர்களின் அரசியல் அபிலாசைகளையும் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கான உரிய இடத்தை இடைக்கால நிர்வாக சபையிலேயே விடுதலைப் புலிகள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கையும் இருக்கின்றது."**

- *பிரபாகரனிடமிருந்து பகிரங்கமாக நீங்கள் எதிர்பார்க்கும் அழைப்புக்கு யார் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றீர்கள்?*

முதலில் விடுதலைப் புலிகளின் தலைவர் பகிரங்கமான அழைப்பை எமக்கு அறிவித்ததின் பின் அரசாங்கத்திடமிருந்தும், சர்வதேச சமூகத்திடமிருந்தும் நாம் உத்தரவாதங்களை எதிர்பார்கிறோம். இந்த மூன்றும் ஒரு முறையில் இருக்கும்போதுதான் நாம் மீள் குடியேற்றத்தை துரிதமாக ஆரம்பிக்க சாத்தியமாக அமையும்.

- *வடக்குக் கிழக்கு இடைக்கால நிர்வாக சபை எல்ரீரீஈ யிடம் கையளிக்கப்பட்டால் வடக்கு முஸ்லீம்களின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்?*

விடுதலைப் புலிகளைப் பொறுத்தளவிலேயே அவர்களுடைய கட்டுப்பாட்டுப் பகுதியில் தங்களுக்கென ஒரு நிர்வாகத்தை தொடர்ச்சியாக பேணி வருகின்றனர்.

பொதுவாக விடுதலைப் புலிகள் ஜனநாயக அரசியல் நீரோட்டத்துக்குள் வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு எல்லாத்தரப்புகளின் மத்தியிலும் இருக்கிறது. அவ்வாறு அவர்கள் அந்த அரசியல் நீரோட்டத்துக்குள் வருவதற்கான வாய்ப்பை பெற்றுக்கொடுப்பது ஒரு தவறானதாக இருக்க முடியாது. வடக்குக் கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப்புலிகள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று விரும்புவார்களாக இருந்தால் அதற்கான வாய்ப்பை நாங்கள் கொடுக்கலாம். ஏனென்றால் இன்றைய சூழ்நிலையை நாங்கள் அவதானிக்கும்போது வடகிழக்கிலே தமிழ் மக்களுடைய அரசியல் தலைமைத்துவத்துக்குள் தலைமை வகித்துக்கொண்டிக்கும் பெரும்பாலான தலைவர்கள் கூட விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இடைக்கால நிர்வாகத்தில் முஸ்லீம்களினுடைய நிலையைப் பொறுத்தளவில் நடைபெறப்போகும் பேச்சுவார்த்தைகளில் இதுபற்றி தெளிவான கண்ணோட்டத்தை விடுதலைப் புலிகள் கொண்டிருப்பார்கள் என்றும், அவற்றை அவர்கள் பேச்சுவார்த்தை சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்துவார்கள் என்று நினைக்கின்றோம். அந்த வகையில் முஸ்லீம்களும் இடைக்கால நிர்வாக சபையை ஏற்று விடுதலைப் புலிகளை ஜனநாயக நீரோட்டத்திற்கு வருவதற்கான வழிக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்பதே எதிர்காலத்தில் சுமூகமான சூழ்நிலையை தோற்றுவிக்க ஆதரவளிப்பதாகும். முஸ்லீம்களின் கௌரவத்தையும், தணித்துவத்தையும், அவர்களின் அரசியல் அபிலாசைகளையும் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கான உரிய இடத்தை இடைக்கால நிர்வாக சபையிலேயே விடுதலைப் புலிகள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கையும் இருக்கின்றது.

- *கிழக்கு முஸ்லீம்களினால் நீண்டகால கோரிக்கையாக முன்வைக்கப்பட்டிருக்கும் தென்கிழக்கு அலகு தொடர்பாக உங்கள் நிலைப்பாடு என்ன?*

இவைபற்றி உரையாடி பிரச்சினைகளை வளர்க்கக்கூடாது என்றுதான் நினைக்கிறேன்.

- *முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் ஒன்று உருவாகியிருக்கிறது. இந்த ஒன்றியம் தொடர்பாக உங்களின் அபிப்பிராயம் என்ன?*

சகல முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்திருப்பது வரவேற்கத்தக்க ஒரு விடயம். அது நீடிக்க வேண்டும் என்பதையே நாங்கள் நினைக்கிறோம். முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் இது வரைக்கும் என்ன வேலைத்திட்டங்களை செய்ய போகின்றது என்பது தொடர்பாக இன்னும் தெளிவில்லாமல் இருக்கிறது. ஒன்றியத்தின் தலைவர் எம்.எச்.முஹமட் அவர்களை சந்தித்து வட மாகாண முஸ்லிம்களின் அபிலாசைகள் தொடர்பாக கலந்துரையாடினோம். ஒன்றியத்தினுடைய செயற்பாட்டில் இது தொடர்பாக தாங்கள் கவனம் எடுப்பதாக தெரிவித்தார்.

- *அண்மையில் வடக்கு முஸ்லீம்களின் பிரதிநிதிகள் குழு வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் தலைவர்களை சந்தித்துள்ளீர்கள். இச்சந்திப்பு எதிர்காலத்தில் வடக்கு முஸ்லீம்கள்*

*தொடர்பான நிலைப்பாட்டில் எதாவது நம்பிக்கைக்குரிய விடயங்கள் தென்பட்டனவா?*

மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அண்மையில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த இஸ்லாமிய மார்க்க அறிஞர் சபை(உலமா சபை)யினர் தற்போதைய சூழ்நிலைகளை அறிந்துகொள்வதற்காக கடந்த ஏப்ரல் 28ம் திகதி பயணமொன்றை மேற்கொண்டோம். இப்பயணத்தின்போது தமிழீழ விடுலைப்புலிகளின் அரசியல் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் இளம்பரிதி அவர்களை சந்தித்தோம். மற்றும் முஸ்லீம்கள் வாழ்ந்த பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வட்டாரப் பொறுப்பாளர்களையும் சந்தித்தோம். அத்துடன் வன்னியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனையும் சந்தித்து உரையாடினோம். நாங்கள் சந்தித்த அனைத்து த.வி.பு உறுப்பினர்கள் அனைவரினதும் அபிப்பிராயம் வட மாகாண முஸ்லீம்கள் மீண்டும் தங்கள் இடங்களில் குடியேற வேண்டும் என்பதே. மீள் குடியேற்றத்துக்கு தடையாக இருக்கக் கூடிய விடயங்கள் எதுவாக இருந்தாலும் அதற்கான நடவடிக்கைகளை தங்கள் கவனத்துக்கு கொண்டு வருவோம் என்று கூறினார்கள். சுமூகமாக மீள் குடியேறுவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தருவோம் என்ற உத்தரவாதத்தையும் தந்தார்கள். இவைகள் அனைத்தும் வரவேற்கத்தக்கதொன்றாகும்.



சு.ப.தமிழ்செல்வனுடனான சந்திப்பின்போது நாங்கள் முன்வைத்த கோரிக்கைகள் அனைத்துக்கும் இணக்கப்பட்டார். மீண்டும் இப்படியான சம்பவம் எதிர்காலத்தில் நடக்காது என்ற உத்தரவாதத்தையும் தந்தார். கிழக்கு மாகாண முஸ்லீம்களின் பிரச்சினையிலிருந்து வடமாகாண முஸ்லீம்களின் பிரச்சினை தனித்துவமானது என்பதை ஏற்றுக்கொண்டார். வடமாகாண முஸ்லீம்கள் தங்களுடைய சமய, சமூக, கலாசார அரசியல் விவகாரங்களையம் தனித்துவத்தை பேணுவதற்கு அனைத்து ஒத்துழைப்பு தருவதோடு, அதற்கான பாதுகாப்பையும் விடுதலைப் புலிகள் தருவார்கள் என்ற உத்தரவாதத்தையும் தந்தார்.

எங்களுக்கு எற்பட்ட இழப்பீடுகள் தொடர்பாக அவரிடம் பேசியபோது, இழப்பீடுகள் தருவதற்கான தகுதியில் விடுதலைப் புலிகள் இல்லையென்றும், ஆனால் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைக்கும் சந்தர்ப்பம் எங்களுக்கு கிடைக்குமாக இருந்தால் அதனூடாக உங்களுக்கு தேவையான புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு எங்களுடைய உறுப்பினர்கள் உதவி செய்வார்கள் என உத்தரவாதம் அளித்தார். மீளக் குடியேறக்கூடிய மக்களுக்கு தற்போது விடுதலைப் புலிகள் புனர்வாழ்வு ரீதியாக தற்போதைய நிலையில் எதுவும் செய்ய முடியாது நிலையில் இருப்பதாகவும், நீங்கள் இதற்கான உதவிகளை ஸ்ரீலங்கா அரசிடமிருந்துதான் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் அவர் கூறினார்.

மீளக் குடியேறக்கூடிய முஸ்லீம்கள் தமிழ் மக்கள் போன்று தொழில், வியாபாரம், விவசாயம் என்பவற்றை மேற்கொள்ளலாம். தமிழ் மக்களுக்கு எத்தகைய வரி விதிப்பு நடவடிக்கைகளை நாம் நடைமுறைப்படுத்தியுள்ளோமோ அது குடியேறும் முஸ்லீம் மக்களுக்கும் இருக்கும் என்பதையும் கூறினார். அதிலிருந்து விதிவிலக்கு எதிர்பார்க்க வேண்டாம் என்றும், வேறு ஏதாவது சலுகைகள் வட மாகாண முஸ்லீம்களுக்கு எங்களால் செய்ய முடியுமானாதாக இருந்தால் அந்தச் சலுகைகளை செய்வதற்கான நடவ்டிக்கைகளை மேற்கொள்வோம் எனவும் தெரிவித்தார். அவருடனான சந்திப்பு வட மாகாண முஸ்லீம்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக நம்பிக்கை தரக்கூடியதாக இருந்தது. நேரடி அழைப்பிதழ் தொடர்பாக நாங்கள் கூறிய போதுதான் அந்த நேரடி அழைப்பு விடுக்கப்படாததின் தன்மையை அவர் விளங்கிக்கொண்டதாகவும் தெரிந்தது.

இந்த கூட்டறிக்கையின் பின் தென்னிலங்கை அரசியல் சூழ்நிலையை அவதானிக்கும் போது இச்சந்தர்ப்பத்தில் நேரடி அழைப்பு விடுப்பது என்பது எவ்வளவு தூரத்திற்கு பொருத்தமானதாக அமையும் என்ற கேள்வி அவரிடத்தில் இருந்தது. இருந்தும் வட மாகாண முஸ்லீம்கள் நேரடி அழைப்பைத்தான் எதிர்பார்க்கிறார்கள் என்று நாங்கள் சொன்னோம். இதை தலைவரின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, இதற்குரிய நடவடிக்கையை எடுப்பதாகவும் கூறினார்.

- இச்சந்திப்பு தொடர்பாக அரச தரப்பிடமிருந்து ஏதாவது நடவடிக்கைகள்?

விடுதலைப்புலிகளின் உயர் மட்ட தலைவர்களை சந்தித்தது தொடர்பாக நாங்கள் அரசாங்க உயர் மட்டத்தினரோடும் சந்திப்பை மேற்கொள்ள விருக்கிறோம்.❐

(பேட்டி கண்டவர் : பா.வி.சாந்தன்)
(2002 மே மாத நடுப்பகுதி)

### யாழ்ப்பாணத்துக் கல்விமான்களுடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் உரையாடல்

# சமாதானச் செயல்முறையை வலுப்படுத்துதல் : வாய்ப்புகளும், சவால்களும்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் சத்திர சிகிச்சைகள் துறை மற்றும் வரலாற்றுத்துறை என்பவை ஒழுங்கு சேர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 2002 மே 19ம் திகதி "சமாதானச் செயல்முறையை வலுப்படுத்துதல் : வாய்ப்புகளும், சவால்களும்" என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை ஒழுங்கு செய்திருந்தன. யாழப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் எஸ்.கே.சிற்றம்பலம் இக்கருத்தரங்குக்குத் தலைமை வகித்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சத்திரசிகிச்சைத் துறையைச் சேர்ந்த டாக்டர் தயாளன் அம்பலவாணர், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலைய நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, திரு.ரொஹான் எதிரிசிங்க, திரு.சுனந்த தேசப்பிரிய மற்றும் தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் சட்ட மற்றும் அரசியலமைப்பு விவகார ஆலோசகர் பேராசிரியர் நிக்கொலஸ் ஹேயிசம் என்போர் குழுநிலை(Panel) கலந்துரையாடலில் அங்கம் வகித்தனர். பேராசிரியர் ஹேயிசம் ஒழுங்கமைப்பாளரின் அழைப்பின் பேரிலேயே வருகை தந்திருந்தார்.



இடமிருந்து சுனந்த, சரவணமுத்து, பாபா, ஹேயிசம், அசங்க, இளம்பிரிதி, சிதம்பரபிள்ளை, அம்பலவாணர், ரொஹான்

ஒழுங்கமைப்பாளர்களின் சார்பில் டாக்டர் அம்பலவாணரும், கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவும் அறிமுகக் கருத்துரைகளை வழங்கினர். அபிப்பிராயங்களை உருவாக்குவோருக்கும், வடக்கிலும், தெற்கிலுமுள்ள நலன் பிரதிநிதிகளுக்குமிடையிலான சமாதான மற்றும் முரண்பாட்டுத் தீர்வு பிரச்சினைகள் குறித்த உரையாடலை இலகுபடுத்த வேண்டியதன் முக்கியத்துவம் சம்பந்தமாக டாக்டர் அம்பலவாணர் வலியுறுத்திப் பேசினார். கடந்த காலத்தவறான விளங்கங்களை நிவர்த்திப்பதற்கு இத்தகைய செயல்முறை தீர்மானகரமானதென்றும், பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கான எதிர்காலக் கருத்தோட்டங்களையும், உளப்பாங்குகளையும் செழுமைப்படுத்துவதற்கும் இது அவசியமென்று அவர்மேலும் தெரிவித்தார்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பாத்திரம் பொதுக் கொள்கை விவாதத்தில் மாற்று வழிவகைகளை ஆய்வுசெய்து ஆதரித்துச் செயற்படுவதாகுமென்பதை விளக்கிய கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தீர்வுகளைத் தேடுவதில் அதன் முதல் நிலைப்பாடு இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இரணுவரீதியான தீர்வொன்று இல்லையென்பதும், பேச்சுவார்த்தை மூலமான தீர்வொன்றே சாத்தி மென்பதுமாகுமென்று தெரிவித்தார். இந்த விடயத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கருத்துப்படி சமஷ்டிக்கோட்பாடுகளின் அடிப்படையிலான அரசியலமைப்புச் சீர்திருத்தமும், மீள் கட்டமைப்புமே முரண்பாட்டுத் தீர்வுக்கு அவசியப்படுகின்றன. முரண்பாட்டுத் தீர்வென்பது ஜனநாயகத் தன்மைகொண்டதாக அமைவது மிகவும் அவசியமென்று கலாநிதி சரவணமுத்து தெரிவித்தார். இச்செயல்முறையில் சாத்தியமான அளவு பரந்த பங்கேற்பு மூலம் பொதுச் சட்டநிலைகத்தகவின் அடிப்படையிலேயே நிலைத்து நிற்கும் தீர்வுகள் ஏற்படும். இரண்டாம் சுவட்டு முன்முயற்சிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர் அவை முதலாம் சுவட்டுச் செயல்முறையுடன் பொது ஜன அபிப்பிராயங்கள் மற்றும் சரிசனைக் கவலைகளை ஒருங்கிணைப்பதில் முக்கிய பாத்திரத்தை வகிக்குமென்றும் தெரிவித்தார். யுத்த

நிறுத்த உடன்படிக்கையின் கீழான தற்போதைய சமாதானச்செயல்முறையின் இயங்குவிசையைப் பேணவேண்டியதன் வாழ்வாதாரமான முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார். இந்நிகழ்வுத்தொடர்பின் மோதலில் சம்பந்தமுற்றுள்ள இரு தரப்பினரும் எல்ரீரீஈ மீதான தடைகளை அகற்றுதல் மற்றும் இலங்கையின் சகல பிரஜைகளுக்கும் பன்மைத்துவ உரிமைகள் போன்ற பிரச்சினைகள் குறித்து வெகுவிரைவில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவேண்டுமென்றும் அவர் கூறினார்.

இனப்பிரச்சினைக்கு நீதியான கௌரவமான தீர்வொன்று காணப்பட வேண்டுமெனில் அது தமிழ்த்தேசியம், தாயகம் மற்றும் சுய-நிர்ணய உரிமை போன்ற திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே இடம்பெறவேண்டுமென்று பேராசிரியர் சிற்றம்பலம் வலியுறுத்தினார். யுத்த நிறுத்த உடன்படிக்கை மற்றும் பேச்சுவார்த்தைகளுக்கான தற்போதைய நடவடிக்கைகளை வரவேற்றுப் பேசிய அவர் கடந்தகாலத் தோல்விகள் காரணமாக யுத்தத்தினால் பாதிப்புற்றுள்ள பிரதேசங்களின் மக்களின் மனங்களில் ஏற்பட்டுள்ள பீதிகளையும் சுட்டிக்காட்டினார்.

குழுநிலைக் கலந்துரையாடலின் முதலாவது சமர்ப்பணம் பேராசிரியர் நிக்கொலஸ் ஹேயிசம் அவர்களால் செய்யப்பட்டது. தென்னாபிரிக்காவின் ஜனநாயகத்துக்கான நிலைமாற்றம் ஓர் "அற்புதம்" என்று தென்னாபிரிக்காவுக்கு வெளியிலுள்ள கருத்துரையாளர்கள் அடிக்கடி கூறுகிறார்களென்று அவர் தெரிவித்தார். தென்னாபிரிக்காவின் இந்த நிலைமாற்றச் செயல்முறை பல மேடு பள்ளங்களைச் சந்தித்ததென்றும், இந்த நிகழ்வுத் தொடர்பிலேயே அது சர்வதேச முரண்பாட்டுத்தீர்வு முயற்சிகளுக்குப் பெறுமதிமிக்க பாடங்களை வழங்கியுள்ளதென்றும் அவர் வலியுறுத்திக் கூறினார். அவர் பின்னர் தென்னாபிரிக்க நிலைமாற்றத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய சில பொதுப்பிரயோகக் கோட்பாடுகளை இனங்கண்டதோடு, அவற்றை இலங்கைச் சமாதானச் செயல்முறையின் தற்போதைய கட்டத்தில் பயனுள்ள வகையில் உபயோகித்துக்கொள்ள முடியுமென்பதையும் சுட்டிக்காட்டினார்.

சமாதானச் செயல்முறையின் இயங்குவிசை பேணப்பட வேண்டுமென்பதையும் பேராசிரியர் ஹேயிசம் வலியுறுத்திக் கூறினார். தென்னாபிரிக்க சமாதானச் செயல்முறை அடிக்கடி தடம்புரண்டதையும் அது நிரந்திரமாகத் தடைப்படும் உடனடி ஆபத்து இருந்ததையும் நினைவூட்டிய அவர் செயல்முறை தொடர்ந்து முன்செல்வது அவசியமென்பதை வற்புறுத்தினார்.

தென்னாபிரிக்காவிலும், வேறு இடங்களிலும் உபயோகிக்கப்பட்ட இலங்கையில் பயன்படுத்தக்கூடிய பேச்சுவார்த்தைத் தொழில்நுட்பங்கள் குறித்தும் பேராசிரியர் ஹேயிசம் குறிப்பிட்டார். ஒரு குறிப்பிட்ட பதப்பிரயோகம் கருத்து வேறுபாடுகளுக்கு இட்டுச்செல்வதாக அமைகையில், "ஆக்கபூர்வ மயக்கம்" குறித்த தொழில்நுட்பம்(தாழ்வு நவிலல் குழப்பம் என்றும் அழைக்கப்படும்) பயன்படுத்தப்படலாமென்றும் அவர் தெரிவித்தார். இலங்கைப் பிரச்சினையில் "ஒற்றையாட்சி" மற்றும் "தமிழர் பாரம்பரிய தாயகம்" போன்ற பதங்கள் பிரத்தியேகமாக உணர்ச்சிகளைக் கிளறுபவையென்றும் குறிப்பிட்ட அவர் இந்த எண்ணக்கருக்களை உணர்ச்சி குறைந்த பதங்களைக்கொண்டு மீள் வகுத்தமைக்கலாமென்றும் ஆலோசனை வழங்கினார்.

வெற்றிகரமான பேச்சுவார்த்தைகள் முன்னேற்றகரமான தொடர்பாடல் படிவங்களையும், பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் தரப்பினரிடையிலும், தனித்தனியே அவர்களிளுள்ளும் தொடர்பாடல்களையும் கொண்டிருத்தல் அவசியமாகும். அவர்கள் தம்மைவிட ஏனையவர்களோடும் தொடர்பாடல்களை ஏற்படுத்துதல் வேண்டும். இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல் இரு கட்சிகளினிடையிலும் பொதுவான ஒரு பொறுப்புணர்வு அல்லது செயல்முறையின் கூட்டு உரிமை உணர்வு என்பதை ஏற்படுத்த உதவும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதென்பது சுற்றிலும் அடையாளச் செயற்பாடுகளைக் கொண்ட "மென்மையான" பிரச்சினை அல்லவென்று அவர் கூறினார். அது பேச்சுவார்த்தைகளில் வெற்றி சம்பந்தமான தீர்மானகரமான ஒரு கூறாகும். இந்த நிகழ்வுத் தொடர்பில் தற்போது அரசாங்கத்துக்கும், எல்ரீரீஈ அமைப்புக்குமிடையிலான யுத்தநிறுத்த ஒப்பந்தத்திலுள்ள குறைபாடு அவர்கள் பிணக்குகளை நேரடியாகப் பேசித்தீர்த்துக்கொள்வதற்கான ஏற்பாடுகள் இன்மையே ஆகுமெனக் குறிப்பிடும் பேராசிரியர் ஹேயிசம் இது இலங்கைக் கண்காணிப்பு மூலமே தற்போது சாத்தியமாகுமென்பதையும் சுட்டிக்காட்டினார். போர்நிறுத்த ஒப்பந்தம் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும், அடிப்படை முக்கியத்துவம் கொண்டவிடயங்களில்

பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க முன்னர் செயல்முறையின் கூட்டு உரிமையை உறுதிசெய்வதற்கும் உதவவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் எந்தத்தரப்பிலும் "வெற்றிப் பெருமைவாதம்" ஆபத்தானது என்று எச்சரித்து பேராசிரியர் ஹேயிசம் தனது சமர்ப்பணத்தை நிறைவு செய்தார். சர்வதேச அனுபவத்தில் வெற்றிப்பெருமிதவாதம் பல சமாதானச் செயல்முறைகளின் தோல்விக்கு இட்டுச்சென்றது என்பதையும், அது வெற்றிகரமான பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையான பங்குடமை என்றும் கருத்தை மறுதலிக்கின்றதென்றும் தெரிவித்தார்.

திரு.ரொஹான் எதிரிசிங்க காலைவேளையில் இடம்பெற்ற குழுநிலை கலந்துரையாடலில் இரண்டாவது சமர்ப்பணத்தைச் செய்தார். அவரது உரை பிரதானமாக இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகளைத் தேடுவதில் எழும் சில அடிப்படை விடயங்கள் குறித்துக் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்திருந்தத. புதிது புனைதலான அரசியலமைப்புச் சீர்திருத்தமென்பது முரண்பாட்டுத்தீர்வில் செய்துடிப்பாற்றல் கொண்ட சாதனமாகுமென்ற கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவின் கருத்தை வலியுறுத்திய அவர் இதை ஈட்டிக்கொள்வதாயின் பங்கேற்புச் செயல்முறையொன்று அவசியமென்றும் தெரிவித்தார். மத்தியில் அரசியல் சக-வாழ்வும், ஜனாதிபதியின் திர்மானகரமான பாத்திரமும் இதற்கு அவசியமென்றும் அவர் கூறினார்.

அரசியலமைப்பு, சீர்திருத்த விவாதத்தில் சிவில் சமூகத்தின் ஆக்கபூர்வமான பங்கேற்பு அவசியமென்றும், வழமையாகப்போதிய அளவு பிரதிநிதித்துவம் பெறாத கருத்துக்களின் முக்கியமானவையென்றும் தெரிவித்து திரு.ரொஹான் எதிரிசிங்க தனது உரையை நிறைவு செய்தார். இந்த வகையில் கற்றுக்கொள்வதற்கு பல சர்வதேச அனுபவங்களின் பாடங்கள் உள்ளனவென்றும், பிரத்தியேகமாக பிரிவினைவாதப் பதற்றங்களைக் கூட்டு அரசியல் மற்றும் கலாசார உரிமைகளுக்கு எவ்வித பாதிப்புமின்றி வெற்றிகரமாகக் கையாண்ட கனடிய அனுபவம் மிகவும் முக்கியமானதென்றும் அவர் தெரிவித்தார்.

குழுநிலை கலந்துரையாடலில் மூன்றாவது சமர்ப்பணம் திரு.சுனந்த தேசப்பிரிய அவர்களுடையதாகும். அவர் இலங்கையில் பல்வேறு ஜனசமூகத்தினர் ஒருவரைப் பற்றியொருவரும், சமாதான சுகவாழ்வு குறித்தும் கொண்டுள்ள கண்ணோட்டங்கள் குறித்து கருத்துரை வழங்கினார். கடந்த காலங்களில் முருங்கன், மன்னார் மற்றும் குருநாகல் போன்ற பிரதேசங்களில் இடம்பெற்ற சமாதான நிகழ்ச்சித்திட்ட உதாரணங்களை அவர் சுட்டிக்காட்டினார். இச்சந்தர்ப்பங்களில் வடபகுதிக் கிராமங்கள் தென்பகுதி மக்களையும், தென்பகுதிக் கிராமங்கள் வட பகுதி மக்களையும் வரவேற்று உபசரித்திருந்தன. இக்கலாசாரப் பரிவர்த்தனை நிகழ்ச்சிகள் இரு ஜனசமூகங்களையும் சேர்ந்த சாதாரண மக்களிடையே புரிந்துணர்வையும். பல்லினப்பாங்கையும் முன்னேற்றுவதில் பாரிய வெற்றிகரமானவையாக அமைந்ததோடு, பொதுவான விடயப்பரப்புகளை வலியுறுத்துபவையாகவும் விளங்கின. இதற்கு முன்னர் இருந்த பல்வேறு பாரபட்சமான கருத்துகள் அகன்றதோடு, மற்ற ஜனசமூகத்தவரைச் சந்தித்து உரையாடும் வாய்ப்பு இதற்கு உந்துசக்தியாக விளங்கியது.

திரு.தேசப்பிரிய மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சமாதான நம்பிக்கைச் சுட்டி(PCI) குறித்தும் குறிப்பிட்டார். இது தெற்கில் வளர்ந்துவரும் யுத்த எதிர்ப்பு மனப்பான்மையைக்காட்டும் ஒன்றாகும். இது எல்ரீரீஈ அமைப்புடன் பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத்தை ஈட்டவேண்டுமென்றும் தென்பகுதி மக்களின் விருப்பத்தைப் பதிவிலிடுவது மேலும் முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். மனப்பாங்குகள் மற்றும் கண்ணோட்டங்களில் செய்தி ஊடகங்கள் செலுத்தும் தர்க்கங்கள் குறித்துக் கருத்துரை வழங்கிய திரு.தேசப்பிரிய இதில் மேலும் சீர்திருத்தங்களுக்கு பெரிதும் இடமுன்டென்றும் கூறினார். இலங்கையில் யுத்தம் மற்றும் சமாதானம் குறித்து அறிக்கையிடுதல் விழுமியங்கள் நிறைந்த ஒரு செயற்பாடென்றும் பத்திரிகையாளர்கள் நியாயமான அறிக்கையிடலோடு ஒத்துப்போகாத பழைய கருத்துநிலைகளையே இன்னமும் பற்றிக்கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். ஆயனும் சரியான நடவடிக்கைகளைக் ஊக்கவுணர்வோடு மேற்கொள்கையில் கண்ணோட்டங்கள் மாற்றமுறுமென்றும் சக்திவாய்ந்த செய்தியையும் வழங்கி அவர் தனது உரையை முடித்தார்.


மே 19ந் திகதி பிற்பகல்வேளையில் பேராசிரியர் ஹேயிசம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மண்டபத்தில் இதே விடயம் குறித்து ஆயிரக்கணக்கானோர் மத்தியில் சொற்பொழிவாற்றினார். இந்நிகழ்ச்சிக்கு டாக்டர் அம்பலவாணரும், கலாநிதி பாக்கியசோதியும் தலைமை வகித்தனர்.❐

# எல்ரீரீஈ அமைப்பின் பத்திரிகையாளர் மாநாட்டுக்கு அப்பால் - சில சிந்தனைகள்

-கேதீஸ்வரன் லோகநாதன்-

கிளிநொச்சியில் ஏப்ரல் 10ம் திகதி எல்ரீரீஈ தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பிரதான பேச்சுவார்த்தையாளரும், எல்ரீரீஈ தத்துவாசிரியருமான அன்டன் பாலசிங்கத்தின் உதவியுடன் நிகழ்த்திய பத்திரிகையாளர் மாநாடு குறித்து நிறைய விடயங்கள் பேசப்பட்டும், எழுதப்பட்டுமுள்ளன. ஊடக மற்றும் அரசியல் பகுப்பாய்வு முக்கியமாக நோக்கியது எல்ரீரீஈ தலைவர் பிரபாகரன் தமிழீழத் தனியரசுக்கான கோரிக்கையைக் கைவிட்டுவிட்டாரா இல்லையா என்பது குறித்தேயாகும்.

முதலாவதாக எல்ரீரீஈ-அமைப்பு இலங்கை அரசுக்கெதிராக ஆயுதப்போரை ஆரம்பிப்பதற்கான காரணமாயமைந்த அரசியல் இலட்சியத்தை அவர்கள் கைவிட்டுவிட்டனர் என்று முடிவுக்கு வரக்கூடியதாக பத்திரிகையாளர் மாநாட்டில் பிரபாகரன் எதையும் தெரிவிக்கவில்லை என்பதைத் தெளிவாக விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். சுதந்திர அரசொன்றை அமைக்கும் போராட்டத்தை அவர்கள் கைவிடத் தயாராவென்று குறிப்பாக எழுப்பப்பட்ட ஒரு கேள்விக்கு "சுதந்திர அரசுக் கோரிக்கையைக் கைவிடுமளவுக்கு நிலைமைகளில் மாற்றமெதுவும் ஏற்பட்டுவிடவில்லை" என்று பதிலளித்தார். "1977 பொதுத்தேர்தல்களின்போது தமிழ் மக்களே தமிழீழக் கோரிக்கைகளை முன்வைத்ததால் தமிழ் மக்கள் ஏற்று அங்கீகரிக்கும் விடயத்தை எல்ரீரீஈ அமைப்பும் எற்றுக்கொள்ளும்" என்றும் அவர் தெரிவித்தார்.



வலியுறுத்தப்பட வேண்டியதும், சிங்கள சமூகம் அறிந்துகொள்ள வேண்டியதும் என்னவென்றால் தமிழ் மக்கள் "தமிழ் ஈழத்தை" இனவாதத்துக்கும், அரசு அனுசரணையுடனான தமிழர் எதிர்ப்பு இனக்கலவரங்களுக்கும் எதிரான தமது போராட்டத்தின் ஒரு சின்னமாகவே கருதுகின்றனர் என்பதேயாகும். திம்புக்கோட்பாடுகளில் காணப்படும் தமிழ்த்தேசியம் மற்றும் சுய-நிர்ணய உரிமையென்பது தமிழ் அரசியல் சமூகமும், மக்கள் சமூகமும் தமது மனக்குறைகளைத் தீர்க்கவும், தமது அபிலாசைகளை ஈட்டிக்கொள்ளவும் உபயோகிக்கும் வாதமாகும். ஆகவே "தமிழீழம்" என்பது ஓர் உளவியல் எண்ணக்கரு என்பதோடு, பிரிவினைக்கான ஒரு கோரிக்கையோடு சமப்படுத்த முடியாத ஒன்றுமாகும். ஆகவே "தமிழீழம்" என்றும் தனிநாட்டுக்கான கோரிக்கையை எல்ரீரீஈ அமைப்பு கைவிட்டு விட்டதா என்ற கேள்வி அர்த்தமற்ற ஒன்றாகும்.

இலங்கை அரசு தமிழ் மக்களினதும் ஏனைய

சிறுபான்மைத் தேசிய இனங்கள்/இனத்துவக் குழுக்கள் என்போரின் சட்டநிலைத் தகவுள்ள மனக்குறைகளை தீர்த்து வைத்து, அவர்கள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் சிங்கள தேசீய இனத்தோடு சமமான உரிமைகளையும் பெற்று வாழக்கூடிய அளவில் அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்களை அரசு செய்யத்தயாராக விருக்கிறதா என்பதே உண்மையில் எழுப்பப்பட வேண்டிய கேள்வியாகும். சுயாட்சிக்கு உத்தரவாதம் வழங்கும் வகையில் அரசியலமைப்பு சீர்திருத்தம் இடம்பெறுமாயின் தமிழர் மனங்களில் தேசம் என்ற அந்தஸ்தைப் பெறகாத்திருக்கும் ஒரு தெளிவான தேசீயமே "தமிழ் ஈழம்" என்னும் இனங்காணல் மறைந்துபோய்விடும்.
சுயாட்சியைக் கருதும் அன்டன் பாலசிங்கத்தின் "உள்ளக சுய-நிர்ணயம்" எல்ரீரீஈ அமைப்பு இந்த யதார்த்தத்தை மேலும் மேலும் அதிகமாக உணர்ந்துகொள்வதன் அறிகுறியாகவும் இருக்கமுடியும்.
பேச்சுவார்த்தைகளின்போது, ஒரு கட்டத்தில் திரு.பிரபாகரன் இப்பிரகடனத்தை வெளிப்படையாகச் செய்யவேண்டியேற்படும். அதை இப்பொழுதே அவர்கள் சொல்லுவது நல்லது. இந்த நிகழ்வுத்தொடர்பில் வாய்ப்பைப் பற்றிக்கொண்டு ஊடக மாநாட்டின் மிகவும் முக்கியமான அம்சம் "உள்ளக சுயநிர்ணயம்" என்ற பதத்தை அவர்கள் உபயோகித்தமையே என்றும், இது நாம் அத்தகைய ஒரு தீர்வை வழங்கினால் அவர்கள் இலங்கையின் ஆட்புல ஒருமைக்குள் பணியாற்ற விரும்புவதைக் காட்டுகின்றது என்றும் பிரதமர் திரு.ரணில் விக்கிரமசிங்க கூறியதைப் பாராட்டுதல் வேண்டும். (எல்ரீரீஈ பத்திரிகையாளர் மாநாட்டுக்கு அடுத்த நாள் எம்.ரீ.வீ யின் குட்மோர்னிங் ஸ்ரீலங்கா பேட்டியில்)

ஆனால், இங்குதான் பிரச்சினையே உள்ளது.

முதலாவதாக, தமிழர் நெருக்கடியின் உள்ளார்ந்த அடிப்படைப்பிரச்சினைகளைத் தீர்க்க ஆரம்பிப்பதற்கான தன்னம்பிக்கையோ, அரசியல் திடசித்தமோ இந்த அரசாங்கத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை. எதிர்க்கட்சியில் இருந்தவேளையிலும் ஐ.தே.க இத்தகைய ஒரு பணிக்கு எத்தகைய ஒத்துழைப்பையும் வழங்கவில்லை. அவ்வாறே தமது தனிநாட்டுக்கோரிக்கைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய மாற்றீடாக எதையும் வழங்கும் நிலையில் ஐ.தே.மு அரசாங்கம் இல்லையென்பதும் எல்ரீரீஈ அமைப்புக்குத் தெரியும்.

அன்டன் பாலசிங்கத்தின் வார்த்தைகளில் "ரணில் விக்கிரமசிங்க உள்ளார்ந்த ரீதியிலான முக்கிய பிரச்சினைகளைத் தீர்த்து எமக்கு ஒரு நிரந்திரமான தீர்வை வழங்குவாரென்று நாம் எண்ணவில்லை." அன்டன் பாலசிங்கம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் மனமாற்றமின்மையைச் சுட்டிக்காட்டி இதைத்தெளிவுபடுத்தியபோதிலும், எல்ரீரீஈ அமைப்பின் இந்த மதிப்பீடு அடுத்தடுத்து வந்த



"திம்புக்கோட்பாடுகளில் காணப்படும் தமிழ்த்தேசியம் மற்றும் சுய-நிர்ணய உரிமையென்பது தமிழ் அரசியல் சமூகமும், மக்கள் சமூகமும் தமது மனக்குறைகளைத் தீர்க்கவும், தமது அபிலாசைகளை ஈட்டிக்கொள்ளவும் உபயோகிக்கும் வாதமாகும். ஆகவே 'தமிழீழம்' என்பது ஓர் உளவியல் எண்ணக்கரு என்பதோடு, பிரிவினைக்கான ஒரு கோரிக்கையோடு சமப்படுத்த முடியாத ஒன்றுமாகும்."



அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கும், தமிழர் பிரதேசங்களுக்கும் சுயாட்சி வழங்குவதற்கான இயலுமையின்மை மற்றும் விருப்பமின்மை என்பவற்றிலிருந்தே எழுந்ததாகும். இந்த அமைப்பு தனிநாடு கோருவதற்கான அடிப்படைய நியாய விளக்கம் இதுவேயாகும்.

இரண்டாவதாக, பேச்சுவாத்தைகள் குறித்த எல்ரீரீஈ அமைப்பினதும், அரசாங்கத்தினதும் வலியுறுத்துல் முரண்பாட்டின் அறிகுறிகளுக்குப் பரிகாரம் செய்வதாகவேயன்றி, முரண்பாட்டுக்கு இட்டுச்சென்ற காரணங்களை அகற்றுவதாக இல்லை. இதனாலேயே இருதரப்பினருக்கும் வசதியான “படிப்படியான அணுமுறையில்” பொருளார்ந்த பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளதோடு, வடக்குகிழக்குக்குத் தள்ளப்பட்டுள்ளதோடு, வடக்குக்கிழக்குக்கான எல்ரீரீஈ அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழான இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதிலேயே கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கில் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, மற்றும் யுத்தத்தால் சீரழிந்த பிரதேசங்களின் புனர்நிர்மாணம் போன்ற அவசரப் பணிகளை நிறைவேற்றுவதற்கு வடக்கு-கிழக்குக்கு ஓர் இடைக்கால நிர்வாகம் அவசியமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இடைக்கால நிர்வாக அமைவில் பிரதான நலன்பங்காளராக எல்ரீரீஈ அமைப்புக்கு “பெருமைக்குரி இடம்” வழங்கப்படவேண்டுமென்பதும் தெளிவாகும். ஆயினும் தமிழர் நெருக்கடியினால் பொருளார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகளும் ஒரு செயல்முறையாக பேச்சுவார்த்தை நோக்கப்படாவிடில் அதுவே தவறாகும். அரசாங்கத்தினதும் எல்ரீரீஈ அமைப்பினதும் “படிப்படியான அணுகுமுறை” மோதலுக்குக் காரணமான பிரச்சினைகள் தீர்க்கப்படாவிடில், இன்னுமொரு தடவை யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் நிலவும் இடைவேளையாகவே முடியும்.

பரந்த கோட்பாடுகள் சட்டகம், மற்றும் இறுதியில் சேருமிடம் குறித்த வரைபடங்களும், “பாதை வழிகாட்டிகளுமே” தற்போது அவசியப்படுகின்றன. பிரத்தியட்சமாகவே, சேருமிடம் தமிழ் ஈழத் தனிநாடாகவோ, தற்போதுள்ள ஒற்றையாட்சி அமைப்பை நீடிப்பதாகவோ இருக்க முடியாது. பூகோள-அரசியல் யதார்த்தங்களும், நாட்டினுள்ளிருக்கும் அரசியல் - இராணுவ சக்திகளும் இதை அனுமதிக்கப்போவதில்லை. ஆகவே, தீர்வு ஆக்கபூர்வமாக அரசை மீளமைப்புச் செய்வதாகவே அமைய முடியும். இத்தகைய மீளமைப்பு பூரணமான சுயாட்சியுடன் கூடிய வடக்கு - கிழக்கின் பாதுகாப்பினையும், ஐக்கிய, பன்மைத்துவ, பொருளாதார செழிப்பு மிக்க இலங்கையில் அதன் சமூக-பொருளாதார முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். சமாதான செயல்முறை நிலைத்தகவுள்ளதாக நீடிக்க வேண்டுமெனில், இந்த யதார்த்தத்தை இருதரப்பினரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அதேவேளையில் யுத்தத்தினால் மோசமாகப் பாதிப்புற்ற வடக்கு - கிழக்கும், அதன் மக்கள் தொகையும் நாகரீக நெருக்கடியொன்றிலிருந்து மீட்டெடுக்கப்படுவதோடு, அவர்கள் கௌரவமாகவும், பாதுகாப்பாகவும் வாழ்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுதல் வேண்டும். இதை ஒரு முடிவாக நாம் நோக்குதல் கூடாது. இடைக்காலச் செயல்முறை, பிரத்தியேகமாக, உத்தேச-எல்ரீரீஈ கட்டுப்பாட்டின் கீழான இடைக்கால நிர்வாக அமைப்பும் ஒன்றை அடைவதற்கான வழிமுறை மாத்திரமேயாகும்.

ஒட்டுமொத்தமாக நோக்கினால் பந்து அரசாங்கத்தின் பக்கத்திலோ, எல்ரீரீஈ அமைப்பின் பக்கத்திலோ இல்லை. இருவருமே ஒரே படகில் உள்ளனர். இருதரப்பினருமே அது மூழ்குவதை அனுமதிக்கமுடியாது.❐

*“இலங்கை அரசு தமிழ் மக்களினதும் ஏனைய சிறுபான்மைத் தேசிய இனங்கள், இனத்துவக்குழுக்கள் என்போரின் சட்டநிலைத் தகவுள்ள மனக்குறைகளை தீர்த்து வைத்து, அவர்கள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் சிங்கள தேசிய இனத்தோடு சமமான உரிமைகளையும் பெற்று வாழக்கூடிய அளவில் அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்களை அரசு செய்யத்தயாராக விருக்கிறதா என்பதே உண்மையில் எழுப்பப்பட வேண்டிய கேள்வியாகும்.”*

# சமாதானச் செயற்பாட்டுச் சூழ்நிலையிலும் : மலையகத் தமிழரின் அரசியல் அபிலாசைகளுக்கான பதில் என்ன...?...?

-பி.பொன்னுசாமி-



இலங்கையின் பெருந்தோட்டப் பயிராக்கவியல் செயற்பாட்டுக்கென பிரித்தானியரினால் இத்தீவுக்கு கொண்டுவரப்பட்டவர்கள் தான் இன்றைய மலையத்தமிழர்கள். 18ம் நூற்றாண்டின் குருதி கசிந்து சோகவரலாற்றின் உலகறியாத மக்கள் கூட்டமாக இன்று அவர்கள் திகழ்ந்தபோதும், மனித குல நாகரீகமே வெட்கித்து நிற்குமளவுக்கு இத் தொழிலாளர்கள் அடிமைப்படுத்தப்பட்டு கிடந்தபோதும் நாளம் சிவக்கும் வண்ணம் தம் கடும் உழைப்பின் மூலம் இந்நாட்டின் மத்திய மலைநாட்டு கடும்கானகவெளிகளில் இந்நாட்டுக்கு பெரும் கீர்த்தியையும், பொருளாதார ஊற்றையும் உருவாக்கி இலங்கையை பாதுகாத்து வருகின்றார்கள்.

மனிதநேயம் வென்றெடுத்த நாகரீகத்தின் எந்தவொரு விளைபயனையும் இம்மக்கள் அனுபவிக்கவிடக் கூடாதென்பதிலும், இம்மக்கள் ஒரு அரசியல் சக்தியாக எழுந்துவிடக்கூடாது என்பதிலும் - தமக்கென்றென உரித்தையும் இந்நாட்டில் கொண்டிருக்கக் கூடாது என்பதிலும் கவனம் செலுத்திய அதிகார வர்க்கத்தினர் அவர்களை நவீன அடிமைக் கூட்டினுள் வைத்து மலிவான விலையில் அவர்களது ஊழியத்தை தொடர்ச்சியாக சுரண்டிவருகின்றனர்.

இந்நிலையில் இருந்து அவர்களை மீட்டெடுப்பதற்காக பிரயத்தனங்கள் 1930 களின் முற்கூற்றில் இருந்தே ஆரம்பமாகிய போதும், அரசியல், தொழிற்சங்க செல்நெறிகளுக்கூடாக அவர்கள் இருந்ததையும் இழக்கும் பரிதாபநிலையே சுதந்திர இலங்கையில் உருவானது. நாடு அனைவருக்குமாய் பெற்ற சுதந்திரத்தை மலையகத் தமிழரிடம் இருந்து பிடுங்கிக்கொண்டது.

வாழ்வுரிமை மறுக்கப்பட்ட அம்மக்களில் ஒரு பகுதியினர் தற்காலிக பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பெற்றுக்கொண்டதன் மூலம் கணிசமான எண்ணிக்கையிலான நிர்வாக மன்றங்களுக்கான பிரதிநிதித்துவங்களை பெற்றபோதும், அதன் மூலம் அவர்கள் பெற்ற அரசியல் விளைபயன்கள் அரிதானவையே.

பாராளுமன்றத்தில் மலையகத் தமிழரின் பிரதிநிதித்துவம் 30ஆக இருத்தல் வேண்டும் ஆனால் 10 பிரதிநிதிகளையே கொண்டுள்ள அவர்கள் திட்டமிட்ட அதிகார வர்க்கத்தினரின் அரசியல் சூதாட்டத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனால் தம்மக்களின்

அரசியல் கோரிக்கைகளை ஒன்றுபட்டு முன்வைக்க முடியாதவர்களாகியுள்ளனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை எட்டுவதற்கு இன்றைய பிரயத்தனத்தின்போது மலையகத் தமிழருக்குரிய அடையாளம் யாது என்பது பிரதானமான வினாவாகும்? ஏனெனில் அரை நூற்றாண்டுக்காலமாக நிலவிவரும் இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டை களைய விளையும் உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள், மலையகத்தமிழரின் அரசியல் எதிர்காலம் குறித்து தமது கவனத்தை குவிக்க தவறியுள்ளது.

இத்தீவின் மத்திய மலைப்பகுதியில் தம் இனத்துவ இருப்பில் மிகச்செறிவான முறையில் வாழ்வதோடு உறுதியான கலாச்சார, பண்பாட்டு, மொழியியல், உளவியல், உற்பத்தி உறவினூடே பலமிக்க தேசிய இனக்குழுவாக நிலைகொண்டுள்ள அவர்களது அரசியல் அதிகாரம் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

மலையகத்தின் மையநீரோட்ட தொழிற்சங்கங்களும் அரசியல் சக்திகளும் இம்மக்களின் அரசியல் அதிகாரம் குறித்து பேச விரும்பாதிருக்கின்ற போதும், கடந்த 40 ஆண்டுகாலமாக மத்தியதர வர்க்கத்தினரிடமிருந்து அரசியல் அதிகாரத்துக்கான குரல்கள் எழுப்பப்பட்டே வருகின்றன.

இவ்வாறான ஜனநாயக வகைப்பட்ட அரசியல் முன்னகர்வுக்காக, பல டசின்கணக்கான மலையக மாற்று குழுக்களையும், நபர்களையும் அழித்தொழித்து ஆகிவிட்டபோதும் அக்கோரிக்கைகள் அம்மக்களின் பிரிக்கமுடியாத பகுதியாக மாறிவருகின்றமையை உரியவாறு இனம்காணத் தவறுவது மாபெரும் வரலாற்று சரிவாகிவிடக்கூடும்.

இவ்வாறாக தொடர் போராட்டங்களை அடியொட்டி அண்மையில், மலையக புத்திஜீவிகள், செயற்பாட்டாளர்கள் ஒன்று கூடிய சட்டமன்றில் பின்வரும் அடிப்படைக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

- *மலையகத் தமிழர் தனியான தேசிய இனமாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்.*
- *1931 - 1941 வரையான காலப்பகுதியில் மலையக தமிழர் செறிவாக வாழ்ந்த பிரதேசங்கள் யாவும் மலையகத் தமிழரின் வாழ்வாதார பிராந்தியங்களாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்.*
- *மலையகத் தமிழர் செறிந்துள்ள பிரதேசங்களுக்கும் அரசியல் சுயாட்சி அதிகாரம் வழங்கப்படல் வேண்டும்.*
- ***மலையகத்தில் திட்டமிட்ட குடியேற்றங்கள் நிறுத்தப்படல் வேண்டும்.***
- ***மலையகத் தமிழர்கள் திட்டமிட்ட வகையில் இன அழிப்புக்கோ, புலப்பெயர்வுக்கோ உள்ளடக்கப்படக்கூடாது.***

அத்துடன்,

- *சுயநிர்ணய உரிமை*
- *நிலவுரிமை*

போன்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டது.

இவையாவற்றையும் இப்போதே பரிசீலிப்பதற்கும், அம்மக்களுக்கு பாதிப்பற்ற வகையிலான நல்லிணக்கத் தீர்வொன்றை எட்டுவதற்கும் முயற்சிப்பது அவசியமானதாகும்.

சமாதானத்துக்கான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அரசும், புலிகளும், நடுநிலையானதான நோர்வேயும் மட்டுமன்றி இவ்விவகாரத்தில் செல்வாக்கு செலுத்தக் கூடிய அனைத்துலக தரப்பினர், மனித உரிமை குழுக்கள், குடியியல் அமைப்புகள், ஊடகங்கள் போன்றவற்றின் கவனம் இம்மக்களின் கோரிக்கையின்பால் ஈர்க்கப்படல்வேண்டும்.❐

"சமாதானத்துக்கான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அரசும், புலிகளும், நடுநிலையானதான நோர்வேயும் மட்டுமன்றி இவ்விவகாரத்தில் செல்வாக்கு செலுத்தக் கூடிய அனைத்துலக தரப்பினர், மனித உரிமை குழுக்கள், குடியியல் அமைப்புகள், ஊடகங்கள் போன்றவற்றின் கவனம் இம்மக்களின் கோரிக்கையின்பால் ஈர்க்கப்படல் வேண்டும்."

# போட்டிக்காக வந்தடைந்த கவிதைகள்

குறுக்கு வழியானாலும் முயற்சிப்போம் !
அகதி என்ற பெயர் துறப்போம்!
அன்று.......
கட்டிய துணியுடன்,
பெட்டி படுக்கையின்றி,
விட்டது... விட்டபடியே...
பால் குடிக்கும் பாலகனைச் சுமந்து,
நட்ட நடுநிசியிலே..
பதறித்தான் வந்தோம்!

நட்ட நடையாய் காட்டு வழியே
பாதை தெரியாத பயணத்தை
முடித்தபோது
முத்திரை குத்தப்பட்டது...
அகதியாம்!
அதிர்ந்துதான் போனோம்!
ஆனாலும்....
அல்லல்பட்டு, அவஸ்தைப்பட்டு
கடந்தே போனோம்
ஒரு தசாப்தத்தை :
இனியும் வேண்டாம் !
திறந்து விட்ட பாதை போதும் !
குறுக்கு வழியானாலும் முயற்சிப்போம்.........
எங்கள் மண்ணில்
ஒரு வேளை கஞ்சி குடித்தாலும்....
மானமுள்ள மனிதராய்
மறுபடியும் வாழ்வோம்!
புறப்படு.......

**ஏ.எல்.ஸரீனா பர்வீன்**
**புத்தளம்**





குறுக்கு வழியானாலும் முயற்சியாக்கு...
சறுக்கும் ஆனாலும் சமாதான நோக்கு
இருப்பின் இடம்பெயரவலம்
இல்லாதொழியும் இக்கேவலம்
இன்னல் தீருமிது உண்மை வாக்கு....!

**என்.ஏ.தீரன்**
**கல்முனை**

# பெண்களும், சமாதானத்தைக் கட்டியெழுப்புதலும், அரசியல் யாப்பின் உருவாக்கமும்: ஒரு கண்ணோட்டம்

-பவானி லோகநாதன்-





பெண்கள் ஆயுதப் போராட்டங்களிலும், சமாதான முயற்சிகளிலும் பங்கேற்பது போர்கள் மலிந்த இக்காலகட்டத்தில் இன்றியமையாத ஒன்றாகும். ஆயுதப்போர்கள் நடைபெறுகையிலும், போர் நிறுத்தங்கள் நீடிக்கையிலும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் வேளைகளிலும் பெண்கள் ஏராளமான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இவர்கள் தனி மனிதர்களாக மட்டுமன்றி திக்கற்றவர்களாக, விதவைகளாக, குடும்பத்தலைவர்களாக, மற்றும் முன்னாள் போராளிகளாக பாதிப்புக்களையும் சவால்களையும் ஏற்கவேண்டியுள்ளது. இதன் காரணமாக புனர்வாழ்வு மையங்களும், தொண்டர் ஸ்தாபனங்களும், மனிதாபிமான அமைப்புக்களும் அரச சேவைகளும் தத்தம் திட்டங்களில் பெண்களது பிரச்சினைகளை உள்வாங்கியுள்ளன. இப்பின்னணியிலேயே சமாதான முயற்சிகளும் அதுசார்ந்த அரசியல் யாப்பின் சீர்திருத்தங்களும் நடைபெறுதல் முக்கியம். இதனைக் கருப்பொருளாக் கொண்டு மே மாதம் 2ம், 3ம், 4ம், 5ம் திகதிகளில் சர்வதேச மாநாடு ஒன்று கொழும்பில் நடைபெற்றது. சர்வதேச இனத்துவக் கற்கை நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இம்மாநாட்டில் பல்வேறு மட்டங்களைச் சேர்ந்த பெண்கள் பங்கு பற்றினர். பெண் செயலாளிகள், மனிதாபிமான அமைப்புகளில் அங்கம் வகிப்போர், யுத்தப் பாதிப்புக்களுக்கு உள்ளான சமூகத்தினருக்கு சேவை புரிவோர், பெண்களது குழுக்களின் உறுப்பினர் தொண்டர் ஸ்தாபனங்களில் பணியாற்றுவோர் மற்றும் முன்னாள் ஆயுதப்போராளிகள் அனைவரும் தமது அனுபவங்களையும், முயற்சிகளையும் இவ்வரங்கில் கருத்துப்பரிமாற்றம் செய்தனர்.

மாநாட்டின் தொடக்கவிழாவில் யுத்தக்கொடுமைகளால் பாதிப்படைந்த பல நாடுகளிலிருந்து, குறிப்பாக யுகோஸ்லாவியா, சியாராலியோன், இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சைப்ரஸ், துருக்கி, வட அயர்லாந்து, கொலம்பியா, இந்தோனேசியா, தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், கொரியா ஆகிய நாட்டும் பெண்கள் குழுமியிருந்தனர். சர்வதேச இனத்துவக் கற்கை நிலையத்தின் பணிப்பாளரும், ஐக்கிய நாடுகள் சார்பில் சர்வதேச அளவில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை வெளிக்கொணரும் பிரதிநிதியுமாகிய(UN Special Reporter on Violence Against Woman) கலாநிதி ராதிகா குமாரசுவாமி அவர்கள் இம்மாநாட்டைத் தொடக்கி வைத்தார்.

முதல் நாள் நடைபெற்ற கருத்தரங்கில் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள யுத்தப் பாதிப்புக்களும், யுத்த காலங்களில் அவர்களது பங்களிப்புக்களும் ஆராயப்பட்டன. யுகோஸ்லாவியா, சியராலியோன் மற்றும் தெற்கு ஆசிய

நாடுகளிலிருந்து வருகை தந்தோர் தத்தம் அனுபவங்களை எடுத்துரைத்தனர். இதன் பின்னர் "பெண்ணியமும் சமாதானமும்", "பெண்களது சமாதானச் செயல் ஆக்கங்கள்" ஆகிய விடயங்கள் அலசப்பட்டன. உள்நாட்டு சூழ்நிலைகளிலும், சர்வதேச அளவிலும் பெண்கள் ஒருங்கிணைந்து சமாதானத்துக்காகச் செயல்படவேண்டிய அவசியம் தொடர்பாக உக்கிரமாக இம்மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.



சமாதானத்தைப் பேணும் முயற்சிகளில் பெண்கள் வகிக்கும் பங்கு, வெவ்வேறு மட்டங்களில் அவர்களது செயலாக்கம் என்பன இங்கு கலந்துரையாடப்பட்டது. அவையாவன :

அ. யுத்தத்தால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைக் கண்டித்து கண்டனம் தெரிவித்தல்,

ஆ. சமாதானம் சார்பாக அரசு முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு நல்குதல்,

இ. மனித உரிமைக் குழுக்கள், சிவில் சமூக அமைப்புகள் போன்றவற்றுடன் கூட்டுச்சேர்ந்து யுத்த வன்முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தல்,


பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பெண்கள் இவ்வழிமுறைகளை சரியான உதாரணங்களுடன் விளக்கிக்கூறினர்.

இரண்டாம் நாள் கருத்தரங்களில் அரசியல் யாப்புக்கள் பற்றியும் அவை எவ்வாறு சட்டங்களாக அங்கீகரிக்கப்படுகின்றன என்பது பற்றியும் முன்னுரை வழங்கப்பட்டது. இதைத்தொடர்ந்து யுத்தத்திற்குப் பிற்பட்ட, யுத்த நிறுத்தங்கள் அமுலாக்கப்பட்டுள்ள காலப்பகுதிகள் கருப்பொருளாக எடுத்துக்கொள்ளப்பட்டது. சமாதான உடன்படிக்கைகளில் பெண்கள் ஆற்றக்கூடிய பங்கு பெண்களது நலன்கருதி உருவாக்கப்படும் அரசியல் யாப்புக்கள் ஆகியன பற்றிய கலந்துரையாடல்கள் இங்கு இடம்பெற்றன. வட அயர்லாந்து, ஆஸ்திரேலியா, கொலம்பியா, பாகிஸ்தான், ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் தத்தம் அரசியல் யாப்புக்களும், சட்ட சீர்திருத்தங்களும் யுத்தப்பாதிப்புக்கு உள்ளான பெண்களுக்கு எவ்வகையில் ஆதரவு தருகின்றன என்பதை விளக்கிக் கூறினர்.

யுத்தத்தின் பின்னர் அத்தியாவசியமான புனர்வாழ்வு, புனருத்தாரண நடவடிக்கைகள் இறுதி நாள் கருத்தரங்களில் இடம்பெற்றன. யுத்தத்தின் பின்னர் பெண்களது பொருளாதார சமூக நிலைமையும் அதன் காரணமாக அவர்கள் புனர்வாழ்வுத் திட்டங்களில் ஈடுபடுத்தப்படவேண்டிய அவசியமும் இங்கு தெளிவாக்கப்பட்டன. பெண்கள் இக்காலக்கட்டத்தில் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளில் அடிப்படையில் அவர்களது மனித உரிமைகள் சார்பாக புனர்வாழ்வுத் திட்டங்களும் அவற்றின் செயல்பாடுகளும் அமையவேண்டும் என்பதை கொலம்பியா, பங்களாதேஷ், யுகோஸ்லாவியா நாடுகளைச் சேர்ந்த பெண்கள் வலியுறுத்தினர். குறிப்பாக, கொலம்பியாவைச் சேர்ந்த முன்னாள் பெண்போராளி ஒருவர் தமது தனிப்பட்ட அனுபவங்களையும் தற்போதைய சமூகப் பணிகளையும் விபரித்தார். இதன் பின்னணியில், யுத்தப் பாதிப்புக்கு உள்ளான சமூகங்களைச் சேர்ந்த பெண்களுக்கு அளிக்கப்பட வேண்டிய முன்னேற்றத்துக்கான வாய்ப்புக்கள் தொடர்பாகவும் அலசப்பட்டது. இப்பெண்கள் புதிய ஒரு சமூகத்தில் எதிர்நோக்கும் சவால்கள், மாறுபட்ட தொழில் முயற்சிகள், சொத்துரிமை, சமூகப் பிரச்சினைகள் என்பனவும் இதில் அடங்கும்.

யுத்தம் முடிவுற்று சமாதானம் ஏற்படும் காலகட்டங்களில் பெண்கள் எதிர்நோக்கும் மெய்யுறுதிப்பாடு, பொறுப்பேற்றல், சமரசம் ஆகிய கருத்தரங்களில் இறுதிப்பகுதியில் மீளாய்வு செய்யப்பட்டன. இத்தருணங்களில் பெண்கள் கைக்கொள்ளவேண்டிய தந்திரோபாயங்கள், செயல்முறைகள் என்பன தென்னாபிரிக்க, கொரிய, அமெரிக்கப் பெண்களால் விளக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கிருஷாந்தி குமாரசுவாமி எனும் பள்ளி மாணவியின் பாலியல் வன்கலவு/கொலை வழக்கை சட்டத்தின் முன்பு கொண்டு வருவதற்கான எமது பெண்கள் அமைப்புக்கள் நடாத்திய செயலாற்றம் இங்கு விபரிக்கப்பட்டது. பெண்களுக்கு யுத்தகாலத்தில் ஏற்படும் பாலியல் பலாத்காரங்களும் ஏனைய யுத்த குற்றங்களும் நீதிக்கு முன்பாக கொண்டு வரப்படவேண்டியதன் அவசியத்தை இக்கருத்தரங்கு வலியுறுத்தியது.

மாநாட்டின் நிறைவேற்றுரையில், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் முன்மொழியப்பட்டு பெண்களது மனித உரிமைகளை அடிப்படையாகக் கொள்ளும் கோட்பாடுகளும், தீர்மானங்களும் யுத்தப் பாதிப்புக்களுக்கு உள்ளானோருக்கு எந்த ரீதியில் உறுதுணை புரிகின்றன என்பது விளக்கிக் கூறப்பட்டு கருத்தரங்கு முடிவுற்றது. ❐



# சமாதானத்தால் வெல்ல வேண்டியவை........

சமூகத்திலுள்ள அனைவரும் சமாதான செயற்திட்டத்தை முன்வைத்து அமுலாக்குவதற்கு உதவி செய்வதோடு, அதிலிருந்து மிகச் சிறந்த பலனை ஈட்டிக்கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும்.

யுத்தம் 25 வருடங்களாக தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஆனால் பிரச்சினை நாளக்கு நாள் மோசமாகிக்கொண்டே வந்துள்ளது. யுத்தம்நிற்கவில்லை பேரழிவுகளையே யுத்தம் ஏற்படுத்தியது. அதனால் சமாதானத்தை விரும்பும், இந்தியா உட்பட்ட உலக நாடுகள், எமது இனப்பிரச்சினையை சமாதானமாக தீர்த்துக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கின. ஆனால், இந்த இனப்போர் அந்நிய நாட்டு உளவு முகவர்களால் மிகமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது. உள்நாட்டு போரில் இரு சாரார்களிலிருந்தும் ஏராளமானோர் இறந்துள்ளனர். அவர்களுக்கு இடையில் குறுக்கிட்ட அப்பாவி மக்களும் துவக்குகளுக்கு இரையாகினர். மக்களின் சொத்துக்கள் வேண்டுமென்றே அழிக்கப்பட்டன. அதனால் நாடு பெருமளவுக்கு பாதிக்கப்பட்டது. இவ்வாறு எமக்கு தொடர்ந்து வாழ முடியாது.


யுத்தம் என்பது அழிவும், சிதைவுமாகும். இந்த நாடு எதிர்காலச் சந்ததியினர்க்காக காப்பாற்றப்பட்டு பாதுகாக்கப்படவேண்டும். இது எமது அடிப்படைக் கடமைகளுள் ஒன்றாகும். தற்போதைய சமாதான செயற்திட்டம் இந்தப்பணியை செய்வதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தை எமக்கு அளித்துள்ளது. ❐



(பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியிலிருந்து)

**வண கொடுகொட தம்ம வஸ நாயக்க தேரர்**
செயலாளர்
ஸ்ரீலங்கா அமரபுர மஹா சங்ஸ்ரீ ஸாபா

# இலங்கைத் தீர்வில் இந்தியா!



**பேராசிரியர் கா.சிவத்தம்பி**

இலங்கையில் தற்போது சமாதானத்துக்கான சூழல் ஏற்பட்டிருப்பது சகல பிரிவு மக்களுக்கும் ஏற்புடைய, விருப்பத்துக்குரிய விஷயம். யுத்தம் நிறுத்தப்பட்டிருப்பது நிம்மதியைத் தருகிறது. எல்லோரும் வரவேற்கிறார்கள். சமாதானப் பேச்சு நடத்த வேண்டியதன் அவசியம் கடந்த ஆட்சிக்காலத்திலயே உணரப்பட்டது.

அடிப்படையில் இப்பிரச்சினை, இலங்கையைத் தாயகமாக கொண்ட தமிழ் மக்களுக்கு அரசியல் சட்டத்திலுள்ள அந்தஸ்து யாது என்பது பற்றிய பிரச்சினையாகும். சிங்கள மக்களுக்கு மொழி, மதம் முதலியவற்றில் கிடைத்திருக்கும் அரசியல் சட்ட அந்தஸ்து எதுவும் தமிழ் மக்களுக்கில்லை.

இந்தியாவின் தலையீட்டின் பின்னர் தமிழ் உத்தியோக மொழியாக, தேசிய மொழியாக 1987ல் இருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் நடைமுறைப்படுத்துவதில் பல குறைபாடுகள் உள்ளன.

சமீபத்தில் இந்தியாவுக்கு வந்த இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க இதை ஒப்புக்கொண்டுள்ளார். சிறுபான்மையினரை நடத்திய விதத்தால் இலங்கையை ஒரு தேசமாகக் கட்டி வளர்க்கமுடியவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு அரசியல் சட்ட அந்தஸ்து யாது? தமிழ் மக்கள் எந்த முறையில் நடத்தப்படவேண்டுமென்பது சம்பந்தமாக மூன்றாவது தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை நடைபெறக்கூடிய நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது.

தமிழர் தரப்புக்காகப் பேசுபவர்களாக விடுதலைப் புலிகள் மாத்திரமே இருத்தல் வேண்டுமென்பதை இலங்கையில் கடந்த அரசும், இந்த அரசும் ஏற்றுக்கொண்டுள்ளன. இது அரசுக்கும், புலிகளுக்குமிடையில் உள்ள பிரச்சினை பற்றிய பேச்சல்ல. இலங்கையின் தமிழ் மக்களுக்கு அரசியல் சட்டத்தில் என்ன இடம் அளிக்கவேண்டுமென்பது பற்றி பேச்சாகும்.

புலிகளுடன்தான் பேச்சு நடத்தவேண்டுமென்ற தேவை உருவானதற்கான காரணம், கடந்த 27 ஆண்டுகளாக நடந்த பல பேச்சுவார்த்தைகளில் ஒத்துக்கொண்டவற்றை இலங்கை அரசு அமுலாக்கவில்லை என்பதுதான்.

தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும், இந்திய அரசுடனும் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் சரியான முறையில் அமுலாக்கப்படவில்லை. இதனால்தான் போர் தொடர்ந்து நடக்கிறது. போரைத் தொடர்ந்து புலிகள் நடத்துவதால் புலிகளோடு பேசவேண்டும் என்று தேர்தல் மூலம் வந்த தமிழர் பிரதிநிதிகளில் 2 பேர் தவிர, 14 பேர் சொல்கிறார்கள். அந்த 2 பேரும் கூட புலிகளோடு பேச்கூடாது என்று சொல்லவில்லை.

இப்பேச்சுவார்த்தைக்கான சூழல் ஏற்பட முதலில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த அடிப்படையில் போர் நிறுத்தப்பட்டது. சில நடைமுறைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் பல செயல்படுத்த வேண்டியுள்ளன. புலிகளுக்கு அதிக இடம் கொடுத்து விட்டதாகச் சில சிங்கள சக்திகள் கூறத் தொடங்கியுள்ளன.

சிங்களச் செய்தி ஊடகங்கள் இதுகாலம் வரை தமிழர் கோரிக்கைகள், போராட்டங்கள் பற்றிச் சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறிய முறைமை காரணமாகச் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் கோரிக்கை என்பது பிரிவினைக்கு, இடம்கொடுப்பது என்ற எண்ணம் இருந்து வருகிறது.

இதனால், சிங்கள மக்கள் இன்றும் பயப்படுகிறார்கள். சில சிங்கள ஊடகங்கள் இன்னும் தங்கள் தொனியை மாற்றிக்கொள்ளவில்லை. இவற்றின் ஊடே மிகச் சிறிய குழுவினர் தமிழர்களுக்கு நியாயமான தீர்ப்பு வழங்கப்பட வேண்டுமென்று வேண்டுகிறார்கள்.

பாரம்பரியத் தமிழர்கள், முஸ்லீம்கள், இந்திய வம்சாவளியினர் தமிழைப் பயன்படுத்துகிறார்கள். இவர்களில் முஸ்லீம்கள் தங்களைத் தமிழர்களாகப் பெரிதும் அடையாளம் காண்பதில்லை. இது இலங்கையின்

வரலாற்றின் ஊடாக வரும் நிலைப்பாடு.

வட-கிழக்கை பாரம்பரியப் பிரதேசமாகக் கொண்டவர்கள் பாரம்பரியத் தமிழர்கள், முஸ்லீம்கள் வடகிழக்குப் பகுதியில் 33 சதவீத பேராகவும், அதற்கு வெளியிலும் உள்ளனர். நடுப்பகுதியில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் உள்ளவர்கள் இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழர்கள்.

வடகிழக்குப் மாநிலமாகப் பிரித்து அங்கு ஓர் உள்ளூர் மாநில ஆட்சி 87ஆம் ஆண்டு இந்தியா-இலங்கை ஒப்பந்தம் மூலம் ஏற்படுத்தப்பட்டது.

துரதிர்ஷ்டவசமாக அது சரியாக நடைபெறவில்லை. அதிக அதிகாரம் வழங்காததால் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஆதரித்த ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியினரே அதிலிருந்து விலக வேண்டி நேரிட்டது. இன்று அங்கு ஆளுநர் ஆட்சியின் கீழ் மாகாண சபை உள்ளது.

இடைக்காலத் தீர்வாக வடகிழக்கு மாநில ஆட்சியைப் புலிகள் ஏற்படும். அதன் பின்னர் ஏற்படக்கூடிய தேச நிலைப்பட்ட வளர்ச்சிகளின் பின்புலத்தில் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வும் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் அனுசரணையும், ஈடுபாடும் இல்லாத எந்த ஒரு தீர்வும் நிரந்திரமாக இருக்க முடியாது என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக இருக்கிறார்கள்.


பேச்சுவார்த்தைகளை எதிர்ப்பவர்களில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவின் கட்சியைச் சேர்ந்தவர்களை விடவும், இந்திய விஸ்தரிப்புவாதம் என்று கூறி இந்தியாவை எதிர்ப்பதையே தங்கள் கொள்கையாகக் கொண்டுள்ள ஜே.வி.பி எனும் மக்கள் விடுதலை முன்னணிக் கட்சியினரே பிரதானமாக அவர்களின் பின்னே சிங்கள இனவாத சக்திகள் ஒன்று திரண்டுள்ளன.

இந்த சக்திகள் எல்லாவற்றையும் ஒன்று திரட்ட பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக உள்ள இலங்கை சுதந்திரக்கட்சி முனைகிறது. அதிலும் எதிர்க்கட்சித் தலைவரை விடவும், சந்திரிகாவின் சகோதரர் அநுரா பண்டாரநாயக்கவே அதிகம் இனவாதம் பேசுகிறார். எனவேதான், இந்தியாவின் அனுசரணையும் ஈடுபாடும் இந்தத் தீர்வில் இருத்தல் வேண்டுமெனத் தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்.❐

- தினமணி -



சமாதானத்திற்கான பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில், கடந்த 24-06-2002 மாலை அனுராதபுரம் மிகிந்தலையில் "சமாதானத்திற்கான தீபத்தை ஏற்றுவோம்" என்ற யுத்த நிறுத்தத்தை வரவேற்கும் இரண்டாவது நிகழ்வுக்கு சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மூவின மக்களும் ஒன்றிணைந்து சமாதான தீபங்கள் ஏற்றினார்கள். சமாதான பாடகர் ஜயதிலக்க பண்டாரவின் ஐக்கிய அமைதிக்கீதங்கள் இசைக்க, நிலையான சமாதானம் வேண்டும், மூவினங்களும் ஒரே நாட்டின் மக்கள் என்ற கோஷங்களோடு நாட்டின் எதிர்காலத்தின் சுபீட்சத்திற்காக மன்றாடி தீபங்களை ஏற்றினார்கள். எல்லைக் கிராம மக்கள், யுத்தத்தால் கணவனை இழந்த பெண்கள், மகன்களை இழந்த தாய்மார்கள் யுத்த கொடூரங்களை நினைத்து கண்ணீர் வடிய தீபத்தை ஏந்தி பிரார்த்தனையில் ஈடுபட்டார்கள். அந்நிகழ்வில் பங்குபற்றிய இராணுவத்தினர் நாட்டின் சமாதானத்துக்கான தீபம் ஏற்றுவதில் முனைப்பாக இருப்பதையே படத்தில் காண்கிறீர்கள்.❐



# சமாதானத்தால் தேடிக்கொடுக்க வேண்டியவை.......


**மனோ வைத்திய நிபுணர் டாக்டர் தயா சோமசுந்தரம்**

இரண்டு தசாப்தங்களாக நடைபெற்ற யுத்தத்தில் பிள்ளைகளை, இளைஞர்களை, ஆண்களை, உறவினர்களை, நண்பர்களை இழந்தும்... வீடுகள், சொத்துக்கள் அழிவதை கண்டும், இடம்பெயர்வுகளால் பிரிந்து வாழ்ந்து வந்த சொந்த இடங்களை காண முடியாமலும் மனப்பாதிப்படைந்திருக்கின்ற நம் மக்களுக்கு......

இந்த யுத்த நிறுத்தம் அவர்களுக்கு ஒரு நிம்மதியை ஏற்படுத்தியிருக்கின்றது. பல வருடங்களாக அந்த நிம்மதிக்காக அவர்கள் ஏங்கியிருக்கின்றார்கள். பரவலாக இந்த யுத்தச் சூழலில் வாழ்ந்தவர்களுக்கு துவக்குகளின் வெடிச்சத்தங்களும் எறிகணை வீச்சுக்களினாலும் உண்டான பீதி இப்போது குறைந்திருக்கின்றது. இது ஒரு தற்காலிகமான நிலைமையாகத்தான் தெரிகின்றது. இருந்தாலும் கொஞ்ச காலத்துக்காவது அவர்கள் இந்த அமைதியான சூழலை அனுபவிக்கக் கூடியதாக இருக்கின்றது. அந்தச் சூழலில் அவர்களுக்கு நம்பிக்கையும் இருக்கின்றது. இப்போதுள்ள சமாதான முயற்சிகள் சரியான வழி முறையில் சென்றால் ஒரு நீண்டகால சமாதானத்துக்கு இட்டுச் செல்லக்கூடும் என்ற நம்பிக்கை எல்லோரிடத்திலுமே இருக்கின்றது.

ஆனாலும் பல தடவைகள் சமாதான முயற்சி மேற்கொள்ளப்பட்டு, போர் நிறுத்தம் செய்யப்பட்டு எதிர்பாராத விதத்தில் அந்த சமாதான முயற்சிகள் முறிவடைந்து யுத்தம் மீண்டும் மூர்க்கமாக மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. இதனால் இப்போதைய சமாதான சூழலிலும் மக்கள் முழுமையான நம்பிக்கை வைக்க விரும்பவில்லை. அவ்வாறு நம்பிக்கை வைத்து அவர்கள் முன்பு பல தடவைகள் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் கூடிய நம்பிக்கையையே இப்போதைய சமாதான சூழலில் வைத்திருக்கின்றார்கள்.

"இப்போதுள்ள சமாதான முயற்சிகள் சரியான வழி முறையில் சென்றால் ஒரு நீண்டகால சமாதானத்துக்கு இட்டுச் செல்லக்கூடும் என்ற நம்பிக்கை எல்லோரிடத்திலுமே இருக்கின்றது."



பாதிக்கப்பட்டவர்களின் பல்வேறு உணர்வுகள் நிறையவே மக்களுடைய உள்ளங்களில் மறைந்து தேங்கிக் கிடக்கின்றன. பாதிப்புக்களின் போது யுத்த நெருக்கடிகளிலிருந்து விடுபடவேண்டும், உயிரைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற மேலான ஆவல்கள் உந்துகின்றன. இதனால் பாதிப்புக்களின் போது வழமையாக வெளிப்படுத்தப்பட வேண்டிய சோகம், துயரம், கோபம் என்பன மக்களுடைய உள்ளங்களிலே மறைக்கப்பட்டுள்ளன. நிலைமைகளின் அவசர அவசியத் தேவை கருதி அவர்கள் உணர்வுகளை மறைத்துக்கொண்டு உடனடியாகச் செயற்பட வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்வாறு உணர்வுகள் மறைக்கபபட்டதின் காரணமாக பல்வேறுவிதமான உளப்பாதிப்புகள் எற்படுகின்றன. இத்தகைய உளப்பாதிப்புகளின் பிரதிபலிப்புகளை நாங்கள் சாதாரனமான மக்களுடைய நாளாந்த வாழ்க்கையில் காணக்கூடியதாக இருக்கின்றது. ❐

(வீரகேசரிக்கு வழங்கிய பேட்டியிலிருந்து)

# பாதக சாதக




சமாதானத்துக்கான விலைகள் பேசித் தீர்க்கப்பட்டதும், தீர்க்கடாததுமாக நம்பிக்கை மீது நம்பிக்கைவைத்து நகர்கிறது சமாதானத்துக்கான முன் முயற்சிகள்.

சமாதானம் என்றால் என்ன என்ற ஒரு கேள்விக்கு பல பதில்கள் இருக்கலாம். ஆனால் அவற்றுக்கிடையேயான ஒரு பொதுமைப்பாட்டைக் கண்டடைவது சிக்கலான ஒரு காரியமன்று.

பொது நலன்களுள் ஒரு சில சுய நலன்கள் இருக்குமானால் அது ஒரு ஆரோக்கியமான சூழலை, உருவாக்கும். அது சமூகத்தைப் பொறுத்தவரை மிக நன்மையான வளர்ச்சியினை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

ஆனால், சுயநலன்களில் ஒருசில பொதுநலன்கள் இருக்குமானால்... அது அச் சமூகத்தை எந்த வகையான நிலைக்கு இட்டுச்செல்லும் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

இங்கேயும் பொதுநலம், சுயநலம் என்பது தொடர்பான பிரச்சினை எழுகிறது. பொதுநலம்

"மறுப்பின் மறுப்பை நேரடியாக முன்வைக்க முடியாத ஒரு சூழல் அல்லது ஒரு போக்கு நம்மிடையே உருவாக்கப்பட்டிருக்கிறது."

என்று சொல்லும் ஒரு சாராரின் கருத்துக்கு இன்னொரு சாரார் சுயநலம் என்பதாக குற்றம் சாட்ட முடியும்.

ஆனால் ஒரு சமூகத்தின், தேவைக்காக முன் வைக்கப்படும் தேவைகளானது பொதுநலனாகவே இருக்கும். அந்தப் பொதுநலன்களினுள் தனது சுயநலனை தந்திரமாகப் புதைத்து, அதனை அனுபவிக்கும் தந்திர புத்தியும் நம்மிடையே இல்லாமல் இல்லை.

இவ்விடத்தில் முன்வைக்கப்படும் மறுப்பின் மறுப்பை நேரடியாக முன்வைக்க முடியாத ஒரு சூழல் அல்லது ஒரு போக்கு நம்மிடையே உருவாக்கப்பட்டிருக்கிறது. அது விமர்சனத்துக்கு அப்பாற்பட்டது. அவ்வாறு விமர்ச்சிக்கப்பட்டால் அது தெய்வக் குற்றமாக கருதப்படும் ஒரு மரபின் தோற்றுவாயிலிருப்பதாலோ என்னவோ, இச் சமாதான முன்னெடுப்புத் தொடர்பான தமது கருத்துக்களை புத்திஜீவிகள் முன்வைக்கத் தயங்குகிறார்கள்.

நமது கருத்துக்கு இனவாதம் பூசப்படும் என்ற பலமான நம்பிக்கை இருக்கும்போது தமது கருத்துக்களை முன்வைக்க அவர்கள் தயங்குவதில் நியாயம் இருக்கிறது.

ஒரு இனம் தனது கலை, கலாசாரம், மொழி

விழுமியங்கள் எல்லாம் உன்னதமானவை என்று எண்ணிக்கொள்வதிலும் எடுத்துரைப்பதிலும் “பாவம்” இல்லை. ஆனால் “மற்ற இனத்திலும் விட” என்று வருகிற பொழுது “பாவம்” பற்றிக்கொள்கிறது.

"ஒரு இனம் தனது கலை, கலாசாரம், மொழி விழுமியங்கள் எல்லாம் உன்னதமானவை என்று எண்ணிக்கொள்வதிலும் எடுத்துரைப்பதிலும் 'பாவம்' இல்லை. ஆனால் 'மற்ற இனத்திலும் விட' என்று வருகிற பொழுது “பாவம்” பற்றிக்கொள்கிறது."

இந்நிலை பொதுவாக இலங்கை நாட்டைச் சேர்ந்த இனங்களிடையே மிகவும் துக்கலாகவே காணப்படும் ஒன்று. மற்றொரு இனம் பச்சை இனவாதம் பேசுகிறது என சுட்டும் விரலை காட்ட முதல் தாம் பேசவில்லையா என்பதை சிந்தித்துப் பார்ப்பது நல்லது. மற்றவர்கள் பேசினால் இனவாதம் அதையே நாம் பேசினால் தேசியவாதம் என்றாகிவிடுகிறது.

அவ்வாறே, அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக “விடுதலை” என்ற பெயரில் போராடும் இயக்கமானது, அவ் அரசாங்கத்திலும் பார்க்க ஈவிரக்கமற்ற பாசிச தன்மையோடு நடந்துகொண்டாலும் அரசாங்கத்தின் அடக்குமுறையும், அராஜகமும்தான் முதன்மைப்படும், முதன்மைப்படுத்தப்படும்.

அந்த வகையில் இலங்கையில் தோற்றுவிக்கப்பட்ட இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர ஆட்சி பீடமேறிய சிங்கள தேசியக்கட்சிகள் முன்வந்தன. இவர்களுக்கிடையேயான ஒரு ஒற்றுமையும் உண்டு. அது ஒரு கட்சி தீர்வை முன்னெடுக்கிறபோது மற்றையகட்சி அதை எதிர்ப்பது.


பொதுசன ஐக்கிய முன்னணி முன் நிறுத்திய தீர்வை கட்சிதமாக எதிர்த்து ஐக்கிய தேசியக்கட்சி இப்பொழுது ஆட்சி பீடமேறி, தீர்வை முன்வைப்பதற்கான சூழலை உருவாக்கி வருகிறது. இதனையே விடுதலைப்புலிகளும் ஏகமனதாக விரும்புவார்கள். இதனையே பொதுசன ஐக்கிய முன்னணியும் சூழலை உருவாக்கும் காலத்தை இறுதிவரை நீட்ட இருந்தது. குறுகிய காலத்துக்குள் தீர்வை எட்டி, வரலாற்றில் ஒரு பதிவை ஏற்படுத்த முன்வைத்த ஜனாதிபதி சந்திரிகா மண் கவ்வியதுதான் மிச்சம்.

ஆனால் இப்பொழுது தோற்றவிக்கப்படும் அல்லது தோற்றுவிக்க முயற்சித்துக் கொண்டிருக்கும் “இயல்நிலையில்”, “ஓடு மீன் ஓட..... உறு மீன் வரும் வரை காத்திருக்குமாம் கொக்கு” இங்கு கொக்கு வேலுப்பிள்ளை பிரபாகாரனா? ரணில் விக்கிரமசிங்கவா? என்பதுதான் “இயல்பு நிலை”யின் இறுதிக் கட்டம்.

அவ்வாறு தோற்றுவிக்கப்படும் இயல்பற்ற நிலையை தமக்கு அல்லது தாம் சார்ந்தவர்களுக்கு சார்பாக அமைத்துக்கொள்ள அந்தந்த சமூகம் சார்ந்தவர்கள் குறிப்பாக தொடர்புசாதனங்கள் அதுவும் பத்திரிகையாளர்கள் “நடுநிலைமை” என்கிற பதத்துடன் கவட்டால் உலகளக்க முனைவர் என்பது திண்ணம்.

இன்னொரு விடயத்தையும் இங்கு குறிப்பிடுவது நன்று சிங்கள மக்களில் முற்போக்குச் சிந்தனையாளர்கள் தமிழ் மக்களின் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று வெளிப்படையாகவே குரல் எழுப்பிவருகிறார்கள். இவர்களுக்கிடையிலேயும் சரி, தமிழ் புத்திஜீவிகளுக்கிடையிலேயும் சரி விடுதலைப் புலிகளின் மனித உரிமை மீறல் தொடர்பாக இப்பொழுது கதைக்கத் தேவையில்லை என்று இருந்துவந்த கருத்து தற்போது மாறிவருகிறது.. மனித உரிமைகளைப் பாதுகாக்கும் சமாதானத்தை வலியுறுத்த வேண்டிய தேவை தலைக்குமேல் பாரமாகிவிட்டதுபோல்...!


# சமாதான முயற்சிகளுக்கு உதவுமாறு ஜப்பானில் மாக சங்கத்தினர் கோரிக்கை!



ஐக்கிய இலங்கை என்ற வரையறைக்குள் இனப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வைக்கண்டு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கம் மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு மகாசங்கத்தினர் முழுமையான ஆதரவை வழங்குகின்றனர். அதனால் இந்த சமாதான முன்னெடுப்புக்கள் வெற்றிவெற ஜப்பானியரும் ஜப்பானில் வாழும் இலங்கையரும் முழுமையான ஆதவையும் ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும் என சமாதானத்திற்கும் அபிவிருத்திகுமான மகாநாயக்க தேரர் அமைப்பு ஜப்பானில் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது. இந்த அமைப்பைச் சேர்ந்த மகாநாயக்க தேரர்களான ரம்புக்வெல்ல ஸ்ரீ விபஸ்ஸி தேரர், உடுகம சத்தர் மகீர்த்தி தேரர், மடியே பஞ்ஞாசிரீ தேரர், வேவெல்தெனிய மெதாலங்கார தேரர் ஆகியோரே மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

**"ஐக்கிய இலங்கைக்கு தீர்வு என்ற வரையறைக்குள் மகா சங்கத்தினர் இந்த சமாதான முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றனர்."**

இவர்கள் ஒரு வாரகால விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜப்பானிய பௌத்த அமைப்பான ஹீரோகோஹீ-காய் அழைப்பின் பேரில் தற்போது ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ளனர்.



இலங்கையில் தற்போது தொடர்ந்து கொண்டிருக்கும் சமாதான முன்னெடுப்புக்களின் முன்னேற்றம் பற்றி ஜப்பானியருக்கு விளக்கம் அளிப்பதற்காகவே இந்த நான்கு தேரர்களும் ஜப்பான் சென்றுள்ளனர். இம்மாதம் 6ம் திகதிவரை அங்கு தங்கிருக்கும் அவர்கள் இலங்கை அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் பற்றி ஜப்பானியருக்கு விளக்கும் வகையில் அங்கு விடுத்துள்ள அறிக்கையொன்றின் மூலம் பின்வரும் வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

அவர்களின் வேண்டுகோள் வருமாறு தொடரும்

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவும் இனைப்பிரச்சினைக்கு சமாதான வழியில் நிரந்திரத்தீர்வைக் காணவும் அரசாங்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அயராத முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றது.

ஐக்கிய இலங்கைக்கு தீர்வு என்ற வரையறைக்குள் மகா சங்கத்தினர் இந்த சமாதான முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றனர்.

அது போன்று ஜப்பானியரும் ஜப்பானில் வாழும் இலங்கையரும் இந்த சமாதான முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவை வழங்கவேண்டும். ஜப்பானில் வாழும் இலங்கையர் இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்க முன்வரவேண்டும்.

தொடர்ந்து கொண்டிருந்த யுத்தம் காரணமாக இந் நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாக பாதிக்கபட்டிருக்கிறது.

ஜப்பானிய தனியார் துறையின் இலங்கையின் பொருளாதார உறுதிப்பாட்டுக்கும் மேம்பாட்டுக்கும் உதவவேண்டும். இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் புலிகளுடன் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் யுத்த நிறுத்தம் தொடர்கின்றது.

அதன் மூலம் நாட்டில் தற்போது அமைதி ஏற்பட்டிருக்கிறது. புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவாத்தைகள் இம்மாதம் ஆரம்பமாகவிருக்கின்றது.

அதனால் தொடரும் சமாதான முன்னெடுப்புகள் வெற்றி பெறுவதற்கு ஜப்பானிய மக்களதும் தலைவர்களினதும் முழுமையான ஒத்துழைப்பை அவசியமாகின்றது.

குறிப்பாக வடக்கு கிழக்கு பகுதிகளில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளவும் மக்களின் வாழ்க்கை நிலைமை மேம்படுத்தவும் சர்வதேச உதவிகள் தேவைப்படுகின்றன.

அப்பகுதிகளில் விவசாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு மழை நீரை தேக்கி வைக்கவும்.


நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்தவும் உதவிகள் தேவைப்படுகின்றன.

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகி 50 வருடங்கள் நிறைவடைந்த நிலையில் இந்நாட்டின் சமாதான முயற்சிகள் வெற்றிபெற ஜப்பானின் உதவி அவசியம் தேவைப்படுகின்றது.❒

# முரண்பாட்டுச் சூழ்நிலையில் செய்தி அறிக்கையிடுவதற்கான சாதனங்கள்

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும், சர்வதேச ஊடக ஒத்துழைப்பு(IMS) அமைப்பும் இணைந்து நடாத்திய பத்திரிகையாளர்களுக்கான கருத்தரங்கு

2002 யூன் 13-15 ந்திகதி வரை இரு நாள் கருத்தரங்கு களுத்துறை கோல்டன் சன் ரிசோர்டிலும், 19ம் திகதி ரேணுகா ஹோட்டலிலும் நடைபெற்றது.




இங்கு பிரதான கருத்துரையும், பயிற்சி பட்டறையும் வழங்கிய சர்வதேச ஊடக ஒத்துழைப்பு அமைப்பின் பிரதிநிதி ரோஸ் ஹார்வர்ட், சர்வதேச ரீதியில் முரண்பாட்டுச் சூழ்நிலைகளின் தகவல்களை செய்தி அறிக்கையிட்டதின்பின் ஏற்பட்ட சாதக, பாதக நிகழ்வுகளை விபரித்தும் சுதந்திர ஊடகத்தின் தேவையின் பெறுமதி குறித்தும் கருத்துக்களை தெரிவித்தார். இங்கு மூவின பத்திரிகையாளர்களும் கலந்துகொண்டு இலங்கையில் சுதந்திர தகவல் சேகரிப்புத் தொடர்பாகவும், சுதந்திரமான தகவலை தெரிவிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அதன் பின் இலங்கையில் முரண்பாட்டுச் சிக்கல்களை அறிக்கையிடும்போது உண்மையான தகவல், பக்கசார்ப்பின்மை, பொறுப்புணர்ச்சி போன்ற தேவையின் முக்கியத்துவம் கருதி கலந்துகொண்ட பத்திரிகையாளர்களுக்கு ரோஸ் ஹார்வர்ட் சில பயிற்சிகளையும் வழங்கினார்.

இந்த நிகழ்வின் பின்னும் சர்வதேச ஊடக ஒத்துழைப்பு அமைப்பு , இலங்கையில் இவ்வாறான பயிற்சிப் பட்டறைகளை தொடர்ந்தும் நடாத்த திட்டமிட்டுள்ளது.


## பிணைவு

வெவ்வேறாய்
பதியங்கொண்டிருந்தாலும்
உனக்கும் எனக்குமான
பிணைப்பு
ஒட்டுச் செடிக்கு உரித்தான
ஒன்றல்லவா?



பின்னுமொரு
சித்திரைப் பௌர்ணமியில்
உள்ளக் கணுக்கள் நெகிழ்ச்
சட்டென்று விட்டன
சின்னஞ் சிறிய மொட்டுகள்
அவற்றிடையே
செம்மையும், இதழும் செழுமையும்
ஒன்றை மிஞ்சிய ஒன்றாய்த்
ததும்பித் துளித்துக் கிடந்தன.

அந்த வருடத்தின் கடை
இறுதிகளில்
உப்புக் காற்றும் அலைக்கரையும்
அதிகாலை நிர்மலத்தால்
கலங்கள் சிலவற்றை
இழைத்துப் போட்டன.
உயிர்காற்றின் ஒலித்தடத்தில்
இழையங்கள்
மெல்லவே மெல்லவே
உரம் பெற்றுத் தேறின.



உன் செவிப்பறைக்கு
என் சொற்கள் புரிகிறதா?
வாழ்வின் உயிர்ப்பை
உயிர்ப்பின் இருப்பை
இருப்பின் தேடலை
புரிந்துகொள்.
அப்போதுதான் மாசிமாதத்து
மஞ்சள் பேராதனை மலர்களாகப்
பு,த்துக் குவிந்து கிடப்பது
நமக்கும் சாத்தியமாகும்.


(03.05.1997)

ஆழியாள்
நன்றி : உரத்துப்பேச

## பிரார்த்தனை

பிரார்த்தனைகளினால் பயனளித்தது, அளிக்கின்றது, அளிக்கும் இதற்காக இன்னுமொரு பிரார்த்தனையை சமாதானத்துக்காக உழைப்பவர்களுக்காக செய்ய வேண்டும். எதற்கும் இடைவெளிகள் நீண்டுபோனால் சமமற்ற நிலைகள், முரண்பாடுகள் அதனை நிரப்பிக்கொள்ளும். நீண்டகாலமான பிரார்த்தனைகள் அருகில் நம்பிக்கையை கொண்டு வந்துவிட்டது. அதற்கு நாம் மிகவும் அருகாக செல்ல வேண்டும் அப்போதுதான் எமது சமாதானப் பிரார்த்தனைகள் பலிக்கும். மக்கள் நாம் எமது பிரார்த்தனைகளை நமக்காக சரிவரச் செய்திருக்கிறோம் ஏனெனில் எங்களுக்கு உழைப்பவர்களுக்காக எம்மை பிரார்த்தனையில் ஈடுபடச்சொல்லி யாரும் கூறவில்லை. இங்கே பழையிருககலாம் எமக்கு சமாதானத்தை தேடித்தர முடியுமானவர்களின் நலனுக்காக நாம் பிரார்த்திப்போம் அவர்கள் அவர்களுக்காக தேடவில்லை.... எங்களுக்காக தேடுகிறார்கள். அவர்கள் மீது மிகுந்த நம்பிக்கைகொண்டு நாம் அவர்களுக்காக பிரார்த்திப்போமாக.... அப்போது அவர்களால் அவர்களுக்கான தேடலில் எங்களின் உழைப்பை இல்லாதொழிக்க மாட்டார்களென நம்பிக்கைகொண்டும் அவர்களுக்காக பிராத்திப்போமாக...... இங்கே இனம், மொழி, சாதி, பால், பெரும்பான்மை, சிறுபான்மை ஆகியற்றை உங்களோடு வைத்துக்கொண்டு அவர்களுக்காக பிரார்த்திப்போமாக......!


-சமாதான பக்தன்-



# நீட்சே 1

*பக்கம் 2*
*துண்டம் 562 (அதிகார விருப்பு) :*

யுத்த விரும்பிகளும், சாத்வீகவாதிகளும் :
போர்க் குணத்தை
உனது இயற்கைச் சுபாவத்தில் கொண்டுள்ள மனிதன் நீ?
அவ்வாறெனில்,
இதோ உன்னிடத்தில் இன்னுமோர் இரண்டாவது
கேள்வி : உன் போர்ச் சுபாவம் தற்காப்பானதா?
அல்லது
முன்னெடுப்பானதா?
சுபாவத்தில் போர்க்குணமற்ற மிகுதி மனிதர்கள் எல்லோரும்
வேண்டுவது!
சமாதானம், அமைதி, சுதந்திரம், சமநீதி
எனப் பல்வேறு
பெயர்கள் கொண்ட ஒரே விடயத்தையே.
தற்பாதுகாப்பிற்காகப் போராட வேண்டி ஏற்பட்டால்,
அதிருப்தியடைந்து,
போய்விடும் இம் மனிதர்கள் விரும்புவதெல்லாம்
யுத்தமில்லா நாடொன்றை உருவாக்குவதே.
போனால் போகட்டு மென்று அடங்கிப்
போவதையும்,
அடி பணிவதையும்,
கட்டளைக்குட்படுவதையும் கூட இவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.
யுத்தத்தைவிட அனைத்தும்
இவர்களுக்கு மேன்மையானது.
கிறிஸ்தவ இயற் சுபாவமும் இவ்வாறுதான்
ஆலோசனை வழங்குகின்றது.
பிறப்பால் போர்க்குணம் கொண்டவர்தம் நடத்தையில்,
அவர்கள் வாழும் பிரதேசத்தின் தெரிவில்,
அவர்களின் புலன்
வளர்ச்சிகளில் எல்லாமே ஒரு
போர்க்களையிருக்கும்.
இவ்வாறானவர்களிடம் அதிக
அபிவிருத்தியடைந்திருப்பது ஆயுதங்கள்,
மற்றவர்களிடம் உள்ளதோ
தற்பாதுகாப்புக் கருவிகளே.
ஆயுதமுமற்று, பாதுகாப்புமற்றவர்களிடம்
அறிவியலிருக்கின்றது.
ஒரு நாள்
வெற்றி கொள்ள எண்ணி........




-சஞ்சன ஹெத்தொட்டுவ-

# இலங்கையில் பயங்கரவாதத்தின் தோற்றப்பாடுகள் !

இராணுவ ரீதியில் பலம்பொருந்திய பிரிவினைவாத கெரில்லா இயக்கமென்று தமது தனிநாட்டு இலட்சியம் சம்பந்தமான பேச்சுவாத்தை மூலமான தீர்வொன்றைத் துடிப்பாக நாடும் நிகழ்வுத்தொடர்பில், பயங்கரவாதம், இனவாதப் பதற்றங்கள் மற்றும் மோசமான ஆட்சிச்செயல்முறை என்பவற்றால் படுமோசமாகப் பாதிப்புற்ற தேசமாகிய இலங்கையில் பயங்கரவாதத்தின் இயக்கவியலைப் பரிசீலனை செய்வது பயனுள்ளதாகும்.

ஓர் உலகளாவிய நிகழ்வுத் தொடர்பில் பயங்கரவாதத்தின் தீமைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், அதை முற்றாகவே ஒழித்துக்கட்டுதவதற்கும் அடுத்தடுத்து வந்த பல்வேறு ஆட்சிக்குழுக்கள் முயற்சிகளை முன்னெடுத்தன. அமெரிக்காவின் தலைமையில் தற்போது இடம்பெற்றுவரும் இது குறித்த முயற்சிகள் பயங்கரவாதத்தைக் கையாளும் பலர் அதைப்பற்றியோ, அல்லது அதை ஒழுக்குவதற்குத் தாம் எடுக்கும் நடவடிக்கைகளின் பலாபலன்கள் குறித்தோ உண்மையில் எதுவுமே அறியாதவர்களாக இருக்கின்றனர். பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக அல்லது அவர்களுக்கு எதிரான இரு துருவங்களைக் கொண்டதாகத் தோற்றமளிக்கும் உலகில் பயங்கரவாதத்துக்கெதிராகப் போராடுவதென்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கும் நாகரீகமாக மாறியுள்ளது. ஆயினும், பயங்கரவாதத்தை வேரறுப்பதற்காக என்று கூறப்படும் கூச்சல்களும், நடவடிக்கைகளும் எப்பொழுதும் மாபெரும் பயங்கரவாத எதிர்ப்புப் பிரச்சாரக் காரர்களின் வெற்று வங்குரோத்துத் தன்மையை மூடி மறைப்பவையாகவே இருக்கின்றன. இவர்கள் புயலில் காலநிலைக்காற்றாடிகள் போன்று தமது சொந்தக்கற்பனையுலகில் சுற்றிச் சுழன்று ஓசையெழுப்புகின்றனர். இங்கு பயங்கரவாதத்தின் வெளிப்பாடுகளுக்கெதிரான போராட்டங்களில், பயங்கரவாதத்துக்கான உண்மையான காரணங்கள் உதாசீனம் செய்யப்படுகின்றன. இங்கு முரண்பாடுகளின் எல்லைக்கொடுகளைத் தீர்மனிப்பது அகங்காரங்கொண்ட சுயநலன்களாகும். இங்கு நணர்பர்களையும், எதிரிகளையும் இனங்காணுவது சுய-பாணியிலான பயங்கரவாத எதிர்ப்பு முன்னணிக்கு அவர் எவ்வளவு தூரம்

கைகட்டிச்சேவகம் செய்கின்றாரென்பதைப் பொறுத்தாகும்.

## பயங்கரவாதம் குறித்த வரைவிலக்கணத்தை நோக்கி

யதார்த்தம் சிறிது வித்தியாசமானது, பலநாடுகளில், சட்டவாக்கம் பயங்கரவாதத்தைக் கையாளுவதாகக் கூறியபோதிலும் அவற்றள் எவையுமே பயங்கரவாதத்துக்கான வரைவிலக்கணத்தை இதுவரை கூறத்துணியவில்லை. ஆகவே, பயங்கரவாதமென்றால் உண்மையில் என்ன?

இந்த அடிப்படையில் பயங்கரவாதமென்பதை அரசியல் அல்லது சமூக மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் சிவிலியன் மக்களுக்கெதிராக வன்செயலைப் பிரயோகிப்பது அல்லது வன்செயலைப் பிரயோகிப்பதாகப் பயமுறுத்துவது என்று கூறலாம். மேலும், பயங்கரவாதம், நியாயப்படுத்த முடியாத அரசியல் நடவடிக்கையென்று நாம் சிந்திக்கையில் (பிரத்தியேகமாகத் தற்கொலப் பயங்கரவாதம்) பயம், குழப்பம் மற்றும் சரணாகதிபோன்ற தாக்கங்களை அது ஏற்படுததுவல்லது என்பதால் பயங்கரவாதத்தை ஒரு காரண, காரியத் தொடர்பு கொண்ட செயற்பாடென்றும் கூறலாம்.

இன்று பயங்கரவாதத்தை நவீன தேச அரசு நிகழ்வுத்தொடர்பில் நோக்குதல் வேண்டும். உண்மையில் அது அதிகாரத்துவ அரசு ஒன்றின் மேலோங்குகை ஆகும். மக்களிடையே பதற்றச்சூழலை உருவாக்கி, அரசாங்கத்தில் நம்பிக்கையைச் சீர்குலைப்பதற்காக பயங்கரவாதிகளின் இலக்குகளின் நோக்கெல்லைகளை விரிவுபடுத்துமாறு கோரி அவர்களைப் பலவந்தப்படுத்திய தலைவரின் மரணம் இந்த அரசை அழித்துவிட முடியாது. இந்த யதார்த்தம் கடந்த



100 வருடகால வன்செயல் பயங்கரவாதத்தினுள் புதைந்து கிடக்கிறது.

பயங்கரவாதம் குறித்த தெளிவான ஒரு வரைவிலக்கணம் பயங்கரவாதத்தை உருவாக்கும் பரந்த சமூக-பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் கவனம் செலுத்துதல் வேண்டும். நாம் செய்யவேண்டியதெல்லாம் இஸ்ரேல்-பலஸ்தீனப் பிரச்சினையில் இரு தரப்பையும் நோக்குவதேயாகும். அரச பயங்கரவாதம் உள்ளிட்ட வன்செயல், அடிப்படை சமூக மனக்குறைகளைத் தீர்க்காத வரையில் மேலும் வன்செயல்களைத் தடுக்க உதவமாட்டாதென்பதே புரிந்துகொள்ளப்பட வேண்டியதாகும்.

மேலும், பயங்கரவாதம் குறித்த வரைவிலக்கணம் தனிநபர் சுதந்திரங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், அரசு எதிர்நோக்கும் சிக்கல்களுக்கெதிராகப் பாதுகாப்பு வழங்கும் சட்ட ஏற்பாடுகளுக்கும், தனிநபர்களின் செயற்பாடுகளுள் தீவிரமாக்க குறிக்கீடு செய்யாமல் ஜனநாயகச் செயல்முறைகளைப் பாதுகாப்பதற்குமிடையிலான சமநிலைப்படுத்தும் ஒரு முயற்சியாகவிருத்தல் வேண்டும். தனிநபர் சுதந்திரங்களுக்கும், மனித உரிமைகளுக்கும் இறுதி உத்தரவாதம் வழங்கக்கூடிய ஜனநாயகச் செயல்மறையைப் பேணுவதே பயங்கரவாதம் குறித்த எந்த வரைவிலக்கணத்திலும் முதன்மை பெறவேண்டிய விடயமாகும்(எக்ஸ்.மஹிந்தபாலவின் "பயங்கரவாதத்தை வரைவிலக்கணப்படுத்தல்" நூலைப் பார்க்கவும்)

ஆகவே பயங்கரவாதம் குறித்த ஒரு தனியான வரைவிலக்கணம், இப்பதத்தின் சகல, சாத்தியமான உபயோகங்களையும் விளக்கப் பயன்படமாட்டாது. இலங்கை நிகழ்வுத்தொடர்பில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதுடில்லியில் சமீபத்தில் ஆற்றிய முதலாவது மாதவராவ் ஸ்கிந்தியா நினைவுப் பேருரையில் பயங்கரவாதம் குறித்த பயனுள்ள ஒரு வர்ணனையைக் கொடுத்துள்ளார். பயங்கரவாதத்தின் காரணங்களுக்குப் பரிகாரம் தேடாமல் பயங்கரவாத்தை ஒழிக்க முடியாதென்று அவர் அறிவார்ந்த அவதானிப்புரையைச் செய்துள்ளார். "பயங்கரவாதத் தந்திரோபாயங்களையும், கொலைகளையும் அரசோ, அரசாங்கமோ சகித்துக்கொள்ள முடியாது, சகித்துக்கொள்ளக்கூடாது. பயங்கரவாதத்தை ஓர் அரசியல் உத்தியாக ஏற்றுப்பிரிவு காட்டும், மற்றும் பங்கேற்கும் சகல தனிநபர்களுக்கும் இயக்கங்களுக்கும் எதிரான கடுமையான, வினைத்திறனுள்ள, விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். ஆயினும் இத்தகைய இயக்கங்கள் உருவாகுவதற்குக் காரணங்களாக அமைந்த மனக்குறைகள் தீர்க்கப்படுதல் வேண்டும்." அவர் மேலும் பின்வருமாறு கூறினார். "மக்களின் காரண, காரியத்துடனான அரசியல் விரக்தி நிலையை ஏற்படுத்தும் போது முழு அளவிலான பயங்கரவாதத்தை அவை உருவாக்குகின்றன. இத்தகைள அபிலாசைகளை பயங்கரவாத நடவடிக்கைச் செயல்முறைகளிலிருந்து நாம் பிரித்துப் பார்க்க வேண்டும்."(உரையின் முழு

வாசகமும் அவசியமெனில் www.presidentsl.org வெப்தளத்தைப் பார்க்கவும்.) இத்தகைய வரைவிலக்கணமொன்றை இது காலவரை இலங்கையில் சந்திரிகாவே இத்தனை தெளிவாக எடுத்துரைத்ததில்லை. ஜனாதிபதியின் "சமாதானத்துக்கான யுத்தம்" உத்தியும் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை முன்னெடுக்கையில் பயங்கரவாதிகளைத் தனிமைப்படுத்தும் உத்தியே ஆகுமென்று ஒருவர் வாதிடக்கூடுமெனினும், இந்த உத்தியின் படுதோல்வி இலங்கை அரசின் முக்கியமான தோற்றப்பாடொன்றை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. ஆதிக்க அதிகார கட்டமைப்புகள் பயங்கரவாதத்துக்கு அடிப்படையான காரணங்களை அறிவதில் உண்மையான அர்ப்பணிப்புணர்வுடன் மோதலுக்கான தீர்வை நாடுவதில்லையென்பதே இதுவாகும்.

தற்போதைய மோதலின் வேர்கள் பிரித்தானியக் குடியேற்றவாதத்தில் உள்ளனவென்று கூறுவது இலகுவாகும். அவர்களின் சக்கராதிபத்தியக் கலைகூட்டம் முழுவதும் சிங்களவர் மற்றும் தமிழர் மத்தியிலிருந்து ஆங்கிலம் பேசும் சலுகைபெற்ற வர்க்கமொன்றை உருவாக்கியே பிரித்தானியர் இலங்கையை ஆண்டனர். இவர்களின் இந்தச் சலுகைவாதம் இன, மத பேதங்களோடு கூடிய எதிர்ப்புணர்வைத் தோற்றுவித்தது. சலுகை பெற்ற வர்க்கத்தை சேராத பெரும்பான்மையோர் சிங்களத்தைப் பேசியதோடு, பௌத்தர்களாகவும் இருந்தனர். அவர்கள் "ஆரிய இனம்" என்றும் சிங்கள உயர்நிலைவாதத்தை முன்னேற்றினர். சுதந்திரத்தின் பின்னர் இச் சிங்களம் பேசும் குழுவே இலங்கையின் புதிய அரசின் கட்டுப்பாட்டைப் பெற்றுக்கொண்டனர். அவர்கள் உயர்கல்வி, வேலைவாய்ப்புகள் மற்றும் காணி உரிமை போன்ற விடயங்களில் தமிழர்களைப் புறக்கணித்தனர். சிங்களத்தை ஒரேயொரு அரசகரும மொழி ஆக்கியதன் மூலம் இதைச் சாதித்தனர். இப்புறக்கணிப்பையும், பாரபட்சத்தையும் தமிழ் மக்கள் வெறுத்தத்தில் ஆச்சரியமில்லை. மானிட நாகரீகவியலாளர் ஸ்டான்லி தம்பையா கூறியது போன்று இனத்துவ எல்லைக்கோடுகள் குறித்த இறுக்கமான, செயற்கையான எண்ணங்களை அடிப்படையாகக்கொண்ட குடியேற்றவாதகால மற்றும் குடியேற்றவாதகாலத்துக்குப் பிந்திய கொள்கைகளின் விளைவே நாட்டில் நிலவும் இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்கால வன்செயல் ஆகும்.(எஸ்.ஜே.தம்பையா : "இலங்கை : இனத்துவ சகோதரப்படுகொலைகளும், ஜனநாயகத்தின் வீழ்ச்சியும்", சிக்காகோ பல்கலைக்கழகம் அச்சகம், 1986. இலங்கையின் வன்செயல் கலாசாரம் குறித்த மேலுமொரு நுண்ணறிவுக்கு புரூஸ் காப்பெரர் "மக்கள் மற்றும் அரசு குறித்த கட்டுக்கதைகள்" நூலைப் பார்க்கவும் சிமித்சோனியன் நிறுவன அச்சகம் - 1988.)

மேலும், இலங்கையில் பயங்கரவாதத்தின் ஆரம்பம் அரச பயங்கரவாதத்துடன் பிரிக்கமுடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ளது. 1940 களிலிருந்து 30 வருடகாலமாக அடுத்தடுத்து



ஆட்சிக்கு வந்த, அரசாங்கங்கள் உயர்தொழில்களிலும், அரசுத்துறையிலும் தமிழர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தன. இந்த நடவடிக்கைகள் மிகவும் துடிப்பான தூய சிங்கள, பௌத்த மதவாதத்துடன் சேர்ந்து படிப்படியாக இலங்கை அரசை வழிநடத்தும் தத்துவார்த்தமாக மாறியது. பிரத்தியேகமாக திடீர் முன்னேற்றம் நாடும் தாழ்ந்த குலத்தை சேர்ந்த சிங்களவர் தமிழருக்கெதிரான பேரினவாதம் பரவுவது தமக்குப் பொருளாதார வாய்ப்புகளை அதிகரிக்குமென்பதைக் கண்டுகொண்டனர். காலப்போக்கில் இப்பேரினவாதத்துக்குத் துணைபோகும் தேர்தல்கால வாக்குறுதிகள் மிகவும் பரந்த மனப்பான்மை கொண்ட சிங்கள அரசியல்வாதிகளையும் சீரழித்தது.

தமிழர்களின் நலன்களை மிகவும் மோசமாகப் பாதிக்கும் சட்டவாக்கம் எஸ்.டபிள்யூ.ஆர.டி.பண்டாரநாயக்கா அரசின் மொழிக்கொள்கை மூலம் அறிமுகமானது. 1956 இன் "சிங்களம் மாத்திரம்" சட்டம் உத்தியோக பூர்வ அரசாங்கப் பணிகளுக்கு உரியதாகவிருந்த ஆங்கிலத்தை அகற்றி சிங்களத்தை அதனிடத்தில் பிரதியீடு செய்ததால் பெரும் எண்ணிக்கையினரான தமிழ் மக்கள் தெளிவாகவே பாதிக்கப்பட்டனர். இதன் விளைவாகத் தமிழர் பிரதேசங்களில் பரவலான எதிர்ப்புப் போராட்டங்கள் வெடித்தன. பாடசாலை அதிபர்கள் சிங்களம் கற்பிப்பதை அனுமதிக்கவில்லை. பாடசாலைப்பிள்ளைகள் சிங்கள மொழியைப் படிக்க மறுத்தனர்.

ஆயினும் தமிழ் மக்களுக்கு இறுதி ஆத்திரமூட்டிடலாக அமைந்தது 1970 களின் ஆரம்பத்தில் பல்கலைக்கழக அனுமதிகளில் இனத்துவக் கோட்டாக்களை அறிமுகப்படுத்தியதாகும். இதனால் தகுதிவாய்ந்த தமிழ் மாணவர்களுக்கு பல்லைக்கழக அனுமதிகளில் இனத்துவக் கோட்டாக்களை அறிமுகப்படுத்தியதாகும். இதனால் தகுதிவாய்ந்த தமிழ் மாணவர்களுக்கு

பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்டது. இதனாலேயே இனத்துவ எரிமலை குமுறிவெடித்தது. "தரப்படுத்தலோடு" தமிழ் மக்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளுக்கு ஆப்பு வைக்கப்பட்டது. கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் கிட்டுமென்ற காரணத்தினாலேயே தமிழர்கள் முதலில் ஒற்றையாட்சி அமைப்புக்கு ஆதரவு தெரிவித்து வந்தனர். பெரும் எண்ணிக்கையினரான தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் தனித்தமிழ்நாடு ஒன்றிலேயே தமது சமூக, பொருளாதார அபிலாஷைகள் நிறைவேறுமென்ற முடிவுக்கு வந்தனர். 1983 முதல் இலங்கையை ஆட்டிப்படைக்கும் இரத்தம் சிந்தும் பயங்கரவாதம் தமக்கு அரசியல் அதிகாரம், வேலைவாய்ப்பு மற்றும் கல்வி வாய்ப்புகளை வழங்க மறுக்கும் ஓர் அரசு முறைமையுள் பணியாற்றுவதற்குப் பல தமிழர்கள் மறுப்புத் தெரிவித்தமையால் மேலும் தீவிரம் பெற்ற ஒன்றாகும். இந்த அரசு முறைமை சமூக, பொருளாதார சமத்துவமின்மைகளை மேலும் அதிகரிக்கும் ஒன்றாகும்.

ஆயினும் எல்ரீரீஈ அமைப்பின் பயங்கரவாதத்துக்கும், தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்குமிடையில் வேறுபாடு காணப்படுதல் வேண்டும். ஐக்கிய இலங்கையும் கௌரவம், மற்றும் சமத்துவ உரிமைகளுடன் வாழ்வதையே பெரும்பான்மையான தமிழ் மக்கள் விரும்புகின்றனர். மறுபுறத்தில், எல்ரீரீஈ அமைப்பு தமிழ் ஈழ அரசு ஒன்று மாத்திரமே வடக்குக்கிழக்கில் தமிழ் மக்களின் சமத்துவத்தையும், சுய-கௌரவத்தையும் உறுதி செய்யுமென்று நம்புகிறது. அரசுக்கெதிரான எல்ரீரீஈ பயங்கரவாதம் இலங்கைத் தமிழ் மக்களின், அபிலாஷைகளை நீண்டகாலம் உதாசீனம் செய்த அரசின் ஆணவப்போக்குக்கு எதிரான வெளிப்பாடாக இருக்கையில், அதைத் தமிழ் மக்களின் அபிலாஷைகளளோடு சமப்படுத்த முடியாது. அவர்கள் வடக்கு-கிழக்கில் எல்ரீரீஈ அமைப்பின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கின்றனர். ஆயினும் அது செயலாற்றும் முறைகளை அவர்கள் ஆதரிக்கவில்லை.

## அரச மதமும், மோதலும்

இலங்கையில் அரசியல் தத்துவார்த்தம் மற்றும் வகுப்புவாத வரலாற்றியலோடு சேர்ந்து, அரசுடான பௌத்தமத உறவுகளும் பிரச்சினைகளை அதிகரித்துள்ளன. பௌத்த மத ஐதீகம் இவ்வுலக விடயங்களை ஒதுக்கித் தள்ளுகையில் தனிப்பட்ட மதகுருமார் அரசியலில் ஈடுபடுவதற்கும், சமூகத்தை "நல்ல முறையில்" திருத்தியமைப்பதற்கும் அனுமதிக்கின்றன. புத்த மதத்தலைவர்கள் தாம் நினைத்த நேரங்களிலெல்லாம் அரசியலில் ஈடுபடுபவர்களாகவும், பிரத்தியேகமாக பௌத்த மதத்தின் மேல்நிலையையும், இலங்கையின் ஆட்புல ஒருமையையும் நிலை நாட்ட வேண்டுமென்பதில் துடிப்பாக இருந்து வந்துள்ளனர்.

இந்தப் பிரச்சினைகளிலும், மொழிபோன்ற ஏனைய விடயங்களிலும் பௌத்த குருமார் இலங்கை அரசியல் வாழ்வில் பெரும் செல்வாக்குச் செலுத்துவோராக இருந்து வந்துள்ளனர். 1951 இல் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் பிரதமருக்கு அனுப்பிய தீர்மானம் "அரசாங்கம் பௌத்த மதத்தையும், பௌத்த நிறுவனங்களையும் பேணிப்பாதுகாக்கும் சட்ட, தார்மீக கடப்பாட்டைக் கொண்ட தாகும்" என்று தெரிவித்தது. பௌத்தமதம் அதற்குரிய முக்கியமான புனிதமான இடத்துக்கு மீட்டெடுக்கப்பட வேண்டுமென்றும் அது கோரிக்கைவிடுத்தது. சுதந்திரம் பெற்றகாலத்திலிருந்து சகல அரசாங்கங்களும் சிங்கள பௌத்தர்களின் ஆதரவுக்காகப் பெரு முயற்சி செய்து வந்துள்ளன.

ஆயினும், இலங்கைப் பௌத்தர்கள் இலங்கையில் தமது மத விசுவாசத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்று பலமான நம்பிக்கை கொண்டுள்ளனரென்பதையும் நினைவில் கொள்ளுதல் வேண்டும். இலங்கையில் அரசியல் தலைவர்கள் பௌத்தத்தின் ஆதிக்கத்தை நிலைநாட்டவேண்டுமென்ற முயற்சியில் பௌத்த சங்கத்துக்குப் பெரிதும் மரியாதை கொடுத்தனர். தம்மை அவர்கள் ஆட்டிப்படைக்கினறனர். என்பதை அறிந்த பின்னரும் அவர்கள் மீது மதிப்பு வைத்தனர். ஆயினும் பௌத்த மதத்துக்கு வழங்கிய முக்கியத்துவம் இலங்கைத் தமிழ் மக்களின் நலன்களுக்கும், அபிலாஷைகளுக்கும் எதிரானதாக அமைந்துவிட்டது. இலங்கையில் சுதந்திரத்துக்குப் பிந்தியகாலத்து அரசியல் மீது செல்வாக்குச் செலுத்தி அதைத்தீர்மானித்த சிங்கள-பௌத்த மனப்பான்மை இலங்கை அரசியலிலும், சமூகத்திலும் சகிப்புத்தன்மையின்மையை மேசாமாக்கியதோடு, தற்போதைய இனத்துவ அரசியல் மோதலுக்குப் பெரும் காரணமாகவும் ஆகியுள்ளது.


## ஆட்சிச் செயல்முறை, ஜனநாயகம் மற்றும் பயங்கரவாதம்

மோதல் தவிர்ப்பு அல்லது தீர்வு முறைமையொன்றைக் கட்டியெழுப்பும் மிகவும் பொருத்தமான அடிப்படை ஜனநாயக ஆட்சிச்செயல்முறையே என்றும் பொதுவான அனுமானம் ஒரு சில விதிவிலக்குகளையும் கொண்டுள்ளது. ஜனநாயக முறைமையில் சமூகத்தில் முரண்பாடுகள் தோன்றுவதற்கு இடமளிக்கப்படுவதோடு, அவை வெளிப்பாடாக அமையவும், நிலை தகவுள்ள வழிகளில் அவை கையாளப்படவும் அரசியல் கட்சிகள், பிரதிநிதித்துவ பாராளுமன்றங்கள் போன்ற நிறுவனரீதியான வழிகளில் அவை தீர்க்கப்படவும் வழியுண்டு என்பதோடு அவை அடக்கியொடுக்கப்படுவது அல்லது உதாசீனப்படுத்தப்படுவது தடுக்கப்படுகிறது என்ற அனுமானத்தின் அடிப்படையிலேயே இது ஏற்படுகின்றது.

ஆழமாக வேரோடிய மோதல் குறித்த சக்திகளைக் கையாளும்போது இந்த அனுமானம் பிரத்தியேகமான முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

மூலவளங்கள் உண்மையாகவே அல்லது காணக் கூடிய வகையில் பாரபட்சமான வழிகளில் ஒதுக்கீடு செய்யப்படுதல், - காணி உரிமைகள், காணிவள உரிமைகள், பால், மத, இனத்துவ அடிப்படையிலான பாரபட்சங்கள் மற்றும் எண்ணிறந்த ஆழமான மனக்குறைகளுக்கான காரணங்கள் - என்பவை சம்பந்தமானவை சேர்ந்து பெருகிய கசப்புணர்வுகளை எடுத்துக் கூறக்கூடிய முறைமை ஒன்று இருத்தல் வேண்டும். இலங்கையில், ஆழமாக வேரோடிய இனத்துவ அரசியல் நிகழ்வுத்தொடர்பில் ஜனநாயக நிறுவனங்கள் மோதல்களை உண்மையில் இதுவரை தீர்க்காவிடினும், மோதல் தவிர்ப்பு அல்லது மாற்றம் குறித்த செயல்முறையை ஆரம்பிக்கும் அவற்றின் சாத்தியவள இயலுமை காரணமாக முக்கியத்துவம் பெறுகின்றன.("பயனுறுதியுள்ள ஆட்சிச்செயல்முறை மூலம் மோதல் தவிர்ப்பையும், முரண்பாட்டுத் தீர்வையும் முன்னேற்றுதல் : ஓர் எண்ணக்கரு மதிப்பீடும், இலக்கிய மீள்பார்வையும்" எனும் நூலைப் பார்க்கவும். இது ஓர் அபிவிருத்தி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் சட்டகத்தில் நல்லாட்சிச் செயல்முறை மற்றும் பன்மைத்துவ, ஜனநாயக விழுமியங்களின் பிரிக்க முடியாத தன்மை குறித்த யு.என்.டீ.பி ஆவணமாகும். http://magnet.undp.org/DOCS/crisis/mapexercise.htm )

ஆயினும், அரசு ஆதிக்கப்பாத்திரத்தை வகிக்கும் பல்-இனத்துவ, பன்மைத்துவ சமூகங்களில் பெரும்பான்மையோர் ஜனநாயகம் என்பது அறவே ஜனநாயகமல்லாதிருக்கலாம். இலங்கை போன்ற பன்மைத்துவ சமூகங்களில் பெரும்பான்மையோரின் ஆட்சியை உறுதிப்படுத்தும் ஒரு முறைமையை அபிவிருத்தி செய்வதன் மூலம் ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியாது. செய்யப்பட



வேண்டியது என்னவென்றால் தீர்மானமொன்றினால் பாதிப்புறுவோர், தீர்மானமெடுக்கும் செயல்முறையில் பங்குபற்றும் நியாயமான வாய்ப்பு உறுதியாகும் வகையில் அரசியல் நிறுவனங்களை உருவாக்குவதும், அரசை மீள் கட்டமைப்புச் செய்வதுமாகும். சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையில் அரசியலில் இத்தகைய அணுகுமுறை இல்லாமற்போனமை பொதுவான கொள்கையை வகுத்தமைப்பதில் பொதுமக்கள் அனைவரினதும் பங்களிப்பு இல்லாத நிலைமைக்கும், இனத்துவப் பதற்றங்கள், சமத்துவமின்மை உணர்வுகள் மற்றும் இனத்துவ ஜனசமூகங்களுக்கிடையிலான பகைமை என்பவற்றுக்கு இட்டுச்சென்றுள்ளது. : ("ஆபிரிக்க சர்வாதிகாரத்துக்கு அப்பால் : ஒரு கட்சி அரசின் நெருக்கடி", மோதல், பாகம் 25, இதழ் 2, 1965 சுமணசிறி லியனகேயின் "அதிகாரப்பகிர்வு மற்றும் அரசை ஜனநாயகப்படுத்தலில்"(1996) மேற்கோள் காட்டப்பட்டது)

மேலும், தேசிய ஒற்றுமைக்கும் வினைத்திறனுள்ள அரசாங்கத்துக்கும் ஒற்றையாட்சி, மற்றும் அதிகாரம் மத்தியில் குவிக்கப்பட்ட அரசாங்கம் அவியமென்று வாதிடுவதில் அர்த்தமில்லை. இனத்துவ பெரும்பான்மை அனேகமாக சகல சந்தர்ப்பங்களிலும் மத்தியில் பூரண அதிகாரத்தைக் கைப்பற்றுவதோடு, பிராந்திய மட்டங்களில் அதிகாரப்பகிர்வு இல்லாத நிலைமையில், மிகச்சிறந்த ஒற்றையாட்சி முறைமைகளில் கூட, சிறுபான்மையினரின் அபிலாஷைகள் மற்றும் உரிமைகள் உதாசீனப்படுத்தப்படும். இந்த நிலைமைகள் இலங்கையில் நிகழ்ந்ததுபோன்று தீவிர இனத்துவ மோதல்களை உருவாக்கி, தேசிய ஐக்கியத்தைச் சீர்குலைக்கும். இத்தகைய சூழ்நிலைகளில் சிறுபான்மையோர் ஐக்கிய இலங்கை என்ற எண்ணக்கருவை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஐக்கிய இலங்கையென்பது முழுக்க முழுக்க சிங்கள ஆதிக்கப் பெரும்பான்மையாகவே நோக்கப்படும்.

மறுபுறத்தில் அதிகாரப்பகிர்வு என்பது தாம் பெரும்பான்மையினராகவுள்ள பிராந்தியங்களில் சிறுபான்மையோர் மத்திய அரசாங்கத்துடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள உதவுவதோடு, தேசிய முறைமையில் விருப்புள்ள, பொறுப்பணர்வுள்ள பங்காளர்களாக மாறவும் வகைசெய்யும்.' ஒற்றையாட்சி முறைமைகளைவிட, அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் அரசாங்க முறைமைகள் தேசிய ஐக்கியத்தைப் பாதுகாத்து, முன்னேற்றும் கூடுதலான இயலுமையைக் கொண்டவையாகும்.

இனப்பிரச்சினையை ஒதுக்கிவிட்டுப்பார்த்தாலும், அதிகாரப்பகிர்வு அல்லது சமஷ்டி முறைமைகள் அரசாங்க முறைமைகளென்ற வகையில் ஒற்றையாட்சி முறைமைகளைவிட வினைத்திறன் அதிகரித்தவையாகும். இதற்கான மிக எளிமையான காரணம் அதிகாரப்பகிர்வு முறைமைகளில் ஒரு செயற்பாடு நடைபெறும் இடமாகிய பொருத்தமான மட்டத்தில் பொறுப்பையும், தீர்மானமெடுக்கும் அதிகாரத்தையும் வழங்கும் தத்துவங்

கையளித்தல் இடம்பெறுவதால், சிறந்த முகாமைத்துவக்கோட்பாடுகளுக்கு இடமளிக்கப்படுகிறது என்பதாகும். பிராந்திய மட்ட விவகாரங்களில் பொறுப்புகளிலிருந்து விலகியிருப்பதன் மூலம் மத்திய அரசாங்கம் தேசியக்கொள்கை மற்றும் தேசியப் பொறுப்புகள் போன்ற விடயங்க்ளில் அதிகரித்த வினைத்திறனுடன் செயலாற்ற முடியும். அதிகாரப்பகிர்வு அரசாங்கத்தின் அதிகரித்த ஒளிவுமறைவின்மை மற்றும் வகைப்பொறுப்பு என்பவற்றையும் உறுதிசெய்கின்றது. பிராந்திய அரசாங்கம் மக்களுக்கு நெருக்கமான ஒன்றாகவுள்ளது. அரசாங்கக் கொடுக்கல் வாங்கல்களையும், தெரிவுபெற்ற பிரதிநிதிகளின் நடத்தையையும் நுண்ணாய்வுக்கு உட்படுத்தலாம். சிவில் சமூகம் தொழிற்படவும், அரசாங்க முகவர் நிலையங்களோடு நெருங்கிப்பணியாற்றவும் கூடுதலான சந்தர்ப்பங்கள் கிட்டும்.(மேலும், ஆழமான, தகவல் பொதிந்த கலந்துரையாடல்களுக்கு 1996ல் பொ.ஐ.மு அரசாங்கத்தின் அரசியலமைப்பு பிரேரணைகள் குறித்த மார்கா நிறுவன தனியாக்கத்தொடர்களைப் பார்க்கவும். www.lanka.net/marga/link7.html )

அதிகாரப் பரவலாக்கல் முறைமையோடு கூடிய அரசாங்கமொன்று ஜனசமூகங்களின் தேவைகளைச் சரியான முறையில் நிறைவேற்றுவதால் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சமூக ரீதியிலான மனக்குறைகள், பீதிகள் மற்றும் சமத்துவமின்மை குறித்த தோற்றப்பாடுகள் பெருமளவுக்கு நீங்க வழிபிறக்கும். பயங்கரவாதத்தின் வேர்கள் அரசியலிருந்து அந்நியப்படுத்தப்பட்ட சூழல்களில் செறிந்திருந்தால், உள்ளூரில் தன்னாட்சி மற்றும் அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்ட பிராந்தியங்களில் அதிகூடுதல் அளவிலான சுயாட்சி என்பவை இனத்துவ அடையாளத்துக்கும் அப்பால் செல்லும் குடியியல் அடையாளத்தை ஏற்படுத்துவதோடு, எதிர்காலத்தில் பிரிவினைவாத, பயங்கரவாத இயக்கங்களையும் தடுக்கும்.

## இறுதிச் சிந்தனைகள்

மைக்கேல் வால்சரின் கூற்றப்படி "பங்கரவாதத்தின் பரவிப்படரும் தீமை நிரபராதிகளை மக்கள் கொல்லப்படுதல், நாளாந்த வாழ்க்கையில் பீதி, தனிநபர் நோக்கங்களில் தலையீடு, பொது இடங்களில் பாதுகாப்பு உணர்வின்மை, மற்றும் முடிவற்ற பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பவற்றை எற்படுத்துகின்றது."(மைக்கேல் வால்சர், "பயங்கரவாதத்தை மன்னித்தல்" அமெரிக்க கண்ணோட்டம், பாகம் 12, இதழ் 18, 2001) பங்கரவாதம் சலுகைகள் மறுக்கப்பட்டு, பாரபட்சங்களால் உதாசீனப்படுத்தப்பட மக்கள் ஆதிக்க அரசியல் கட்டமைப்புகளைத் தூக்கியெறியவும், மாற்றங்களைக் கொண்டுவருவதற்குமான இறுதிவழியென்ற அடிப்படைக் கோட்பாட்டு வாதத்தையும் அவர் நிராகரிக்கின்றார். கடைசி வழியைச் சென்றடைவது இலகுவானதல்லவென்று வால்சர் தெரிவிக்கின்றார். அரசியல் மீள் நிகழ்வுகள் குறித்த கலையாகும். ஆட்சிச் செயல்முறை குறித்த நடைமுறைக் கட்டமைப்புகளை ஜனநாயக ரீதியாக மாற்றியமைப்பதற்குத் தொடர்ந்து முயலுதல் வேண்டுமென்பதைப் பயங்கரவாதிகள் மிகவும் வசதியான முறையில் மறந்துவிடுகின்றனரென்றும் அவர் கூறுகிறார்.

இன்று இலங்கையில் தமிழர்களுக்கெதிராக மீண்டும் மீண்டும் இடம்பெறும் தொடர்ச்சியான பாரபட்சங்களே பயங்கரவாத இயக்கத்தை வளர்க்க உதவினவென்று கூறுவது அனேகமாக காலத்துக்கொவ்வாத ஒன்றாகவுள்ளது. இப்பொழுது நோக்கப்படவேண்டியது பயங்கரவாதத்தின் மட்டுப்படுத்தல்களையாகும். பயங்கரவாதிகளால் தாராளவாத ஜனநாயகம், பன்மைத்துவம் மற்றும் மனித உரிமைகளை ஒருபொழுதும் முன்னேற்ற முடியாது. இத்தகைய விழுமியங்கள் ஜனநாயக, பிரதான நீரோட்ட அரசியலுக்குரியவையாகும். இலங்கையிலும், உலகிலுமுள்ள பயங்கரவாதிகள் இறுதி அய்வில் உண்மையான சமாதானம், நீதி மற்றும் சமத்துவத்தை துப்பாக்கிக்குழல்கள் மூலம் சாதிக்க முடியாதென்பதையும், வாக்குச் சீட்டின் பலத்திலேயே அவற்றை ஈட்டிக்கொள்ள முடியுமென்பதையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். மேலும் மோதல் மாற்றச் செயல்முறைகள் மற்றும் ஜனசமூககங்களிடையிலான மீளிணக்கம் என்பவற்றுக்கு விரோதமாகச் செயற்படும் பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற சட்டவாக்கங்கள் நீக்கப்படவேண்டும் அல்லது குறைந்தபட்சம் திருத்தப்படவேண்டும்.(உத்தேச 18வது அரசியலமைப்புத்திருத்தம் இலங்கையில் இருதரப்புக்கருத்தொருமிப்பு அரசியலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதாகும். இது சமாதானச்செயல்முறைக்கும், இறுதித் தீர்வுக்கும்அவசியமானதாகும். இத்தகைய சட்டவாக்க விடயத்தில் இது கடந்தகாலத்தில் சமாதானச் செயல்முறைகளைக் குடை கவிழ்த்த கட்சி அரசியலுக்கு இட்டுச்செல்லும். உள்நோக்கங்களைக் கொண்டதென்ற எதிர்க்கட்சியின் கருத்துணர்வுக்கும் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.) தற்போதைய நிகழ்வுத்தொடர்பில் சமாதானச் செயல்முறை தோல்வியுற்றதால் அரசுக்கும், எல்ரீரீஈ அமைப்புக்கும் பாரிய இழப்புகள் ஏற்படும். வரலாற்று முன்னிகழ்வுகள், சர்வதேச நிகழ்வுத்தொடர்பு மற்றும் இலங்கையின் சகல ஜனசமூகங்களினதும் அபிலாஷைகள் என்பவற்றக்கு மதிப்பளிக்காமல் செயற்படுவது மீள முடியாதபடி இலங்கையை கசப்பணர்வு, நம்பிக்கையின்மை பரஸ்பர வெறுப்புணர்வு மற்றம் வன்செயலினுள் தள்ளிவிடுமென்பதை இருதரப்பினரும் மனதில் இருத்துதல் வேண்டும்.❒

பிரான்ஸில் கடந்த 21 ஏப்பிரலில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலையடுத்து, சோஸலிசக் கட்சி இரண்டாவது சுற்றில் பங்கு கொள்ளமுடியாதபடி தூக்கியெறியப்பட்டு, இனவாதத்தையும், யூத எதிர்ப்பு வாதத்தையும் தாராளமாக வாரி இறைக்கும் லூா பென் எதிர்பாராத அளவிற்கு வெற்றி பெற்றது ஐரோப்பா கண்டம் முழுவதையும் உலுப்பியிருந்தது.

அண்மைக் காலங்களாக ஐரோப்பிய நாடுகளில் தீவிர தேசிய வாதம் மேலெழுந்த வண்ணமாகவேயுள்ளது.



# பிரான்சின் ஜனாதிபதித் தேர்தலும், பாஸிசக் கட்சியின் பாரிய வெற்றியும்

-வாசுதேவன்-

டென்மார்க், நோர்வே, ஜேர்மனி, நெதர்லாண்ட், ஒஸ்ரியா, சுவிஸ், இத்தாலி, ஸ்பெயின், போன்ற நாடுகளில் அண்மைக்காலங்களில் நடைபெற்ற தேர்தல்களின் பெறுபேறுகள் இதை உறுதிசெய்துள்ளன. இறுதியாக இங்கிலாந்தில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் கூட அங்கு எதிர்காலத்தில் "ஐரோப்பியத் தேசியத் தீவிரவாத" நோய் பற்றுவதற்கான அறிகுறிகளைத் தோற்றுவித்துள்ளது. பிரஞ்சியத் தேசிய முன்னணியின் மிகப்பெரிய வெற்றி அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் பற்றிப்படர்வதற்கான வாய்ப்புகள் உண்டென்பதை இலகுவில் மறுக்க முடியாது.

இரண்டாவது உலகயுத்தத்தின் பின்னர் முதன்முறையாக பிரஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சி படுமோசமான தோல்வியைச் சந்தித்திருக்கின்றது. கடந்த ஐந்து வருடங்களாக சோசலிசக்கட்சி அமைத்த மந்திரி சபையுடன் கூட்டிணைந்திருந்து, தொழிலாளர் சார்ந்த போராட்டத்தைக் கை விட்டுவிட்டதென்ற குற்றச்சாட்டு அண்மைக்காலங்களில் இக்கட்சியின் மீது வைக்கப்பட்டிருந்தது. 5 வீதத்திற்கும் குறைவான வாக்குகளைப் பெற்றதால், தேர்தல் செலவிற்கான அரசின் நிதியுதவியைக் கூடப் பெற முடியாத நிலையிலும், உறுப்பினர்களை அதிக அளவில் இழந்த நிலையிலும், பெரும் நிதி நெருக்கடிக்கு முகம் கொடுக்கமுடியாமல் தடுமாறும் இக்கட்சியின் எதிர்காலம் ஒரு கேள்விக்குறியேயாகும்.


அபிப்பிராய வாக்கெடுப்பு நிறுவனங்களையெல்லாம் ஏமாற்றுமளவிற்கு அமைந்த தீவிர வலதுசாரிக்கட்சியான "தேசிய முன்னணி" யின் வெற்றி பிரான்ஸின் அரசியலில் பேரதிர்வையும், பல வருடங்களாக கண்டிராத அளவிலான மக்கள் எழுச்சி ஆர்ப்பாட்டங்களையும் உருவாக்கியிருந்தது. முதலாவது சுற்றுத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட சில

கணங்களிலேயே பிரான்ஸின் பல நகரங்களில் சுயமாகவே, எவ்வித முன்னேற்பாடுகளுமின்றி வீதிகளில் இளைஞர்கள் "தேசிய முன்னணி" க்கெதிராகவும் அதன் தலைவர் லூ பென் க்கெதிராகவும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் ஈடுபட்டனர். அரசியலில் பெரும் அக்கறையற்றவர்கள் என வருணிக்கப்படும் பிரஞ்சு இளைஞர்களும், மாணவர்களும் பல்லாயிரக்கணக்கில் வீதிகளில் ஜனநாயகத்தையும், பிரஞ்சு நாட்டின் பாரம்பரிய பல்லின சமுகத்தின் முக்கியத்தையும் கூவியவாறு வலம் வந்தார்கள்.

தீவிர இடதுசாரிக் கட்சியான "தொழிலாளர் போராட்ட" த்தின் தலைவி ஆர்லெத் லகியேர் தவிர, அனைத்து அரசியல் கட்சிகளும் "தேசிய முன்னணி" அதிகாரத்தைக் கைப்பற்றுவதைத் தவிரப்பதற்கு இரண்டாவது சுற்றுவட்டத்தில் முன்னைய ஜனாதிபதியான ஜக் ஷிராக்குக்கே வாக்களிக்குமாறு வேண்டினர். ஆர்லெத் லகியேரின் இந்த முடிவானது, சிந்தனையற்ற முரட்டுத்தனமான முடிவென்றும், இம்முடிவு தேசிய முன்னணியின் வாக்குவீதத்தை உயர்த்துவதற்கு மட்டுமே உதவுமென "புரட்சிகர கம்யூனிஸ்ட் லீக்" என்னும் இன்னொரு தீவிர இடதுசாரிக் கட்சி கருத்து வெளியிட்டது.

பிரஞ்சுத் தேசிய முன்னணியின் தலைவர் லூ பென்னின் இனவாத, யூத எதிர்ப்புவாதக் கருத்துகளும், இம்மனிதரின் பாசிசப் போக்கும் வெளிப்படையாக முன்வைக்கப்படாது, அவரின் கட்சிப் பிரச்சாரம் அவரை ஒரு சிறந்த நாட்டுப்பற்றாளராகவே மாற்றியுள்ளது. தீவிர பொய் எதிர்ப் பிரச்சாரத்திற்குத் தான் பலியாகிக் கொண்டிருப்பதாகக்கூறி பலரின் அனுதாபத்தையும் இக்கட்சி தேடிக்கொண்டுள்ளது. அதுமட்டுமன்றி, மாறி மாறி ஆட்சியிலிருந்த கட்சிகளின் அரசியல் போக்குகள், ஊழல்நடவடிக்கைகள் என்பன இக்கட்சிகளிலான நம்பிக்கையை இழக்க வைத்துள்ளதானது தேசிய முன்னணியின் முக்கியத்துவத்தை அதிகரித்துள்ளது. வழமையான வலது, இடது சாரிக்கட்சிகளினால் ஏமாற்றம் அடைந்தவர்களில் பலர் தேசிய முன்னணியில் இணைந்தது இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். தேசிய முன்னணியின் ஆதரவாளர்கள் பிரான்ஸில் குடியேறியுள்ள வெளிநாட்டவர்களுக்கான எதிர்ப்பாகவே தங்களது ஆதரவை வெளிப்படுத்துகின்றார்கள். அவர்களுடன் உரையாடும் போது அவர்கள் முன்வைக்கும் சில கருத்துக்கள் பின்வருமாறு: குற்றவியற் செயல்களில்ஈடுபடுபவர்களில் அனேகமானவர்கள் வெளிநாட்டவர்களும் அவர்களின் சந்ததியினருமே.

75 வீதத்திற்கும் மேற்பட்ட சிறைக்கைதிகள் வெளிநாட்டவர்களே. வெளிநாட்டவர்களின் காட்டு மிராண்டித்தனங்களும், அவர்களின் வன்செயல்களும் பிரான்ஸில் அமைதியின்மையையும், சமூகப் பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்தியுள்ளது. வெளிநாட்டவர்களை நிர்வகிப்பதற்குப் பிரஞ்சு அரசு செலவிடும் பணத்தொகையானது, சகல பொருதார நெருக்கடிகளையும் பிரான்சில் தீர்த்து வைப்பதற்குத்




"அரசியலில் பெரும் அக்கறையற்றவர்கள் என வருணிக்கப்படும் பிரஞ்சு இளைஞர்களும், மாணவர்களும் பல்லாயிரக்கணக்கில் வீதிகளில் ஜனநாயகத்தையும், பிரஞ்சு நாட்டின் பாரம்பரிய பல்லின சமுகத்தின் முக்கியத்தையும் கூவியவாறு வலம் வந்தார்கள்."

தாராளமாகப் போதுமானதாகும். நாட்டவர்கள் பொருளாதாரப் பிரச்சனைகள் காரணமாக பிரான்ஸில் வந்து அரசியல் அகதிகள் என்ற போர்வையில் நாட்டை ஆக்கிரமிக்கிறார்கள். வெளிநாட்டவர்களும், குறிப்பாக பிரான்ஸில் குடியேறியுள்ள வடஆபிரிக்க இஸ்லாமியக் குடும்பங்களும் இந்நாட்டின் சமூகநல வசதிகளை அனுபவித்து நாட்டைக் குட்டிச்சுவராக்குபவர்கள். வெளிநாட்டவர்கள் வரிகட்டுவதில்லை. வேலையற்ற வெளி நாட்டவர்க்கு உதவிப்பணம் கொடுப்பதற்கு வேலை செய்யும் பிரஞ்சுக்காரர்களின் சம்பளத்தில் வெட்டப்படுகின்றது. இவ்வாறானவர்கள் பிரஞ்சுக்காரர்களைப் போன்று அனைத்து உரிமைகளையும் சம அந்தஸ்த்துடன் அனுபவிக்கிறார்கள் என்றாலும், இவர்கள் இந்நாடு சார்ந்து எவ்விதக் கடமைப்பாட்டு உணர்ச்சியுமற்றவர்களாக இல்லாதிருப்பது மட்டுமல்லாது, இந்நாட்டில் இவர்கள் வெறுப்பைக் காட்டுகிறார்கள். வெளி நாட்டுக்காரர்களின் ஆக்கிரமிப்பால் பிரஞ்சுக்காரர்கள் தங்களது சொந்த நாட்டிலேயே ஒரு நாள் அந்நியராக்கப்படுவார்கள்.

இதிவ்வாறிருக்க, தேசிய முன்னணியின் தேர்தல் பிரச்சாரம் முன்வைக்கும் அரசியல் சீர்திருத்தங்களில் சில பின்வருமாறு : ஐரோப்பிய ஒன்றிணைப்பிலிருந்து பிரான்ஸைப் பிரித்தெடுத்தல், யூரோவைக் கைவிட்டு மீண்டும் பிராங்கைத் தேசிய நாணயமாக்கல், இராணுவச்செலவிற்கான நிதி ஒதுக்கீட்டை இரட்டித்தல், ஐரோப்பியரல்லாத வெளிநாட்டவர்களில் அனேகமானவரை நாடுகடத்தி அவரவர் சொந்த நாடுகளுக்குத் திருப்பியனுப்புதல், அனைத்துத் துறைகளிலும் பிரஞ்சுக்காரர்களுக்கு முன்னுரிமை வழங்குதல், குடியுரிமைச் சட்டங்களை மாற்றியமைத்து வெளிநாட்டவர்கள் பிரஞ்சுப் பிரஜைகளாவதைத் தடுத்தல், தேசிய உணர்வை அதிகரிக்கும் வகையிலாக பாடத்திட்டங்களை மாற்றியமைத்தல், போன்ற இன்ன பிற வெகுஜனக் கவர்ச்சியும், தேசிய வெறியும் கொண்ட திட்டங்களாகும்.

> "தேசிய முன்னணியின் தேர்தல் பிரச்சாரம் முன்வைக்கும் அரசியல் சீர்திருத்தங்களில் சில பின்வருமாறு : ஐரோப்பிய ஒன்றிணைப்பிலிருந்து பிரான்ஸைப் பிரித்தெடுத்தல், யூரோவைக் கைவிட்டு மீண்டும் பிராங்கைத் தேசிய நாணயமாக்கல், இராணுவச்செலவிற்கான நிதி ஒதுக்கீட்டை இரட்டித்தல்..."



'தேசிய முன்னணி'யின் எதிர்பாராத வெற்றிக்கான காரணங்களாக பின்வரும் விடயங்கள் அரசியல் ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகின்றன: உள்ளூர்ப் பாதுகாப்பின்மையும், வன்செயல்களும் அதிகரித்தமை, குடிவரவு சம்பந்தப்பட்ட விடயங்களில் தொடர்ச்சியான அரசாங்கங்கள் உறுதியான நடவடிக்கைகளை எடுக்காமை, வேலையின்மையின் அதிகரிப்பு, ஏழை-பணக்காரருக்கிடையிலான இடைவெளி அதிகரித்தமை, நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் பலாபலன்கள் சமமான முறையில் பங்கிடப்படாமை போன்றவையாகும்.

இவை தவிர, கடந்த ஆண்டு செப்டம்பர் நியூயோர்க்கில் நடைபெற்ற பயங்கரவாதச் சம்பவங்களும், அதனைத் தொடர்ந்து இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் மீதான மேற்குலகின் அச்சமும் பிரான்ஸை விட்டு வைக்கவில்லை. இப்பயங்கரவாத நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டவர் என்ற அடிப்படையில் வடஆபிரிக்காவை அடியாகக் கொண்ட பிரஞ்சு இஸ்லாமியப் பிரஜை ஒருவரும் கைது செய்யப்பட்டது யாவரும் அறிந்ததே. பல இலட்சக்கணக்கான இஸ்லாமியர்கள் வாழும் தேசமான பிரான்ஸில் இஸ்லாமின் மீதான பயத்தை அண்மைக்காலத்திய சம்பவங்கள் அதிகரித்துள்ளன. மேற்குலகின் சகிப்புத்தன்மை நிரம்பிய யூதயோ-கிறிஸ்துவ நாகரீகமும் இஸ்லாமும் ஒருமித்து ஒற்றுமையுடன் வாழ்தல் அசாத்தியமானதென்ற கருத்து

ஐரோப்பா முழுவதும் சாதாரணமாகி வருவதும், இதன் காரணமாக இஸ்லாமியரை அவரவர் நாட்டுக்கே அனுப்பிவிடுதல் வேண்டுமென்று கூக்கிரலிடும் தீவிரவாதக்கட்சிகளுக்கு ஆதரவு கிடைப்பதும் ஆச்சரியப்படக் கூடிய ஒன்றல்ல.

பலஸ்தீன-இஸ்ரேலிய யுத்தம் மூர்க்கமடைந்திருக்கும் இவ்வேளையில், பலஸ்தீனருக்காதரவான அரபு இஸ்லாமியர்களால் பிரான்ஸில் வாழும் யூதர்களுக்கெதிரான வன்செயல்கள் அண்மைக்காலமாக கட்டவிழ்த்து விடப்பட்டதானது, மத்திய கிழக்குப் பிரச்சினை தமது நாட்டுக்குள் நகர்த்தப்பட்டு விட்டதோ என்ற அச்சத்தை பிரான்சில் உருவாக்கியுள்ளதும் உண்மையே. மேலும், ஐரோப்பிய ஒருங்கிணைப்பில் அதிருப்தியடைந்த, பல நூற்றாண்டு காலமாகப் புழக்கத்தில் இருந்த பிராங் நாணயத்தின் இழப்பை எண்ணி வருந்துகின்ற, குறிப்பாக வயதில் முதிர்ந்த, பிரஞ்சுக்காரர்களில் ஒரு பகுதியினரும் இவற்றிற்கெல்லாம் எதிரான தேசிய முன்னணிக்கு வாக்களித்துள்ளர். கிழக்கெல்லைப் பிரதேசங்களில் இக்கட்சியீட்டிய பாரிய வெற்றி இதைத் தெளிவு படுத்துகின்றது.

பாரிய எழுச்சி ஊர்வலங்களும், மாணவர் போரட்டங்களும், ஜனாதிபதித் தேர்தலின் இரண்டாவது கட்டத் தேர்தலுகிடையேயான காலப்பகுதியில் நாடெங்கிலும் வெடித்து, பாசிசத்திற்கெதிரான கிளர்ச்சியாக உருவெடுத்திருந்தது. இதனையடுத்தே, 82 க்கும் அதிகமான வீத வாக்குகளால் ஜனாதிபதி ஷிராக் மீண்டும் ஐந்து வருடத்திற்குத் ஜனாதிபதியாகத் தெரியப்பட்டார். இத்தடவையும் அண்ணளவாகப் 18 வீத வாக்குகளைத் தேசிய முன்னணி பெற்றிருப்பது திருப்தி தரும் செய்தியொன்றல்ல. வேறுவழியின்றி பாசிசவாதிகளிடமிருந்து குடியரசைக்காப்பாற்றும் ஒரே நோக்கில் ஷிராக்குக்கு வாக்களித்த சோசலிட்டுகளும், மற்றும் தீவிர இடதுசாரிகளும் அடுத்த தமது போராட்டம் ஷிராக்கிற்கெதிரானதென அறிக்கை விட்டவண்ணமுள்ளனர். அடுத்த மாதம் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல்களில் மீண்டும் பாராளுமன்றத்தை இடதுசாரிகள் கைப்பற்றுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ள போதும், அவர்களுக்கிடையேயான பிளவுகள் தோல்வியைத் தழுவ வைத்துவிடும் சாத்தியக் கூறுகளும் நிறையவே உள்ளன.

எது எவ்வாறிருப்பினும், இதுவரை காலமும் தம்மைச் சோசலிஸ்ட்டுக்கள் என வரையறுத்தவாறே, வலது சாரிப்போக்கான அரசியலை முன்னெடுத்த பிரஞ்சு சோசலிஸக் கட்சி தன்னைப் புனரமைப்பதற்கும், மக்களிடம், குறிப்பாக தொழிலாளர்களிடம் இழந்து போன செல்வாக்கை மீளப்பெறவும் தனது எதிர்கால அரசியல்-தேர்தல் திட்டங்களைத் தெளிவான முறையில் இடது பக்கம் நகர்த்தும் என்பதில் சந்தேகமில்லை. இதுபோன்றே, வலதுசாரிக்கட்சிகளும் தேசிய முன்னணியின் வாக்குகளைக் கவருமுகமாக தமது அரசியல்-தேர்தல் திட்டங்களை மேலும் வலது பக்கமாக நகர்தியே ஆக வேண்டிய தேவையுள்ளது. அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலின் முன்னாக அமைக்கப்பட்டுள்ள இடைக்கால வலதுசாரி அரசாங்கம் தீர்க்கமான, உறுதியான நடவடிக்கைளை முன்னெடுத்து மக்களைக் கவர முயற்சிக்கும் என்பதும் வெளிப்படையான உண்மையே. மொத்தத்தில், பிரான்ஸில் அரசியல், சமுக நெருக்கடிகள் ஜனாதிபதித் தேர்தலின் பின் இன்னமும் அதிகரிக்கும் வாய்ப்புகள் நிறைய உண்டென்பது வெளிப்படையான ஒன்றாகும்.❐

உயிர்நிழல் (06.05.2002)

*"பல இலட்சக்கணக்கான இஸ்லாமியர்கள் வாழும் தேசமான பிரான்ஸில் இஸ்லாமின் மீதான பயத்தை அண்மைக்காலத்திய சம்பவங்கள் அதிகரித்துள்ளன. மேற்குலகின் சகிப்புத்தன்மை நிரம்பிய யூதயோ-கிறிஸ்துவ நாகரீகமும் இஸ்லாமும் ஒருமித்து ஒற்றுமையுடன் வாழ்தல் அசாத்தியமானதென்ற கருத்து ஐரோப்பா முழுவதும் சாதாரணமாகி வருவதும், இதன் காரணமாக இஸ்லாமியரை அவரவர் நாட்டுக்கே அனுப்பிவிடுதல் வேண்டுமென்று கூக்கிரலிடும் தீவிரவாதக்கட்சிகளுக்கு ஆதரவு கிடைப்பதும் ஆச்சரியப்படக் கூடிய ஒன்றல்ல."*

# அடையாள அரசியல் நெருக்கடிகள் பாலஸ்தீனில் தொடங்கி...



எச். பீர்முஹம்மது

"அடையாளம் ஒன்று இருக்கும் போது நம்பிக்கை ஒன்று பிறந்து வருகிறது நம்பிக்கைகளற்ற அடையாளங்கள், அடையாளங்களற்ற நம்பிக்கைகள் தவிர எஞ்சுவது வேறொன்றுமில்லை நாம் நம்பிக்கையற்ற அடையாளத்துக்குள் இருக்கும் நாளே மகிழ்ச்சியானதாகும்."

வாழ்க்கையின் நம்பிக்கை, அடையாளம் எப்போதுமே தன்னை ஒன்றுக்கொன்று முந்தி கொள்வதாக அறிவிக்கிறது. நாம் அதற்குள் இயங்காமல் வேறென்ன செய்ய முடியும்?

நடைமுறை வாழ்வு சார்ந்து பல்வேறுபட்ட அடையாளங்கள் இயங்குகின்றன. சாதீய, மதம், மொழி, நில, பால் போன்ற அடையாளங்கள் அங்கிங்காக ஊடு பாவுகின்றன. அவை அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரு வலைப்பின்னலை உருவாக்குகின்றன. இவைகளிருந்து அவை எழுந்து வெளி சார்ந்து உலவுகின்றன. வரலாற்று ரீதியிலான காலத்தை நோக்கி அவையெல்லாம் பின் தள்ளலை நிகழ்த்தும் போது தனக்கான இருப்பை நிர்ணயித்து கொள்கின்றன. வரலாறு குறித்ததான பாசில் டேவிட்சனின் பார்வை வித்தியாசமாக தெரிகிறது.

"வரலாற்றை வேறு வார்த்தைகளில் சொல்வதானால் அது ஒரு கணக்கீட்டு இயந்திரம் அல்ல, இது மனத்தையும், பிம்பங்களையும் மறக்க முடியாதபடி எடுத்து கொள்கிறது. பல்வேறுபட்ட மக்கள் கலாசாரங்களின் பதிலுறவை உடயக்கமாக எடுத்து கொள்கிறது. நுண்மையான பருப்பொருள் உறவுகளையும், இளைத்து போன பொருளாதார காரணிகளையும் உள்ளடக்கி இருக்கிறது."

வரலாற்றின் அடையாளம் குறித்தான அவருடைய பார்வை இவ்வாறாக இருக்கிறது. மக்கள் கலாசாரங்களின் பதிலுறவாக பார்க்கிறது. 'அடையாளம்' தன்னை எப்போதுமே வரலாற்று ரீதியாக நிலைப்படுத்தி கொள்ள விரும்புகிறது. அது சார்ந்த எந்த இனமும் தன்னை வரலாற்று ரீதியாகவே பார்க்கும். இந்திய சாதீய அமைப்பாக இருந்தாலும் சரி, இலங்கை தமிழ் இனமாக இருந்தாலும் சரி தன்னை மேற்கண்ட முறையிலேயே நிலைப்படுத்திக் கொள்ள விரும்புகிறது. தனி மனிதன் - திரள் இரண்டும் சார்ந்த இயக்க ரீதியிலான உறவுகளே அடையாளத்தை நிர்ணயித்து கொள்ள பெரிதும் உதவுகின்றன. மார்க்ஸ் அதை உற்பத்தி உறவுகளின் அடிப்படையில் பார்த்தார். சமூக அடிக்கட்டுமானமும் அதை நிர்ணயிப்பதின் காரணியாக

விளங்குவதாக காண்பார். அடையாளம் குறித்ததான டெல்யூஸ் - காட்டயின் பார்வை வித்தியாசமானது. பிரெஞ்சு உளப்பகுப்பாய்வாளர்களான அவர்கள் மனித சமூகத்தை உளப்பகுப்பாய்வின் அடிப்படையில் பார்த்தார்கள் அங்கங்களற்ற உடலே (மண்ணின் மீது தன்னின் வரைவை பொறித்துக் கொள்கிறது. மறு பொறித்தன் போது தன்னை பயச்சிக்கலுக்குள் உட்படுத்தி கொள்கிறது. மோதல்கள் இந்த இடத்தில் தான் ஆரம்பிக்கின்றன. உடல் இயந்திரம் ) தன்னை எப்போதும் அலைவுக்குள் ஆட்படுத்தும். ஏங்கல்ஸின் . அதிகாரம் குறித்தான பார்வையை இதனோடு பொருந்திப் பார்ப்பது அவசியமாக இருக்கும். அது 'பிளவுபடாதது,' துண்டாக்க முடியாதது. அதில் ஒட்டிக் கொள்ளும் எதுவும் தன்னை துண்டாக்கி கொள்ள முடியாது. அடையாளம் சார்ந்து இயங்கும் எதுவும் தன்னை குறிப்பீடுகள் சார்ந்து இயக்கி கொள்கிறது. இதனின் திரட்சியே பெரும்பான்மை சார்ந்த கருத்து வலுப்பெற அடிப்படையாகிறது. அங்கங்களற்ற உடல்கள் மண்ணில் பதிந்து அடையாளமாக மாறிய பிறகு தன்னை பிரதேச ரீதியாக பாகுபடுத்தி கொள்கின்றன. இந்த பிரதேசப்படுத்தல்கள் ஒன்றின் மேலாதிக்கமாக உருவெடுக்கின்றன. உலக அளவில் பிரதேசப்படுத்தல்களுக்காக பல்வேறு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. வந்து கொண்டிருக்கின்றன. *20*-ம் நூற்றாண்டில் நடந்த ஜெர்மன் இன அடையாள நிர்ணயிப்பு போக்கு பெருந்துயரத்தை யூத இனமக்கள் மீது உண்டாக்கியது. இனவாதம் அல்லது அடையாளப்படுத்தல் தன்னை ஓர் அரசதிகார வடிவில் மேற்கொள்ளும். ஹிட்லர் சொன்னார் "இந்த ஜெர்மனிக்கு இது ஒரு தக்க தருணம் என்று அவர்களிடம் கூறுங்கள். நான் இதற்கு பொருத்தமானவன் என்று கருதியே என்னை தேர்ந்தெடுத்துள்ளனர். நம் இனத்தை நிறுவுவது தவிர வேறெதுவும் இந்த நேரத்தில் செய்ய முடியாது.' மேற்குறிப்பிட்ட வடிவில் தான் அடையாளம் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு அது மற்ற இனங்கள் மீதான நெருக்குதலை மேற்கொள்ளும் அதுமாதிரியே யூதவாத போக்கையும் அது இஸ்ரேலை மையமாகக் கொண்டு வெளிப்படுத்தும் அடையாள நெருக்கடியையும் விரிவாக காண வேண்டியதிருக்கிறது. அரேபிய மண்டலம் என வரலாற்று காலத்தில் அறியப்பட்ட தற்போதைய இஸ்ரேல் பல்வேறுபட்ட இனக்குழு மக்களின் வாழ்க்கை சூழலோடு ஆரம்பிக்கிறது. கி.மு. *3500*-ல் அமோரியா இனக்குழு மக்கள் தங்களின் நிறுவுதலை மேற்கொள்கிறார்கள். ஆபிரஹாமின் வருகைக்கு பிறகு யூதமதம் உருவாக்கப்படுகிறது. இதன் பின்னர் அதனை தழுவிய பல்வேறு இனக்குழுக்களை சார்ந்த மக்கள் தங்களை அதனோடு அடையாளப்படுத்தி கொள்கிறார்கள். குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் மோஸே என்ற தூதுவர் மூலமாக தனக்கான நியதிகளை ஏற்படுத்தி கொள்கிறார்கள். இதன் பிற்பாடு உலகின் பல்வேறு பகுதிகளுக்கான நகர்தலை நோக்கி தன் வாழ்வை செலுத்துகிறார்கள். ஒரு குறிப்பிட்ட இனம் எப்படி தன்னை வரலாற்று ரீதியாக பிளவுப்படுத்தி கொள்கிறது என காண முடிகிறது. கி.மு. *932*ல் சாலமன் அரசின் மரணத்துக்கு பின் அந்த பகுதியானது இரு பிரிவாக அறியப்படுகிறது. வடக்கிருந்த பகுதி இஸ்ரேல் என்று தெற்கிருந்த பகுதி யூதநாடு என்றும் பெயடப்படுகின்றன. வரலாற்றின் வழக்கமாக படையெடுப்புகள் ஆக்கிரமிப்புகள் அதையும் விட்டு விடவில்லை. பல்வேறுபட்ட கால கட்டத்திற்குள் அவை நடந்தேறின. இதன் பின்னர் அந்த இனமானது தனக்கான இருப்பிடத்தை பரவலாக்கம் செய்து கொண்டது. *1862*ஆம் ஆண்டு மோஸஸ் ஹெஸ் என்பவரால் "ரோமும் ஜெருசேலமும்" என்ற நூல் வெளியிடப்பட்டது. இதன் முதலாக யூத தேசியம் குறித்தான பார்வை வெளிப்பட்டது. அதற்கான திரளும் ஏற்பட்டது. புதிய இன அடையாளத்திற்கான ஒரு முன் வடிவும் இதன் மூலம் தான் வெளிப்படுத்தப்பட்டது. *1896*-ம் ஆண்டில் தியோடர் ஹெர்ஸ் என்பவர் யூதநாடு என்ற புத்தகத்தை வெளியிட்டார். இதனை தொடர்ந்தே யூத இனத்துக்கான தேசிய இருப்பிடம் என்ற கருத்துருவம் தோன்றியது.

1897 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27ஆம் தேதி தியோடர் ஒரு மாநாட்டை கூட்டினார். சிதறிகிடந்த அமைப்புகள் அதன் மூலமாக ஒன்று சேர்ந்தன. இதன் வழியாக யூதவாதம் உருவாக்கப்பட்டது. இந்த மாநாட்டின் மூலமாக பின்வரும் செயல் திட்டங்கள் முன் வைக்கப்பட்டன.


1. யூத விவசாயிகளும், தொழிலாளிகளும் பாலஸ்தீனத்தில் குடியேறுவதை தக்க வழிகளில் மேம்படுத்த வேண்டும்.

2. ஒவ்வொரு நாட்டின சட்டங்களும் ஏற்றாற்போல ஸ்தல மற்றும் சர்வதேச அளவில் தகுந்த அமைப்புகளை உருவாக்கி இந்த ஸ்தாபனத்தை ஏற்படுத்துவது, அனைத்து யூதர்களையும் ஒன்றிணைப்பது.

3. யூத தேசிய மன உணர்வையும், உணர்வையும் பலப்படுத்துதல்.

4. யூதவாதத்தின் நோக்கங்களை அடையும் பொருட்டு எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் அரசாங்கத்தின் சம்மதத்தைப் பெற ஆரம்ப நடவடிக்கைகள் எடுப்பது.

தொடர்ந்து பல்வேறுபட்ட நடவடிக்கைகள் இதனை சார்ந்து எடுக்கப்படுகின்றன. அவை அவர்களின் வாழ்வனுபவ வரலாற்று நீரோட்டமாக பார்க்கப்பட்டது. அக்கால கட்டத்தில் பிரிட்டனின்



காலனியாதிக்கம் தன்னுடன் இதற்கான துணையை ஏற்படுத்திக் கொண்டது. துருக்கியின் கட்டுப்பாட்டில் இருந்து பிரிட்டனின் ஆளுகைக்கு உட்பட்டவுடன் அதற்கான உருவாக்க வரைவு ஏற்படுத்தப்பட்டது. பல்வேறு தருணங்களில் நிர்ணயிக்கப்பட்ட இடமான பாலஸ்தீனம் குடியேற்றமாகியது. சிறுதிரள், பெருந்திரளாக மாறியது. ஏற்கனவே வாழ்ந்து கொண்டிருந்த பாலஸ்தீனியர்கள் அழிக்கப்பட்டனர் அல்லது அலைக்கழிக்கப்பட்டனர். ஓர் உள் கட்டமைப்பாக அவர்களுக்கு அது தென்பட்டது. சுய இருப்பிடமே தீவாக மாறியது வாழ்விருந்து அந்நியப்பட்ட பாலஸ்தீன் மக்கள் தங்களுக்குள்ள சுய நிர்ணய உரிமையை வகுத்து கொள்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டது. பல்வேறுபட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் அதனை தொடர்ந்ததான ஐ.நா. சபையின் நடவடிக்கையின்

பலனாக 1948 ஆம் ஆண்டு இரு பிரதேசங்கள் (இஸ்ரேல், பாலஸ்தீன்) வகுக்கப்பட்டன. அமெரிக்க ஏகாதிபத்தியமே இதற்கான முழு வீச்சில் இறங்கியது என்பது அறியப்படாத ஒன்றாக இருந்து வருகிறது. பிரதேச கூறுபாடுகளை தொடர்ந்து இன அழிப்பு, தூய்மைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் சமகாலம் வரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஓர் இனம் தன்னை நிறுவுவதற்கான அடையாளமாக தேசிய வாதத்தை வைக்கிறது என்றார் எட்வர்ட் செய்த். தன்னுடைய இன்ப்றன்ழ்ங் ஹய்க் ஐம்ல்ங்ழ்ண்ஹப்ண்ள்ம் என்ற நூல் ஏகாதிபத்தியத்திற்கும், தேசியவாதத்திற்கும் இடையே உள்ள தொடர்பை ஆராய்கிறார். தேசியவாதம் எல்லா வித்தியாசப்படுத்த முடியாத இனங்களை வசைப்படுத்துகிறது. அது பொதுவான வரலாற்றின் கீழ் இருக்கும் மக்களின் மதம், மொழி ஆகியவற்றை அந்நியப்படுத்தி, ஆக்கிரமிப்பு செய்வதன் வழியாக தன்னை அடையாளப்படுத்தி கொள்கிறது. பாலஸ்தீனர்களுக்கு எதிரான யூத இனங்களின் ஆக்கிரமிப்பு நடவடிக்கை மேற்கண்டவற்றோடு நன்றாகவே பொருந்துகிறது. இனவாதம் வலுப்பெறும் போது அங்கே முதலாளித்துவமும் வலுப்பெறுகிறது. அது வர்க்க பிரிவினையை சிக்கலுக்குள்ளாக்கும். யூதவாதம் வலுப்பெற்றதற்கு பின் ரஷ்யாவில் ‘பண்ட்’ என்ற அமைப்பு யூத தொழிலாளர்களுக்காக

இருந்தது. அது யூத தேசியத்திற்காக முதலாளி அமைப்புடன் சேர்ந்து வர்க்க போராட்டம் பற்றி கேள்வி எழுப்பியது. இதற்கு பதிலளிக்கும் வகையில் லெனின் பின்வருமாறு கூறினார்.

“யூதர்களில் உழைக்கும் மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் தாம் பெரும்பான்மையினராக இருக்கிறார்கள். அவர்கள் நமது சகோதரர்கள் நம்மை போலவே அவர்களும் முதலாளிகளால் ஒடுக்கப்படுகிறார்கள். சோசலிசத்திற்கான போராட்டத்தில் அவர்கள் நமது தோழர்கள் யூதர்களில் நிலப்பிரபுக்கள், சுரண்டும் முதலாளிகள் ஆகியோர் இருக்கின்றனர். ரஷ்யர்களிடையே அனைத்து நாட்டு மக்களிடையே இருப்பது போல் யூதர்களிடையேயும் இவர்கள் இருக்கிறார்கள். பணக்கார ரஷ்யர்களைப் போல அனைத்து நாட்டு பணக்காரர்களை போல பணக்கார யூதர்கள், தொழிலாளிகளை ஒடுக்கவும் நசுக்கவும், சுரண்டவும், தொழிலாளி வர்க்கத்தை உடைக்கவும், கூட்டணி அமைத்து கொள்கிறார்கள்.”

இங்கு தான் அடையாளச் சிக்கல்கள் எழுகின்றன. தன்னை ஓர் அடையாளமாக அறிவிக்க முடியாது என்பது தெகிறது. இன தூய்மைவாதம் ‘மற்ற’ இனத்தை பிரதேசதகர்ப்பு செய்வதன் மூலம் நிறுவி கொள்கிறது. மற்றதை தகர்ப்பு செய்வதன் மூலம் தன்னை மறு கட்டமைப்பு செய்து கொள்கிறது. இதனை மறுபிரதேசப்படுத்தல் என்றார் டெல்யூஸ். உடல் இயந்திரத்தின் சுழற்சியாக தன்னை இனவாதம் அடையாளப்படுத்தும். (நம் நிறம், நம் இரத்தம், நம் உடை) உடல் என்றுமே ஒருமைப்படுத்தப்படுவதில்லை. அது பல்வேறுபட்ட பதிவுகளாக தன்னை வெளிப்படுத்தி கொண்டு இயங்குகிறது. எல்லா இனங்களின் அடையாளங்களும் இதனின் நீட்சியாகவே தொடங்குகின்றன. பால்கன் பிரதேசத்தில் செர்பிய இனம், துருக்கியின் குர்திஷ் இனம், இலங்கையின், சிங்கள இனம், பிலிப்பைனின் தேசிய இன மோதல்கள், ஆப்பிரிக்காவின் வெள்ளை இனம், அமெரிக்காவின் இண்டியானா பிரதேசம் அல்ஜீரியாவின் கறுப்பு இனங்கள், அயர்லாந்து போராட்டங்கள், இந்தியாவின் சாதீய மோதல்கள் இவ்வாறாக இனங்களும், நிலங்களும் தன்னை முந்தி கொண்டு இயங்கி வருகின்றன. “ஜெர்மனி”ன் நாஜிக்களால் யூத இனம் மற்றதாக அறிவிக்கப்பட்டபோது பாலஸ்தீனத்தில் அரேபியர்கள் மற்றதாக அவர்களுக்கு மாறினார்கள். பூடானில் புத்தர்கள் மற்றதாக மாறிய போது இலங்கையில் திருப்பம் சார்ந்த எதிர்மாறலாக இருக்கிறது. பல்வேறுபட்ட தீவுகளாக பதிவை நிலைப்படுத்த முடியாத அங்கங்களாக இவை சிதறிக் கிடக்கின்றன.

வரலாற்றாசியர் டாயன்பீ ஒரு தடவை கூறினர். “பாலஸ்தீனம் மீதான யூத இனத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையானது நாஜிக்களிடம் அவர்கள் அனுபவித்ததை காட்டிலும் மேலாக இருக்கிறது”.

இங்கே தான் சிக்கல் எழுகிறது. ஓர் அடையாளம் தன்னை உருவகிக்க விரும்பும் போது முழு முற்றானதாக மாற்றிக் கொள்ள முடியாததாகும். எட்வர்ட் செய்த் இதையே தேசியவாதம், தேசியம், இருப்பிடம் என்றார். இவை மூன்றும் இயங்கியல் ரீதியாக தொடர்பு கொண்டுள்ளன. பாலஸ்தீனின் ஆக்கிரமிப்புகள், படுகொலைகள், செர்பியர்களின் தூய்மைவாதங்கள் இன்னும் இன்னும் அடையாளங்களை நெருக்கடிக்கு உள்ளாக்கி கொண்டே வருகின்றன. அடையாளங்களை மீறுவது சாத்தியாகுமா?

***

*peer13@asean-mail.com*

(நன்றி : திண்ணை.கொம்)

---

*"மனித உரிமைகளை உயர்த்திப் பிடிக்கவேண்டுமாயின்,அடிப்படையான மனிதகுல நீதிகளை ஆதரிக்க வேண்டுமாயின் உங்கள் பக்கமுள்ளவர்களுக்கு மட்டும் அதைக் கேட்காதீர்கள்.*
*அனைவருக்கும் அந்தஉரிமைகளைக் கேளுங்கள்,*
*நமது கலாசாரம் நமது தேசம் இவை சுட்டுகின்ற*
*விஷயங்கள் மட்டுமே சரியானவையாக இருக்குமென*
*நினைப்பது தவறு...."*

-எட்வர்ட் ஹெய்தி-

# வாசகர் நோக்கு

ஆசிரியருக்கு,

தங்களால் அனுப்பிய சமாதான நோக்கு இதழ் ஜனவரி-பெப்ரவரி 2002 உம், அதனுடன் அனுப்பிய அனைத்தும் கிடைத்தது. நன்றி.

காலத்தின் தேவை உணர்ந்து பொருத்தமான நேரத்தில் சூழ்நிலைக்கேற்றபடி கருத்துக்களையும் இனமுரண்பாட்டுச் சூழலை மாற்றி சமாதானப் பாதையில் ஒவ்வொரு பிரஜையும் அடியெடுத்து வைக்கும் மனவிருப்பினை ஏற்படுத்தி வைத்ததில் தங்களின் சமாதான நோக்கு தொடர்பான இதழ்களும் பெரும் பங்கினை ஆற்றியுள்ளது என்றால் அது மிகையாகாது.

எம்போன்ற மாணவ சமுதாயத்திற்கு கற்பதற்கு தேவையான அறிவு சார்ந்த அனைத்து விடயங்களையும் அள்ளி வருவதுடன் மானுடம் மீட்க கத்தியின்றி இரத்தம்மின்றி பேனை முனைகளால் யுத்தம் செய்திடவும் எழுத்துக்களால் எல்லோர் இதயங்களிலும் சமாதானத்தின் ஒலி முழங்கிடச் செய்திடவும் விரைந்திட்ட சமாதான நோக்கின் பெரும்பணி வாழ்க! வளர்க.

தயவு செய்து உங்கள் வெளியீடுகளை தொடர்ந்து அனுப்பி வைக்கும்படி பணிவுடன் வேண்டிக்கொள்கின்றேன்.

நன்றி

த.செல்வகுமாரி
பேராதனை வளாகம்
போராதனை

---

அன்புடன் சமாதான நோக்கு குழுவினர்க்கு,

*மனித வர்க்கத்தின் அவமானமாகவும், அழிவாகவும் விளங்கும் போர்ச்சூழலில் இருந்து மக்கள் தற்காலிகமாய் விடுபட்டு சமாதானம் எனும் தென்றலில் வாழும் நேரம் இது இந்நேரத்தில் தமிழில் அரசியல் சார்ந்த விடயங்கள் வெளிவருவது அரிது எனலாம். என்போன்ற அரசியல் விடயங்களை அறிந்துகொள்ள ஆர்வமாக உள்ளவர்களிற்கு உங்கள் சமாதான நோக்கு நூல் ஒரு வரப்பிரசாதமாகும். நான் உங்கள் சமாதான நோக்கு நூலை தொடர்ந்து பெற்று வாசிக்க விரும்புகின்றேன். எனக்கு இனி ெளிவரும் நூல்களை தயவுசெய்து அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இது பற்றிய மேலதிக விபரங்களையும் அறிய விரும்புகின்றேன். வளர்க சமாதான நோக்கு. வாழ்க ஆசிரியர்குழுவின் பணி..*

*பி.கோகுலராம்*
*34/1, விவேகானந்தா ரோட்,*
*வெள்ளவத்தை.*

---

ஆசிரியருக்கு,

சமாதானநோக்கு எனும் இதழை பார்க்க, படிக்க கிடைத்தது. உண்மையில் காத்திரமானதோர் முயற்சி என்பதே உண்மை. நானுமோர் வளர்ந்து வரும் எழுத்தாளன். அத்தோடு கிழக்குப் பல்கலைக்கழக மாணவன்.

எனவே, சமாதான நோக்கு வெளிவந்த இதழ்களை தயவாய் என் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பணிவுடன் கேட்கின்றேன்.

இதழை எதிர்பாாத்தவனாக...

எம்.பி.நளீம்
நிஹால் நெஸட்
பஸீர் வீதி,
மாவடிச்சேனை 05
வாழைச்சேனை

---

அன்புடன் ஆசிரியருக்கு,

தங்களது சமாதான நோக்கு இதழ் கிடைக்கப்பெற்றேன். எனது மனமார்ந்த நன்றிகள்.

இன்றைய சூழலில் துணிச்சலுடன் கருத்துக்களை முன்வைக்கும் விதமும், ஆக்கங்களும், காலப்பொருத்தமும் கனதியானவை.

அத்துடன் என் போன்ற பலரும் தங்களது இதழ் மூலமாக பல விடயங்களை அறிய முடிகிறது.

தங்களது பணி தொடர வாழ்த்துவதோடு தங்களது வெளியீடுகள் எதிர்காலத்தில் தொடர்ந்து கிடைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

ஏ.பி.சாஜஹான்
எஸ்.எல்.ஹாஜியார் வீதி,
வாழைச்சேனை.

அன்புள்ள ஆசிரியருக்கு,

தாங்கள் அனுப்பிய சமாதான நோக்கு கிடைக்கப்பெற்றேன். நன்றி....

சமாதான நோக்கு : 'மாற்றுக் கண்ணோட்டத்தின்' மொழி வெகு அழகாக இருந்தது. ஆனால் அதாவது 'நிச்சயமின்மையைக் கையாளுதல்' ஆங்கிலத்தில் நல்லறிவும், தமிழில் அத்தகைய ஆளுமை இல்லாத ஒருவரால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது என்பது போன்று இருந்தது. பிரிவுற்ற சலுகை, விதிமுறையான பங்காளி, பிரத்தியட்சமாகவே சிக்கல் போன்ற வார்த்தைகளை சூரியன் எவ்.எம் இலிருந்து பெற்றுக்கொண்டாரோ....

சூரியன் எவ்.எம் போன்ற பொறுப்பற்ற வானொலி நிலையங்கள் உடையோடு மலம் கழிக்கும் குழந்தை போல நடந்து கொள்ளலாம். சமாதான நோக்குக்கு அப்படி செய்ய முடியுமா...

எழுத்துப் பிழைகள் சென்ற இதழைவிட குறைவான போதும் இன்னும் தொடர்வது வருந்தத்தக்கதே... மொழிபெயர்ப்பில் கவனம் எடுப்பது நல்லது.

நல்ல முயற்சி - பணி தொடர வேண்டும்.

வாழ்த்துக்கள்

சி.எம்.நவரத்தினம்
௨௨, ஜயதிலக மாவத்தை,
நுவர எலிய

---

ஆசிரியருக்கு,

நீங்கள் அனுப்பி வைத்த சமாதான நோக்கு ஜன-பெப் 2002ம் சமாதான நோக்கு சஞ்சிகை கிடைத்தது. நன்றி.

பயனுள்ள கட்டுரைகள், தகவல்கள் தாங்கி வந்த "சாமாதான நோக்கு" பிரயோசனமாக இருந்தது. குறிப்பாக அருந்ததிரோயின் கட்டுரையில் சில மாற்றுக் கருத்துக்கள் இருந்தாலும் - அவர் எழுதிய அனேக விஷயங்கள் யதார்த்தமானவை, ஆழமானவை, தூரநோக்குடன் எழுத்பபடும் அதுபோன்ற கட்டுரைகள் சேர்த்துக்கொள்ளுங்கள்.

தொடர்ந்து சஞ்சினையை அனுப்பி உதவுங்கள்.

ஓட்டமாவடி அரபாத்
38, கிரேனியர் வீதி,
பொரளை,
கொழும்பு.

---

ஆசிரியருக்கு

தாங்கள் அனுப்பி வைத்த ஜனவரி–பெப்ரவரி 2002 க்குரிய சமாதான நோக்கு கிடைத்தது. நன்றி விபரணக் கருத்துரையும் கிடைத்துள்ளது. தழியல் கட்டமைப்பு உயர்வுபெற்றுள்ளது. எண்ணங்களுடன் வர்ணங்களும் கலந்தால் உச்ச நிலை பெறலாம். அனைத்துக கட்டுரைகளும் மூளைக்கு வேலை தருகின்றன. சமாதானத்தின் தொடர் பயணம் நீண்டதாகவம்இ நெளிவுகள்இ வளைவுகள் அற்றதாகவும் ஒளிவிட சமாதான நோக்கில் எழுத்துக்கள்இ படைப்புக்கள் அர்ப்பணிப்புடன் செயல்படுமென எதிர்பார்க்கின்றேன். கிழக்கு மாகாணம்இ மலையகம் சுமக்கும் வேதனைகளையும் தொட்டும் காட்டுங்கள்.

நன்றி

பி.புலோந்திராஜா
நிர்வாக அதிகாரி
மாகாண கல்விப் பணிப்பாளரின் அலுவலகம்
யாழ்ப்பாணம்.

ஆசிரியருக்கு,

ஐயா, தங்களது சமாதான நோக்கு சஞ்சிகை அவ்வப்போது எனது முகவரிக்கு கிடைத்து வருகின்றது. மிக்க நன்றி..

நிரந்தர பயனுறுதிவாய்ந்த சமாதானத்திற்கான செயற்பாடுகளில், தங்களது நிறுவனத்தின் காத்திரமான பங்காற்றலையிட்டு உளப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பல்வேறு கருத்தமர்வுகள், பயிற்சிப் பட்டறைகள் பற்றி அவ்வப்போது ஏனைய ஊடகங்கள் மூலமாக அறிகின்ற போதும், இங்கு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 'அரையாண்டு முறைமை' இன் கீழ் முகாமைத்துவக் கற்கைநெறியினை மூன்றாம் ஆண்டில் கற்று வருவதால், அசைய முடியாத பாடச்சுமைகளால் நேரடியாகத் தங்களது கருத்தரங்குகளில் கலந்துகொள்ள முடியாமையிட்டு மனம் வருந்துகிறேன். எனினும் சமாதான நோக்கு கிடைப்பதால் திருப்தியுற முடிகிறது.

தொடர்ந்தும் தங்கள் நிறுவனத்தின் தமிழ், ஆங்கில வெளியீடுகளைக் கிரமமாக அனுப்பி வைக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றேன்.
'நிரந்திர கௌரவமான சமாதானத்தையே நாம் வேண்டி நிற்போம்'

நன்றி

கே.ரி.பிரசாந்தன்
71, பண்டிங்ஸ் லேன்,
மட்டக்களப்பு - 30000

கனம் ஆசிரியருக்கு,

சமாதான நோக்கு என்ற சிறப்பு வாய்ந்த சஞ்சிகையில் என்னுடைய சமாதான கவிதையும் பிரசுரித்தமைக்காக எனது நன்றிகள்.

நான் தர்கா நகர் தேசிய கல்வியியல் கல்லூரியின் சமூக விஞ்ஞானத்துறையில் பயிலுநர் ஆசிரியராக பயிற்சி பெற்றுக் கொண்டிருப்பதனால் சமாதான நோக்கு என்ற சஞ்சிகை எனது துறைக்கு மிக மிக பயனுள்ளதாக அமைகின்றது. சமூகத்துடன் நெருங்கிய தொடர்புடைய துறையிலேயே சமூகத்துக்கு சேவையாற்ற முனையும் என்னைப் போன்றவர்களுக்கு சமூகத்தின் பலதரப்பட்ட விடயங்களை அள்ளித்தந்து இன்னும் எங்களை ஊக்குவித்து வழிகாட்டுகின்றது.

சமாதானம் துளிர்விட்டுள்ள இன்றைய நிலையில் சமாதான நோக்கே நீ தொடர்ந்தும் வளர வேண்டும். எங்கள் கைகளில் தவள வேண்டும்!

சமாதானப் பிரியை
எ.எல்.ஸரீனா பர்வீன்
3/5, ஜே.பி.ஒழுங்கை
5ம் குறுக்குத்தெரு,
புத்தளம்

அசிரியருக்கு, சம(ாதான) காலத்தின் கண்ணாடி


உண்மையான சமாதானத்தின் கருவை அறிவு ஜீவிகளின் மட்டத்தில் கொண்டு சேர்ப்பதற்கான அடிப்படைகளை மாற்றுக் கண்ணோட்டம் வாயிலாக வெளிப்படுத்துவதிலும், அறிவார்ந்த அரசியற் தத்துவார்த்தங்களை ஆராய்ந்தளிக்கும் பாங்கிலும் "சமாதான நோக்கு" ஆற்றும் பணி மகத்தானது. இதற்காக சமாதான முன்னெடுப்பில் ஈடுபடும் முக்கிய பிரமுக மட்டங்கள், மா.கொ.நி போன்ற அமைப்புக்களின் கருத்து நிலைகளையும் உட்படுத்துவதன் நிமித்தமாக மேற்படி அமைப்புக்களையும் தமது ஆலோசனைகளின் போது அழைப்பு விடுக்க வேண்டும். மூவின மக்களையம் சென்றடைய வேண்டிய முக்கிய சஞ்சிகை இது...

என்.ஏ.தீரன், அபாபீல்கள் கவிதா வட்டம், 01, பிரதான வீதி, சாய்ந்தமருது 1

அன்பான வாசகர்களே... உங்களிடமிருந்து எங்களின் பணி முயற்சிகளுக்குக் கிடைக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும் மிகையே... அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். வாசகர் நோக்கு எனும் பகுதிக்கு உங்களின் வாழ்த்துக்கள், நன்றிகள் என்பவற்றோடு சமாதான நோக்கில் வெளிவரும் ஒவ்வொரு ஆக்கங்களில் படிந்துள்ள கருத்துக்கள் தொடர்பாக உங்களின் ஆழமான பிரதிபலிப்புக்களையோ, அல்லது உங்களின் கட்டுரைகளையோ இணைத்துக்கொண்டால் நாம் ஒரு ஆரோக்கியமான கருத்துப் பரிமாறலையும், காத்திரமான கலந்துரையாடலையும் கொண்டுசெல்லக்கூடியதாக இருக்கும். எனவே தயவுகூர்ந்து எமது ஆக்கங்கள் தொடர்பான உங்களின் உள்ளகக் கருத்துக்களையும் பரிமாறினால் முன்னேற்றகரமான பாதையினூடே சமாதான முன்னெடுப்புகளுக்கு அழுத்தங்களை கொடுக்கலாம்.

நன்றி..

ஆ-ர்



# போரின் ஓவியம்

போரின் கைப்பிடிக்குள்ளிருந்து
சிதறுண்டு
தெறித்தலைந்த காலத்தே
அந்த ஓவியனைக் கண்டேன்
அந்திவானத் திரையில்
சூரியக் குளம்பில் தோய்ந்தெடுத்த
தூரிகையால்
தீட்டிக்கொண்டிருந்தான்
அன்றைய நாளின் ஓவியத்தை
முதலில்
தூரிகையின் நாவு நீண்ட இடமெலாம்
அங்குமிங்குமாய் கோடுகள் வீழ்ந்தன
கிழித்த கோட்டின் முடிவில்
குண்டுகளைச் சுமந்தபடி விரவும்
போர் விமானங்களை எழுதினான்
அவை வீழ்ந்தெழுந்த இடத்திலெல்லாம்
சுடர்ந்தெழுந்தது தீப்பிழம்பு

பிறகு
குருதிச் சிவப்பில்
மெல்லப் பற்றிப் பரவி எரிகிறது திரை
நேரங்கழிய
மேலிருந்து படிகிறது கரும்புகார்
இப்பொழுது
துயரம் கவிந்த முகமென விரவிப்
படர்ந்த
கருநீல இருள்
இருளத் திரையின் இடையிடையே
கண் சிமிட்டும் புள்ளிகளைத்
தீட்டுகிறான்
அவற்றில் இருக்கிறது
காபூல் நகரத்து பதுங்கு
குழிகளுக்குள்ளிருந்து
தலை நீட்டும் மழலைகளின்
பிஞ்சு விழிகள்
????

திருமாவளவன்
பின்பனிக்காலம் 2002
நன்றி : உயிர்நிழல்

Globe - Col. 10 Tel/Fax: 329739